அறைவு 04 இயம் 08 Sept 19-25, 2015

உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்

# மலைமுரசு

MALAIMURASU

Registered as a newspaper in Sri Lanka

பிரதி சனி தோறும் வெளியாகும் வார இதழ்

பக்கங்கள் : 20 விலை : 30.00

IELTS
FOR
FOREIGN
VISA
Contact
0770203201


HELLO MOBILE
WORLD
122, NC Road
Trincomalee
0777154663 - 0712674050

வடக்குக்கிழக்கு மதகுருமார் கூட்டாகக் கோரிக்கை

# பாதுகாப்புச் சபைக்கு முன் ஸ்ரீலங்காவை நிறுத்துக!



இறுதிக் கட்டப் போரின் போது நிகழ்த்தப்பட்ட மனிதகுலத்திற்கு எதிரான குற்றச் செயல்கள் உட்பட நடைபெற்ற அனைத்து குற்றசி செயல்கள் தொடர்பாக ஐக்கியநாடுகள் கட்டமைப்பிலுள்ள நடவடிக்கைப் பொறிமுறைக்கு அமைவாக உடனடி நடவடிக்கையை முன்னெடுக்கும் முகமாக ஶ்ரீலங்காவை ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபைக்கு முன்னிலைப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை தமிழர் தாயகத்திலிருந்து எழுப்பப்பட்டுள்ளது.

தமிழர் தேசமான வடக்குகிழக்கைப்' பிரதிநிதித்துவப்படுத்தும் நூற்று எழுபது மதகுருக்கள் ஐக்கிய நாடுகள் 17



பேராசிரியர் சுப்ரமணியம்

# காட்டப்பட்ட உடல் விடுதலைப் புலிகளின் தலைவருடையதல்ல!

## இந்தியக் கடற்படை சிறப்புக் கரந்தடிபடை கமாண்டோ "சிலோன்ருடே" க்குச் செவ்வி

இறுதி யுத்தத்தில் கொல்லப்பட்டதாகக் காட்டப்பட்ட விடுதலைப் புலிகளின் தலைவரின் உடல் உண்மையில் அவருடையது அல்ல என இந்தியக் கடற்படை சிறப்புக் கரந்தடிபடைக் கமாண்டோ பேராசியர் சுப்ரமணியம் செவ்வியுள்ளார்.

இலங்கையில் இருந்து வெளியாகும் ஆங்கில நாளிதழான "சிலோன் ருடே" பத்திரிகையின் சிறப்புச் செய்தியாளர் சுலோச்சனா ரம்யா மோகன் உடனான செவ்வியின் போதே இத்தகவலை அவர் வெளியிட்டுள்ளார். 17

# "இரகசியத் தடுப்பு முகாம்களை ஆராய வேண்டும்"

## மனித உரிமை அமர்வில் வண. யோகேஸ்வரன் அடிகள்

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்துள்ள இந்த வேளையில் இலங்கையில் குறிப்பாக திருகோணமலையில் படையினரால் நிர்வகிக்கப்படுவதாகக் கூறப்படும் இரகசிய முகாம்கள் தொடர்பாக ஐ.நா விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என வண. யோகேஸ்வரன் அடிகள் தெரிவித்துள்ளார். 17



# கையெழுத்துப் போராட்டம் தற்காலிகமாக நிறைவு

தமிழரின் தாயகப் பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்ட சர்வதேச விசாரணையைக் கோரும் கையெழுத்துப் போராட்டம் கடந்த வியாழக்கிழமையுடன் தற்காலிகமாக முடிவிற்கு வந்துள்ளது என போராட்டக் குழுவின் தலைவர் பேராசிரியர் வி.பி. சிவநாதன் அறிவித்து -ள்ளார். மக்களின் போராட்டமே உள்ளக விசாரணையை உடைத்தெறிந்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

ஐநா ஆணையாளரின் 17





உயர்தரப் பரீட்சையின் பின்
உன்னத ஆங்கில அறிவிற்கு!!
ENGLISH
VEAL BUSINESS COLLEGE
159 A, Sea View Road, Trinco
026 2227622 - 0770203201

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
இல 159ஏ. கடல்முக வீதி
திருகோணமலை
026 2227677
malaimurasu@hotmail.com 075 4252042

# கலப்பு விசாரணை தயாரா தமிழர்கள்?

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைச் சபையில் இலங்கை தொடர்பான அறிக்கை வெளியாகியுள்ளது.

அந்த அறிக்கை மிகச் சிறப்பாகத் திட்டமிட்டு பூகோள அரசியற் சதுரங்கத்தில் களத்தில் இருக்கும் எந்தத் தரப்பையும் மிகப் பாதிப்பிற்கு உள்ளாக்காமல் தனது கண்டு பிடிப்புக்களை வெளியிட்டுள்ளது.

அறிக்கை வெளியாகியவுடன் ஸ்ரீலங்காவின் வெளிவிவகார அமைச்சர் "நாங்கள் முன்னாள் சனாதிபதியை மின்சாரக் கதிரையில் இருந்து காப்பாற்றியுள்ளோம்" என்றவொரு கருத்தை வெளியிட்டதாக ஊடகங்கள் வெளிக்காட்டியிருந்தன.

அப்படியொரு கருத்து வெளியிடப் பட்டிருந்தால் தற்போதைய அறிக்கை அவரைக் காப்பாற்றிவிட்டது என்பதை வெளிக் காட்டுவதுடன் மின்கதிரைக்குச் செல்லும் அளிவிற்குத் தமிழர்களுக்கு எதிரான குற்றங்கள் இழைக்கபட்டிருப்பதை அக்கூற்று ஊர்ஜிதம் செய்வதாகவும் இருக்கும். அவ்வாறு குற்றங்கள் செய்தவரைக்கூட காப்பாற்றும் வலு அரசிற்கு வந்துள்ளது என்பதன் ஊடாக குற்றத்தால் இன்றும் மீள முடியாமல் துன்புறும் தமிழர்களை கைவிட்ட அறிக்கையாகவே இவ்வறிக்கை இருப்பதாக அமைச்சரின் அக்கூற்று வெளிப்படுத்திவிடும்.

அடுத்து சர்வதேச விசாரணைப் பொறிமுறையே தேவையென்ற நிலைப்பாட்டில் 2012ல் இருந்த அமெரிக்க மற்றும் அமெரிக்க நேச சக்திகள் இன்று அவர்களுக்குச் சார்பாக உருவாகியுள்ள இலங்கை அரசையும் தமது 2012ம் ஆண்டு வாதத்தையும் காப்பாற்றிக்கொள்ளத் தக்க வகையில் கலப்பு விசாரணை என்ற ஒரு வார்த்தையை இவ்வறிக்கையின் ஊடாக வெளியிட்டு தமது முகமூடிகள் கிழிவதைத் தடுத்துவிட்டன.

அடுத்து இந்திய மண்ணில் உள்நாட்டு விசாரணைக்கு எதிராக மெதுவாக மூண்டெரியத் தொடங்கிய எதிர் நெருப்பை அணைக்கத்தக்கவகையில் அறிக்கை உள்ளக விசாரணையை நிராகரிப்பதாக தெரிவித்திருப்பது இந்திய மத்திய அரசின் நலனை எவ்விதத்திலும் பாதிக்காமல் அறிக்கை வெளியானதை உறுதிப்படுத்திவிட்டது.

ஆனால் இனவழிப்புக்கு உள்ளான இனம் தான் அழிக்கப்பட்டமை தொடர்பாக விசாரிக்கும் தரப்பில் இருந்து கழற்றி விடப்பட்டுள்ளதையோ அல்லது குற்றவாளிகளாக அந்த இனத்தின் விடுதலையைப் பிரதிநிதித்துவப்படுத்திப் போரிட்ட விடுதலைப்படையும் உள்ளடக்கப்பட்டு குற்றவாளித் தரப்பில் இணைக்கப் பட்டதையோயிட்டுக் கவலைகொள்ளத் தயாராக இல்லை. கலப்பு விசாரணையில் விசாரிக்கும் தரப்பாக உள்ளடக்கப்படப்பொவது யார்? தமிழ் இனத்தை நேரடியாகப் போரிட்டு அழித்தவர்களும், அவ்வழிவிற்கான ஆயுத தொழில்நுட்ப விநியோகத்தைச் செய்தவர்களும், அவ்வாறு அழிவதைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வதற்காகச் செய்மதிப் படங்களை எடுத்துச் சேகரித்தவர்களும் தான்.

அழிக்கபட்டவர்களை உள்ளடக்காத விசாரணையாக இவ்விசாரணை உருப்பெறுமானால் இன்று யாரெல்லாம் இந்தக் கலப்பு விசாரணைப் பொறிமுறையை ஆதரித்தார்களோ அவர்கள் அனைவரும் அதனை எதிர்க்கத் தலைப்பட வேண்டும். அதனைச் செய்வதற்குத் தமிழ் அரசியல் தலைமைகள் தயாராக இருக்கின்றனவா?

இவ்வாறானதொரு நிலை ஏற்படும் பட்சத்தில் ஒப்புக்குச் சப்பாணியாக இன அழிவில் எவ்விதச் சம்பந்தமும் படாமல் குளிரூட்டப்பட்ட அறைகளில் முதலைக்கண்ணீர் உகுத்த சில தமிழர்கள் விசாரிக்கும் தரப்பாக உள்வாங்கப்பட்டால் அதனை ஏற்றுக்கொள்ளத் தமிழினம் தயாராக உள்ளதா?

அதற்கும் அடுத்த படிநிலையில் கலப்பு விசாரணைப் பொறிமுறையை உருவாக்க இன்னும் சில வருடங்கள் தேவைப்படும் பட்சத்தில் அவ்வாறு உருவாக்கப்படும் விசேட நீதிமன்றில் சாட்சிகளை வழங்க வரும் தமிழர்கள் எத்தனை ஆண்டுகளுக்குப் பின்னர் நடந்தவற்றையெல்லாம் ஞாபகப்படுத்திச் சரியாகச் சாட்சி சொல்லத் தயாராக இருப்பார்களா?

அவ்வாறு சாட்சி சொல்ல முன்வரும் தமிழர்களின் பாதுகாப்பு உண்மையிலே பலப்படுத்தப்பட்டுள்ளது என்பதை அறிந்தால் மட்டுமே சாட்சிசொல்லத் தமிழர்கள் வருவார்கள். இந்நிலையில் எது நடந்தாலும் அதனைக் கணக்கெடுக்காமல் சாட்சி சொல்லத் தமிழர்கள் தயாராகி விட்டார்களா?

கொத்துக்குண்டுகள் எரிகுண்டுகள் தொடர்பான சாட்சியம் அளிக்கும் போது அவை தொடர்பான தொழில்நுட்ப அறிவுடைய மக்களாகச் சாட்சிக் கூடத்திற்குச் செல்ல மக்கள் தயாரா?

கேள்விகள் நீண்டு செல்லும் இந்தக் கணத்திலும் நமது தமிழ்த் தலைமைகள் மாலை, மங்கள வாத்தியங்களுடன் பவனி வருவதை விடுத்து தமிழர்களைத் தயார்ப்படுத்தத் தயாரா?????

## அதிகாரப் பரவலாக்கத்தின் மூலம் பிரச்சனைகளுக்கு தீர்வு காண வேண்டும்
### - எதிர்க்கட்சித் தலைவர் -

அதிகார பகிர்வின் மூலம் காணாமல் போனோர், சிறையிலடைக்கப்பட்டோர் மற்றும் மக்களது காணிப்பிரச்சினைகள் விதவைகளது வாழ்வாதாரப் பிரச்சனைகளுக்கு தீர்வு எட்டப்பட வெண்டுமென எதிர்கட்சித் தலைவர் சம்பந்தன் அவர்கள் தெரிவித்துள்ளார்.



திருகோணமலை நிலாவெளி, பெரியகுளம் கோணேஸ்வரா மகா வித்தியாலயத்தின் விஞ்ஞான ஆய்வுகூட திறப்பு விழாவிற்குச் சிறப்பு விருந்தினராக இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் கலந்து கொண்ட போதே இக்கருத்துக்களை அவர் தெரிவித்தள்ளார்.

இவ்விழாவில் நாடாளுமன்ற உறுப்பினர் துரைரெட்ணசிங்கம், கல்வி அமைச்சர் தண்டாயுதபாணி, கல்வி வலயப் பணிப்பாளர் விஜயேந்திரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## சண்முகாவின் மாணவத் தலைவர்களுக்கு சின்னங்கள்

திருகோணமலை ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை) யில் 2015- 2016ம் வருடத்துக்கான மாணவர் தலைவர்களாக தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான இலட்சணை அணிவிக்கும் நிகழ்வு வெள்ளிக்கிழமை 18.09.2015 நடைபெற்றது.

திருகோணமலை வலயக் கல்வி அலுவலகம் உடற்கல்வி சேவைக்கால பயிற்சி ஆசிரிய ஆலோசகர் செல்வி வி.விஜயராஜா முதன்மை அதிதியாக கலந்து கொண்டு சின்னங்களை அணிவித்தார்.

அதிபர் திருமதி சு.ஜெயபாலன் தலைமையில் கல்லூரி காலை ஒன்றுகூடலில் இந்நிகழ்வு நடைபெற்றது. கல்லூரி ஒழுங்காற்றுக்குழு உறப்பினர்களும் இப்பதக்கங்களை அணிவித்து வைத்தனர். (கதிரவன்)



அபிவிருத்தியில்

## தங்கபுரம் மக்கள் புறக்கணிப்பு

அச்சுதன்

மூதூர் பிரதேச செயலகப் பிரிவிற்கு உற்பட்ட தங்கபுரம் கிராமத்தில் மக்கள் மீள் குடியேற்றபட்ட காலம் முதல் எவ்வித அபிவிருத்தி நடவடிக்கையும் இடம் பெறவில்லை எனத் தெரிவித்தள்ளனர்.

தற்பொது அரசாங்கத்தால் வழங்கப்பட்டு வரும் நிரந்தர வீட்டுத் திட்டமாவது தமக்கு கிடைக்குமா? என அங்கலாய்க்கும் மக்கள் தொடர்ந்தும் ஏமாற்றப்படுவதாகவும் தெரிவித்தனர்.

தங்கபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளர் யோ.சிவாகரன் கருத்து தெரிவிக்கும் போது, பள்ளிக்குடியிருப்பு கிராம சேவகர் பிரிவில் உள்ள தங்கபுரம் கிராமத்தில் 245 குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இவர்கள் குடியேறிய காலம் முதல் இன்று வரை 25 மீற்றர் கொங்கிரீட் வீதி மட்டுமே அபிவிருத்தி என்று கண்டுள்ளனர்.

மாரி காலத்தில் இங்கு யானைகள் ஊருக்குள் வந்து மக்களுக்கு உயிர் அச்சுறுத்தலை விளைவிக்கிறது என கடந்த 09 மாத காலமாக மூதூர் பிரதேச சபையிடம் தெரு விளக்கு கோரியுள்ளோம். அதுவும் எமக்கு கைகூடவில்லை இக்கிராம மக்களுக்கு சமுர்த்தி முத்திரை கூட கிடையாது.

இந்த நிலையில் எமது கிராமத்து மக்களுக்கு நிரந்தர வீட்டுத்திட்டத்தையாவது வழங்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரி நிற்கின்றனர்.

## இந்துக்கல்லூரியின் பரிசளிப்பு விழா

ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழாவும் சஞ்சிகை வெளியீடும் எதிர்வரும் 22ம் திகதி நடைபெறவுள்ளது. உயர்நீதிமன்ற நீதியரசர் மதிப்பிற்குரிய பா.சசிமகேந்திரன் இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக அழைக்கப் பட்டுள்ளார்.

## குழந்தைக் கொலைக்கு பெண்கள் சமாசம் கண்டனம்

இலங்கை அகரன்கஹவில் கிராமத்திலுள்ள தனது வீட்டில் வைத்து கடத்தப்பட்டு பாலியல் வன்புணர்விற்கு உட்படுத்தி படுகொலை செய்யப்பட்ட நான்கு வயதுச் சிறுமி சேயா சதவுமியின் படுகொலைக்கு தமது கடுமையான கண்டனத்தை திருகோணமலை மாவட்ட பெண்கள் சமாசம் தெரிவித்து ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

சிறுவர்களுக்கு பாதுகாப்பு இல்லாத ஒரு நாடாக இலங்கை உருவாகி வருவதை கடந்த கால செயற்பாடுகளின் மூலம் உணரமுடிகிறது.

தினமும் சிறுவர்கள் மீது நிகழ்த்தப்படும் பாலியல் வன்புணர்வின் வீரியம் அதிகரித்து வருகிறது

இதனை கட்டுப்படுத்த எமது நாட்டில் குற்றவியல் சட்டங்களை கடுமையாக்குவதன் மூலம் இவ்வாறு பச்சிலங்- குழந்தைகளுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்படும் வன்முறைகளைக் கட்டுப்படுத்த முடியும்

இதற்கு பல அரபு நாடுகள் எடுத்துக்காட்டாகவுள்ளது என தமது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது. 2015 ஆண்டு முதல் 5 மாதத்தில் மாத்திரம் 3219 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளது இது கடந்த 2014ம் ஆண்டு ஆண்டு முழுவதும் இடம் பெற்ற 10315 எண்ணிக்கையை விட அதிகமானதே. எனவே சட்டங்களைக் கடுமையாக்க வேண்டும் என சமாசம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

(அச்சுதன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவின் குடிநீர் உதவித்திட்டம்

கிழக்கு மாகாணத்தில் மக்கள் நீர் பெறுவதற்கான வெற்றிகரமான திட்டத்தை யு.எஸ்.எய்ட் ஆரம்பித்துள்ளது. இம்மாகாண மக்கள் குடிப்பதற்கும் விவசாயத்தை மேற்கொள்வதற்குமான நீரை பெறுவதற்கான வாய்ப்பை அமெரிக்கா வழங்குகின்றது என அமெரிக்கத் தூதரகம் கடந்த வியாழக்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

சிறிய மற்றும் பாரிய திட்டங்கள் ஊடாக அமெரிக்கா இலங்கை மக்களின் நாளாந்த வாழ்க்கையில் முன்னேற்றத்தை ஏற்படுத்துவது குறித்து அர்ப்பணிப்புடன் உள்ளது. வெள்ளம் மற்றும் வரட்சி காரணமாக பாதிப்பை வழமையாக எதிர்கொண்டுள்ள மட்டக்களப்பின் சித்தாண்டியைச் சேர்ந்த 475 குடும்பங்கள் புதிய குடிநீர் இணைப்பை பெற்றுள்ளன. இதன் மூலம் அந்த குடும்பங்கள் சுத்தமான பாதுகாப்பான குடிநீரை பெறவுள்ளன.

லங்கா ரெயின் வோட்டர் ஹார்வஸ்டிங் போரத்துடன் இணைந்து யுஎஸ்எயிட் அமைப்பு அம்பாறையின் சம்மாந்துறை மற்றும் தமனவில் உள்ள இரு பாடசாலைகளுக்கு மழை நீரை சேகரிக்கக் கூடிய இரு தாங்கிகளை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மலசலகூடங்கள் நிர்மாணிப்பு

காத்தான்குடி பிரதேச செயலாளர் பிரிவில் மலசலகூட வசதியற்ற குடும்பங்களுக்கு மலசலகூடங்களை நிர்மாணித்துக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், 27 மலசலகூடங்கள் நிர்மாணிக்கப்படவுள்ளதாகவும் புதிய காத்தான்குடி 167ஏ, 167பி ஆகிய கிராம உத்தியோகத்தர்கள் பிரிவுகளிலேயே நிர்மாணிக்கப்படவுள்ளதாகவும் பிளேன் ஸ்ரீலங்கா நிறுவனத்தின் வெளிக்கள உத்தியோகத்தர் எஸ்.மேனகா தெரிவித்தார். ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன் ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின் அனுசரணையுடன் பிளேன் சிறிலங்கா நிறுவனத்தினால் இந்த மலசலகூடங்கள் நிர்மாணிக்கப்படவுள்ளன. மலசலகூடங்களை நிர்மாணிக்கும் முகமாக அடிக்கல் நேற்று வெள்ளிக்கிழமை காத்தான்குடி உதவி பிரதேச செயலாளர் ஏ.சி.அகமட் அப்கரினால் நடப்பட்டது.

## கண்காட்சியும் விற்பனையும்

**கிழக்கின்** விவசாய எழுச்சிக் கண்காட்சியும் விற்பனையும் மட்டக்களப்பு சித்தாண்டி வந்தாறுமூலை மகா வித்தியாலயத்தில் இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகியது. கிழக்கு மாகாண விவசாயிகள், கைப்பணியாளர்கள், மீன் வளர்ப்போர், கால்நடை மற்றும் கோழி வளர்ப்போர்களின் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்தும் நோக்கில் இந்தக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டதாக மட்டக்களப்பு விவசாயத் திணைக்கள விரிவாக்கல் பணிப்பாளர் ஆர்.கோகுலதாஸன் தெரிவித்தார்.

இந்தக் கண்காட்சியும் விற்பனையும் தொடர்ந்து 19ம் திகதிவரை நடைபெறவுள்ளது. புதிய நெல் இனங்கள் மற்றும் ஏனைய உப உணவுப் பயிர்கள், விவசாய இரசாயன மற்றும் பசளை வகை, விவசாய உபகரணங்கள் மற்றும் இயந்திர வகை, உயிர்வாயு உற்பத்தி, பாற்பண்ணை முகாமைத்துவம், கால்நடைத் தீவனம் மற்றும் புல் உற்பத்தி, கோழி வளர்ப்பும் முட்டை உற்பத்தியும், மீன்பிடி உபகரணங்களும் செயற்பாடுகளும், அலங்கார மீன் வளர்ப்பு முறைகள், கூட்டுறவுத்துறைச் செயற்பாடுகள், நவீன விவசாய நீர்ப்பாசனத் தொழில்நுட்பங்கள் என்பன இந்தக் கண்காட்சியில் இடம்பிடித்திருக்கின்றன.



## சுகாதார விழிப்புணர்வு

மாணவர்கள் மத்தியில் இன்புளுவன்சா எச்1என்1 வைரஸ் தொற்று தொடர்பாக அறிவூட்டும் விழிப்புணர்வு ஊர்வலம் ஒன்று நடாத்தப்பட்டுள்ளது. ஆரோக்கிய அபிவிருத்தி எனும் தொனிப்பொருளைக் கொண்டு ஆரம்பமானது இவ் ஊர்வலம்.

16.09.2015 அன்றைய தினத்தை மட்டக்களப்பு மாநகர சபை சுகாதாரம் மற்றும் துப்புரவேற்பாட்டுத் தினமாக பிரகடனப்படுத்தியே இவ் ஊர்வலம் நடாத்தப்பட்டது. இவ்விழிப்புணர்வின் போது இவ் வைரஸ் தொற்றினால் 10 இற்கும் அதிகமான கர்ப்பிணிப் பெண்கள் உயிரிழந்துள்ளதாகவும் இத்தொற்றினை தடுப்பது குறித்தும் தெரிவிக்கப்பட்டது.

## ஊடகவியலாளருக்கான பயிற்சிப் பட்டறை

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த மூவின ஊடகவியலாளர்களுக்குமான ஒருநாள் பயிற்சிப் பட்டறை மற்றும் கலந்துரையாடல் நிகழ்வு ஒன்றினை "விடியல் ஸ்ரீலங்கா" அமைப்பு ஏற்பாடு செய்துள்ளது.

கிழக்கு மாகாணத்தின் அம்பாறை, திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் கடமையாற்றும் தமிழ், சிங்கள, முஸ்லிம் இனங்களைச் சேர்ந்த ஊடகவியலாளர்களுக்கிடையில் பரஸ்பர புரிந்துணர்வைக் கட்டியெழுப்பும் நோக்கிலேயே இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஊடகவியலாளர்களுக்கிடையிலான உறவை மேம்படுத்தல், தகவல் அறியும் சட்டமூலம், அறிக்கையிடலுக்கு நவீன தகவல் தொழில்நுட்பங்களை பயன்படுத்துவதற்கான வழிகாட்டல்கள் ஆகிய தலைப்புக்களிலும் விரிவுரைகள் இடம்பெறும்.

# மலைமுரசு

MALAIMURASU

# மட்டக்களப்புச் செய்திகள்

## ஓய்வூதியர்கள் இனி சமூக சேவை செய்ய வேண்டும்

அரசாங்க சேவையிலிருந்து ஓய்வுபெறுபவர்கள் வீட்டில் முடங்கியிருக்காமல், சமூக சேவையிலும் ஈடுபட வேண்டுமென காத்தான்குடி பிரதேச செயலகத்தின் உதவிப் பிரதேச செயலாளர் ஏ.சி.அகமட் அப்கர் தெரிவித்தார்.

காத்தான்குடி பிரதேச செயலகத்தில் நிர்வாக உத்தியோகஸ்தராக கடமையாற்றி ஓய்வு பெறுகின்ற எஸ்.சுந்தரராஜனை கௌரவிக்கும் நிகழ்வு, பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றபோதே அவர் இவ்வாறு கூறினார்.

இங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர், "ஓய்வூதியர்கள் வீட்டில் முடங்கியிருக்காமல் சமூக சேவையில் ஈடுபட வேண்டும். அவர்களின் அரசாங்க சேவை வாழ்க்கையை மற்றவர்களும் கற்றுக்கொள்ளும் வகையில் அவர்களுக்கு வழிகாட்டிகளாக நடக்கவேண்டும்" என்றார்.

## வற்றிய நிலையில் பல நீர்நிலைகள்

வவுனியா, குடாகசுகொட்டிய குளத்துக்கு அருகில் ஒரு குழுவினர் புதையல் தோண்ட சென்றதாக கூறப்பட்ட சந்தேகநபர்களை கைது செய்ய சென்றபோது, அங்கு வந்த குறித்த காவல்துறை அதிகாரி அவர்களை கைது செய்யவதை தடுத்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. சந்தேக நபர்களை கைது செய்யாத சம்பவம் தொடர்பில் காவல் மா அதிபர் என்.கே இலங்ககோனுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இந்நிலையில், இவ்வழக்கு தொடர்பில், தற்போது கிழக்கு மாகாண பிரதி காவல் மா அதிபர் யூ.கே திசாநாயக்கவினை கைது செய்யக்கோரி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அத்துடன் புதையில் தோண்டிய குற்றச்சாட்டில் கோஉஸ்வர வர்த்தகர் உட்பட 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## 19 பேர் உயிரிழப்பு

2011ம் ஆண்டு முதல் 2015ம் ஆண்டு வரையான காலப்பகுதியில் விசர் நாய்க்கடியினால் 19 பேர் உயிரிழந்ததாக விலங்கு விசர்நோய் தடுப்புப் பிரிவின் பொறுப்பாளரும் பொதுச் சுகாதாரப் பரிசோதகருமான எஸ்.ரவீந்திரன் தெரிவித்தார். 2011ஆம் ஆண்டு 11 பேரும் 2012ஆம் ஆண்டு 04 பேரும் 2013ஆம் ஆண்டு 02 பேரும் 2014ஆம் ஆண்டு ஒருவரும் 2015ஆம் ஆண்டு ஒருவரும் விசர் நாய்க்கடிக்குள்ளாகி உயிரிழந்திருந்ததாகவும் அவர் கூறினார்.

நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை கோட்டைமுனைப் பகுதியில் கடந்த வியாழக்கிழமை (17.09.2015) நடைபெற்றது.

## 75 வயது முதியவரின் சடலம் மீட்பு

காத்தான்குடி கிரான்குளத்தின் கடற்பரப்பில் வயோதிப பெண்ணொருவரின் சடலம் கடந்த திங்கட்கிழமை மாலை மீட்கப்பட்டுள்ளது. கல்முனை, பாண்டிருப்பு பகுதியை சேர்ந்த தம்பியப்பா சரஸ்வதி (75வயது) என்ற பெண்னே சடலமாக மீட்கப்பட்டுள்ளதாகவும் காவல்துறையினர் தெரிவித்தனர்.

## அவுஸ்திரேலியா 15 மில்லியன் ஒதுக்கீடு



சுற்றுலாத்துறை பயிற்சிகள் மூலம் இளைஞர், யுவதிகள் உள்வாங்கப்பட்டு அவர்களுக்கான பயிற்சிகள் வழங்கப்பட்டு வேலைவாய்ப்பு வழங்கப்படுவதற்காக அவுஸ்ரேலியா 15 மில்லியன் அவுஸ்திரேலியன் டொலர்களை ஒதுக்கியுள்ளதாக கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட் தெரிவித்தார். கிழக்கு மாகாண முதலமைச்சர், அவுஸ்ரேலிய அபிவிருத்திக் கூட்டுத்தாபன முதன்மைச் செயலாளர் மைக்கல் நியூமன் குழுவினரிற்குமிடையே இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் போதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண சுற்றுலாத் துறை சம்பந்தமாகவும் இளைஞர், யுவதிகள் எதிர்நோக்கும் பிரச்சினை சம்பந்தமாகவும் கிழக்கு மாகாணத்தில் சுற்றுலாத் துறையை மேம்படுத்தவும் இதன் மூலமாக இளைஞர், யுவதிகளுக்கான வேலைவாய்ப்பினை மேம்படுத்தவும் முடியும் என முதலமைச்சர் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைதாகுவாரா கோத்தாபாய ???



**மி**தக்கும் ஆயுதக் கப்பல் தொடர்பான உண்மையான விபரத்தை பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் உதவிச் செயலாளர் வெளிப்படுத்திய நிலையில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளரும் மஹிந்த ராசபக்ச சனாதிபதியாக இருந்த போது அதிகார உச்சம் பெற்றிருந்தவருமான கோத்தாபாய ராசபக்ச கைதாகும் நிலை உருவாகியுள்ளது.

பாரிய அளவிலான ஊழல் மோசடி தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவில் சாட்சி வழங்கிய பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் மேலதிக செயலாளர் தமயந்தி ஜயரத்ன, சட்டவிரோதமான முறையில் ரக்னா லங்கா நிறுவனத்திற்கு ஆயுதங்கள் வழங்கப்பட்டதனை ஏற்றுகொண்டுள்ளார்.

ரக்னா லங்கா நிறுவனத்திற்கு 3473 துப்பாக்கிகள் வழங்கப்பட்டுள்ள நிலையில் அவற்றில் சட்டரீயாக 89 துப்பாகிகள் மாத்திரமே வழங்கப்பட்டுள்ளதாக உறுதியாகியுள்ளது.

மலைமுரசு MALAIMURASU

தேசிய செய்திகள்



## தாஜூடீனின் உடலம் மீண்டும் அடக்கம்

**ம**ர்மமான முறையில் படுகொலை செய்யப்பட்ட பிரபல றகர் விளையாட்டு வீரர் வசீம் தாஜுதீனின் ஜனாஸா, தெஹிவளையில் பள்ளிவாசலின் மையவாடியில் 38 நாட்களுக்கு பின்னர் நேற்று (18) வெள்ளிக்கிழமை மீண்டும் அடக்கம் செய்யப்பட்டது.

# ஐநா அறிக்கை பக்கச் சார்பற்றது

### வெளிவிவகார அமைச்சர் புகழாரம்



**ஐ**க்கிய நாடுகள் சபையின் மனித உரிமைச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட ஆரம்பக்கட்ட மனித உரிமை விசாரணை தொடர்பான அறிக்கையானது அனைவரையும் சமமாகக் கருதியுள்ளதுடன் பக்கச்சாபு அற்றிருப்பதாக ஶ்ரீலங்காவின் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

ராசபக்சாக்கள் ஆட்சியில் இருந்தால் இன்று அமெரிக்க மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் என்பன இலங்கையின் மீது பொருளாதாரத் தடைகளை விதித்திருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ராசபக்சாக்களினால் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் காற்றில் பறந்ததாலேயே இன்று சர்வதேச அனுசரணையுடனான விசாரணைகளை ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. அல்லாது விட்டால் அனைத்தையும் உள்ளக விசாரணைகளின் ஊடாகவே தீர்த்துக் கொண்டிருக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த 30வது அமர்வில் முன்வைக்கப்பட்டுள்ள ஶ்ரீலங்கா மீதான அறிக்கை பக்கச் சாபற்றிருப்பதுடன் சகலரையும் ஒரே தட்டில் அளவிட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தள்ளார்.

## மீண்டும் சிறுமியொருவர் வன்புணர்வு

**க**னேமுல்ல பிரதேசத்தில் எட்டு வயது சிறுமியை பாலியல் வன்புணர்விற்குள்ளாக்கியதாகக் கூறப்படும் மூவரை காவல்துறையினர் நேற்று வெள்ளிக்கிழமை இரவு கைதுசெய்துள்ளனர்.

கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலை தொடர்ந்தே மேற்படி மூவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். சிறுமியின் தந்தை சில வருடங்களுக்கு முன்பு மரணமடைந்துள்ளதுடன் தாய் தனியார் நிறுவனமொன்றில் தொழில் புரிந்து வருகிறார். இந்நிலையில் இச்சிறுமி தனது தாத்தா மற்றும் பாட்டியின் பராமரிப்பிலே இருந்து வந்துள்ளார்.

## மரண தண்டனை மீண்டும் வரலாம்

**நா**டாளுமன்றம் இணங்கினால் மரணதண்டனை அடுத்த வருடம் முதல் அறிமுகப்படுத்தப்படும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, காலியில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போது இன்று வெள்ளிக்கிழமை தெரிவித்தார்.

குற்றவியல் குற்றவாளிகளுக்கு மரணதண்டனையை நடைமுறைப்படுத்துவது தொடர்பிலான யோசனை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

தேசிய போதைப்பொருள் தடுப்பு செயலணி, காலி நகர சபை மண்டபத்தில் நடத்திய தேசிய வேலைத்திட்டத்தில் இணைந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொடதெனியாவில் 5 வயது சிறுமி படுகொலைச் செய்யப்பட்டதன் பின்னர், மரணதண்டனையை நிறைவேற்றுமாறு பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. இதற்கு முன்னரும் இவ்வாறான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. அபிவிருத்தி அடைந்த பல நாடுகளில் மரணதண்டனை நடைமுறையில் இருக்கின்றது என்றும் ஜனாதிபதி கூறினார்.

## சிறுமி கொலை மூவர் கைது

**கொ**ட்டதெனியாவ - படல்கம, அக்கரங்கஹ பகுதியைச் சேர்ந்த சேயா செதவ்மி என்ற முன்பள்ளிச் சிறுமி கொடூரமாக பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு துணியினாலான பட்டி ஒன்றினால் கழுத்து நெரிக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டமை தொடர்பில் மூன்று பேர் விசேட காவல்துறை விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

நம்பத்தகு தகவல்களின் அடிப்படையில் முதலில் பதின்மவயதுப் பாடசாலை மாணவன் கைதாகியதைத் தொடர்ந்து ஏனைய இருவரும் ச்தேகத்தில் கைதாகியுள்ளனர்.

இவ்வாறு விசாரணைக்கு உட்படுத்தப்படுவோரில் சிறுமி சேயா செதவ்மியின் வீட்டுக்கு அருகில் வசித்து வந்த 18 வயதுடைய இளைஞன் வீட்டில் இருந்து சிறிது தூரத்தில் உள்ள 35 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தையும் நடுத்தர வயதுடைய பிறிதொருவரும் அடங்குவதாகவும் அவர்கள் அனைவரும் போதைப் பழக்கத்திற்கு அடிமையானவர்கள் என்றும் காவல்துறைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# ஐநாவின் அறிக்கை சட்டத்துறை மீது கரி பூசிவிட்டது



**தே**சிய மற்றும் சர்வதேசம் கலந்த விசேட நீதிமன்றம் ஒன்றை ஸ்தாபிக்க வேண்டும் என ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரின் அலுவலகம் பரிந்துரை செய்திருப்பது இலங்கையின் சட்டத்திற்கு செய்த அவமானம் என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

நாமல் ராஜபக்ச தனது வலைத்தள கணக்கில் செய்துள்ள பதிவில் இதனை கூறியுள்ளார்.

2002 – 2011 ஆம் ஆண்டு காலத்தில் இலங்கையில் இடம்பெற்றதாக கூறப்படும் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் போர் குற்றங்கள் குறித்து விசாரணை நடத்த ஐ.நா மனித உரிமை ஆணையாளரின் அலுவலகம் இந்த விசேட நீதிமன்றத்தை ஸ்தாபிக்குமாறு பரிந்துரைத்துள்ளது.

இலங்கையின் சட்ட கட்டமைப்பானது எவ்வித சர்வதேச தலையீடுகளும் இன்றி எந்த விதத்திலான விசாரணைகளையும் நடத்தவல்லது என்பது எனது நம்பிக்கை.

இலங்கையின் சட்ட கட்டமைப்பும், நீதிமன்ற கட்டமைப்பும் எப்படியான விசாரணைகளையும் நடத்தக் கூடிய வசதிகளையும் திறமையான மனித வளங்களையும் கொண்டுள்ளது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், ஐ.நா மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்தின் இந்த பரிந்துரையானது, இலங்கைக்கு எதிரான சர்வதேச தரப்பினரின் இரட்டை நிலைப்பாட்டுக்கான மற்றுமொரு சிறந்த உதாரணம் மாத்திரமே என்பது எனது நம்பிக்கை எனவும் நாமல் ராஜபக்ச கூறியுள்ளார்..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU

# உலகச் செய்திகள்

## அமெரிக்கா ரஸ்யாவுடன் பேச்சுக்கு முயற்சி

அமெரிக்கா ரஸ்யாவுடன் நேரடிப் பேச்சுக்களை நடத்தவுள்ளதாக அமெரிக்க ராசாங்கத்துறைச் செயலர் ஜோன் கெரி தெரிவித்துள்ளார்.


சிரியாவில் அதிகரித்துவரும் இரஸ்ய இராணுவப் பிரசன்னம் தொடர்பாகவே இப்பேச்சுக்கள் நிகழவுள்ளன.

சிரியாவின் நிலை மேலும் சீரழிவிற்கு உள்ளாவதை அடுத்து "இராணுவத்திலிருந்து இராணுவம் நோக்கிய" சம்பாசனை தற்போது முக்கியமானது என அமெரிக்க அதிபர் ஒபாமா கருதுவதாகக் கெரி மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இரஸ்ய இராணுவத்தைச் சேர்ந்த ஒப்பந்த இராணுவ வீரர்கள் சிலர் சிரியாவிற்குள் அனுப்பப்பட்டுள்ளதாக இரஸ்ய செய்திச் சேவை தெரிவித்துள்ளது. இவ்வாறு ' அனுப்பப்பட்டவர்களிற்குத் தாம எங்கு செல்கின்றோம் என்பது தெரியாது எனவும் அச்செய்திச் சேவை செய்தியிட்டுள்ளது.



## ஜப்பானியப் படைகளும் சர்வதேசப் பரப்பில் போரிடும்



சர்வதேச நிலப்பரப்பில் ஜப்பானியப் படைகளும் போரிடுவதற்கான அனுமதியை ஜப்பானியா நாடாளுமன்றம் வழங்கியுள்ளது.

இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின்னர் சர்வதேசப் பரப்பில் ஜப்பானியப் படைகளும் போரில் பங்கேற்பதற்கு முதற் தடவையாக அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது.

நாடாளுமன்றத்தில் எதிரணியினர் இச்சட்டமூலம் வெளிவருவதைத் தடுப்பதற்குப் பகீரதப் பிரயத்தனங்கள் செய்த போதும் அம் முயற்சி கைகூடவில்லை எனச் சர்வதேசச் செய்தி நிறுவனங்கள் தெரிவிக்கின்றன.

கிடைக்கப்பெற்றுள்ள அனுமதியை அடுத்து ஐநாவின் சர்வதேசப் படைகளில் ஜப்பானியப் படைகளும் பங்கேற்கும் எனத் தெரிகின்றது.

## 368 பணியிடங்கள் – 23 லட்சம் விண்ணப்பங்கள்



இந்தியாவின் உத்தர பிரதேச மாநிலத்தில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்துள்ள நிலையில் அரச திணைக்களங்களில் கடைநிலை பணியான காரியாலய சேவகர் பதவிக்கு இருபத்து மூன்று லட்சம் பேர் விண்ணப்பித்திருப்பது பெரும் சர்சையை ஏற்படுத்தியுள்ளது.

குறித்த பதவிக்கான பணி வெற்றிடங்கள் வெறும் முன்னூற்று அறுபத்தெட்டாக இருக்க விண்ணப்பங்களோ இவ்வளவு தொகைக்குக் குவிந்துள்ளதை அடுத்து அவர்களை நேர்முகப் பரீட்சைக்கு அழைத்தால் நாளொன்றுக்கு இரண்டாயிரம் பேரை நேர்முகம் செய்தால் நாலாண்டுகளின் பின்னரே நேர்முகப்பணி நிறைவுறும் என அரச தகவல்கள் தெரிவிக்கின்றன.

விண்ணப்பதாரர்களில் கலாநிதிப் பட்டங்கள் பெற்றவர்களும் பட்டதாரிகளும் உள்ளடங்கியுள்ளனர்.

## எதிர்பாப்பைப் பூர்த்தி செய்யாத ஒபாமா



சமாதானத்திற்கான நோபல் பரிசை அமெரிக்க சனாதிபதி பெற்றுக்கொண்ட போதும் அவர் நோபல் பரிசுக் குழுவினரின் எதிர்பார்பை பூர்த்தி செய்யவில்லை என நோபல் பரிசுக் குழுவின் முன்னாள் செயலாளர் வெளிப்படுத்தியுள்ளார்.

2009ம் ஆண்டு ஒபாமாவுக்கு விருது வழங்கப்பட்டதன் மூலம் அவருக்கு ஒரு ஏற்றம் கிடைக்கும் என தமது குழுவினர் நம்பினர் என்று, அக்குழுவின் முன்னாள் செயலர் கெயிர் லுண்டெஸ்டாட் தமது நினைவலைகளில் கூறியுள்ளார்.

அவருக்கு விருது வழங்கப்பட்டது அமெரிக்காவில் பெரும் விமர்சனங்களை ஏற்படுத்தியது என்றும், அந்த விருதுக்கு அவர் தகுதியானவர் அல்ல எனப் பலர் வாதிட்டனர் என்றும் லுண்டெஸ்டாட் தெரிவித்துள்ளார்.

தனக்கு இந்தப் பரிசு அளிக்கப்பட்டது ஆச்சரியமாக இருந்தது என்று ஒபாமவே தெரிவித்திருந்தார் என்றும் அவரது சில ஆதரவாளர்கள் கூட அவருக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது தவறு எனக் கருதினர் என்றும் லுண்டெஸ்டாட் தனது நினைவுக் குறிப்பில் எழுதியுள்ளார்.

## 5 மாதங்களில் தப்பி ஓடிய லட்சம் சிறுவர்கள்

நைஜீரியாவில் கடந்த ஐந்து மாதங்களில் இஸ்லாமியவாத குழுவான போக்கோஹராமின் தாக்குதலால் ஐந்து லட்சம் சிறார்கள் தமது இருப்பிடங்களை விட்டு தப்பி ஓடியுள்ளதாக ஐநா கூறியுள்ளது.


இதன் மூலம் நைஜீரியாவிலும், அண்டைய நாடுகளிலும் இருந்து தப்பி ஓடிய சிறார்களின் எண்ணிக்கை 14 லட்சமாக மாறியுள்ளது.

இவர்களில் அரைவாசிப்பேர் 5 வயதுக்கும் குறைவானவர்களாவர்.

பல்லாயிரக்கணக்கான சிறார்கள் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும் பலர் பள்ளிக்கூடங்களுக்கு போவதில்லை.

அவர்கள் முகாம்களில் வாழ்கிறார்கள். பலர் அண்மையில் கொலராவினால் பாதிக்கப்பட்டனர்..

## புதிய ஆயுதங்களுடன் சிரியப் படைகள்



### அமெரிக்கா அகூசை

சிரிய சனாதிபதி ஆதரவுப் படையினர் ஐஎஸ்ஐஎல் பயங்கரவாதிகளின் மீது மேற்கொண்டுவரும் தாக்குதல்களுக்குத் திடீரென அதி நவீன ஆயுதங்களைப் பாவிக்கத் தொடங்கியதை அடுத்து அமெரிக்கா இவ்விடயம் தொடர்பான தனது அகூசையை வெளியிட்டுள்ளது.

சிரிய அரச படைகள் இந்தப் புதிய ஆயுதங்களை இரஸ்யாவே தமக்களித்தது என வெளிப்படையாக ஒப்புக்கொண்டிருப்பதுடன் அவ்வாயுதங்களை எவ்வாறு பாவிப்பது என்பது பற்றிய பயிற்சியையும் இரஸ்யாவே தமக்களித்ததாகத் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் புதிய ஆயதங்கள் தரையிலும் வானிலும்மிகவும் வினைத்திறனுடன் தாக்குதல் நடவடிக்கைக்கு உதவுவதாகத் தெரிவித்துள்ளனர்.

## இத்தாலியில் அதிகரிக்கும் இளம் பாலியல் தொழிலாளர்



இந்த ஆண்டில் மட்டும் இளம்பிராயத்தினர் பனிரெண்டாயிரத்துக்கும் அதிகமானோர் படகுகள் மூலமாக இத்தாலியை வந்தடைந்துள்ளனர். அவர்களில் கிட்டத்தட்ட ஒன்பதாயிரம் பேர் பெரியவர்கள் உடன்வராமல் தனியாக வந்தவர்கள். இவர்களில் பலர் வீதிகளில் விடப்படுகின்றனர். அதில் சிலர் போதை மருந்து விற்றும் சிலர் காசுக்கு தங்களையே விற்றும் வாழ வேண்டிய அவல நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்

## புருண்டியில் சர்வதேசத் தலையீடு அவசியம்



புருண்டியில் கடந்த காலங்களில் நிகழ்ந்தது போன்ற பெரிய அளவிலான அத்துமீறல்கள் ஏற்படுவதற்கு முன்னர் உடனடியாக நடவடிக்கைகள் எடுத்தாக வேண்டும் என்று ஐ.நா.வின் சிறப்பு ஆய்வாளர் பெப்லோ டி கிறீப் வேண்டுகோள் முன் வைத்துள்ளார்.

விசேட ஒளிநாடா ஒன்றின் மூலமே அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.


விபடம் தொடர்பாக அவர் மேலும் குறிப்பிடுகையில், புருண்டியில் பத்திரிகையாளர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் தங்களது கருத்துகளை தெரிவிக்க முடியாமல் தாக்கப்படுகின்றனர். வானொலி நிலையங்கள் மற்றும் தொலைக்காட்சி ஊடகங்கள் குறிவைத்து தாக்கப்படுகின்றன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவற்றின் அடிப்படையில் மீண்டும் புருண்டியில் உள்நாட்டு யுத்தம் நடைபெற முன் சர்வதேசத் தலையீடு அவசியம் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர் நாவல்

# வீணையடி நீ எனக்கு...



33

– கவிஞர் வி.மைக்கல் கொலின் –

–கால காலமாய்
காற்று வெளி எங்கும்
ஒரு
பறவை அலைகிறது
நிரந்தரமாய் குடியிருக்க
ஒரு கூடு தேடி –

– பிரபஞ்சப் பிரியன் –

நீண்ட நாள் பிரிவு அல்லவா....... அது......?

ஆம்

காதலர்களுக்கு சில நிமிட பிரிவு கூட பல கால பிரிவல்லவா .........?

அந்த நிகழ்வுக்கு பின்னர் அவர்கள் அடிக்கடி



சந்தித்துக் கொண்டாலும்..... அவர்கள் ஒருவரை ஒருவர் நேசித்த காலங்கள் அல்லவா..... அவர்கள் சுவாசித்த காலங்கள்?

ரதனின் அருகில் அமர்ந்து கொண்ட நிவேதா.... அவனது கரங்களை பிடித்து மெல்ல அழுத்தியபடி விசும்பத் தொடங்கினாள். சிறு பிள்ளையை போல் அவள் அழத் தொடங்கியதும் அவளைப் பார்க்கவே ரதனுக்கு பாவமாக இருந்தது.

**கிழக்குப் பல்கலைக் கழகத்தினை மைய நீரோட்டமாகக் கொண்டு தமிழ் மக்களின் கடந்தகால அரசியல் பேசும் முதல் காதல் காவியம்.**

"நிவேதா.... என்ன இது.... என்ன நடந்தது.......?" அவன் கேட்கவும்.. தனது கைப்பையினுள் இருந்த கடிதத்தை எடுத்து அவனிடம் கொடுத்து........ "என்னை மன்னிச்சிடுங்க ரதன்...... நீங்க..... எவ்வளவு சொல்லியும் கேட்காம...... எனது முடிவில பிடிவாதமா இருந்தன்.. தயவு செய்து என்னக் கோபிக்கதீங்க......."

"சீ பைத்தியமா.... உன் மேல் எனக்கென்ன கோபம்....... உனது செய்கையின்..... முடிவ நீயே உணர்ந்து கொள்ள வேண்டும்.

அதுவரைக்கும் காத்திருப்போம் என நினைத்திருந்தன். இப்போ நீயே அத உணர்ந்திட்டாய்...." என்றவாறே அக்கடிதத்தை பிரித்துப் படித்தான். அது நிவேதாவுக்கு விமலா எழுதியிருந்த கடிதம்.

கடிதத்தைப் படித்து முடித்ததும்..... அதனை மடித்து நிவேதாவிடமே கொடுத்தான்.

"நிவேதா, விமலா நல்ல பொண்ணு. எனது கடிதத்தை அவள் சரியாகவே புரிந்து கொண்டிருக்கிறாள். எங்கே இது பெரிய சிக்கலில் தான் முடியுமோ என்ற பயம் எனக்கிருந்தது.

அவள் படிச்சவள் என்ற படியால்..... முடிவுகளை ஜீரணிக்கக் கற்றுக்கொண்டி-ருக்கிறாள்........."

"ஆமா ரதன், நான் தான் இந்த விஷயத்தில் கொஞ்சம் தடுமாறிப் போயிட்டன். என்னையும் கவலைப்படுத்தி உங்களது மனதையும் நோகச்செய்திட்டன்."

"காவலைப்படாதே நிவேதா... நீ.... இப்போதாவது எல்லாவற்றையும் மறந்து என்னிடம் வந்ததே பெரிய வரம். இனிமே எமக்கு பிரிவென்பதே இல்லை......."

வானத்து வெண்ணிலாவை கருமேகங்கள் சில மறைக்க அந்த இடத்தில் ஒரு வகையான இருட்டு பரவியது.

அவனது மடியில் அவனது வெண்ணிலவு தலைசாய்க்க........ அவளது கேசத்தை வருடிக் கொடுத்தவனாக....... அவள் இதழ்களை நோக்கி தனது இதழ்களைத் தாழ்த்தினான் ஜெயரதன்.

அதனைப் பார்க்க வெட்கப்பட்டோ என்னவோ கடலலைகள் ஓவென்று ஆர்ப்பரித்து எழுந்து கரைக்கு வந்து இருவரது பாதங்களையும் முத்தமிட்டுச் சென்றது அவனது காதல் வெண்ணிலா அவனது கைகளில் சேர்ந்தது.

ரதன் மிக மென்மையாக அந்த வீணையை மீட்டத் தொடங்கினான்.

**முற்றும்.. .. ..**

**வாசகர்களே! கடந்த ஆறு மாதங்களாக உங்கள் மலைமுரசு தாங்கி வந்த "வீணையடி நீ எனக்கு" எனும் குறுநாவல் ஓர் சிறந்த காதல் காவியமாகும். இக் குறுநாவல் தொடரில் கிடைக்கப்பெற்ற சில விமர்சன கடிதங்கள் அடுத்த இதழில் பிரசுரிக்கப்படும்.**

# இரசிக்கத் தெரிந்தவர்கள்

தொடர்கதை

– திருமலை. வீ. என். சந்திரகாந்தி –

**எனஜ** இவருக்கு விசர்... என்னுடைய அழகையே இரசிக்கத்தெரியாதவர்... எமது மகளுக்கு பொருத்தமான மாப்பிள்ளை எப்படி இருக்க வேண்டுமென்பது பற்றி இவருக்கு எங்கே புரியப்போகின்றது...'

"என்னப்பா... நான் சொல்வது கேட்குதா...? காலையில் மங்களமக்கா வீட்டுக்குப் போயிருந்தேன்.... அவா தனது மகளை நாலைந்து இடத்தாலை கேட்டு கரைச்சல் பண்ணுறாங்களாம்."

நான் கூறவும் எனது இவர் பலமாக சிரித்துக் கொண்டார்.

'அதிலை என்ன பெருமை இருக்குது. நாலு இடத்தாலை கேட்டு வருகிற அளவுக்கு அந்த பிள்ளை தன்னை... தனது அழகை பிரபல்யப்படுத்தி இருக்குது என்றுதான் எடுக்க வேணும்...!'

'இவருக்கு பெண் பிள்ளைகள் என்றால் கட்டுமட்டாக இருக்கவேணும்.' அதற்காக பிள்ளைகளின் அழகை மறைத்து வைத்திருக்க கூடிய காலமா இது? எப்படியிருந்தாலும் நேர காலத்தோடு சரியான வரனைப் பார்த்து கல்யாணத்தை செய்து வைத்துவிட்டால் பாரம் நீங்கிப் போகும்.

காலையிலிருந்தே இந்த குஞ்சுக்காகம் பறந்தடிச்சு கரைஞ்சு கொண்டிருக்குது. நீண்ட நாட்களாக ஒருவருடைய கடிதமும் வரவில்லைதான்.

இவருடைய சகோதரி ஒருத்தி. மாலதி மச்சாள். அவாவுக்கு ஆணும் பெண்ணுமாக இரு பிள்ளைகள். விஜயன் மூத்தவன். உயர்தர பரீட்சையில் சித்தியடைந்திருக்கின்றான். தொழில்தான் சரியாக அமையவில்லை. தோட்டம் துரவு என்று தகப்பனுக்கு உதவியாக இருப்பதோடு 'எச்.என்.டி.ஏ 'பார்ட்டைம்' ஆக செய்துகொண்டு இருக்கின்றான். குணசாலி. இருந்தாலும்... ஒரு இரசிப்புத்தன்மை இல்லாதவுகள். ஏதாவது ஒரு சாட்டுப் போக்கை சொல்லி இந்த இடத்தை தட்டிக்கழித்துவிட வேண்டும்.

இவருக்கும் இவருடைய ஆட்களுக்கும் பெண்கள் என்றால் வெறுமனே சமைத்துப்-போடவும், உடுதுணிகளை துவைத்துப்-



போடவும். நேரம் கிடைக்கின்ற நேரம் இரண்டு பிள்ளைகளை பெற்று போடவும்தான் ஆட்கள் என்ற நினைப்பு! ஒரு இரசனை இருக்கா... யாரிடமும் சொல்லவும் கூட முடியாது... என்னுடைய அழகை இவர் இரசித்ததை காட்டிலும் மற்ற ஆண்கள் மெச்சி போற்றினதுதான் அதிகம். அவங்களுக்கு இரசிக்கின்ற தன்மை இருக்குது... மரக்கட்டை போல் இருக்கின்ற இவரும் ஆண்பிள்ளையா?

என்ன விதத்திலாயினும் என்னுடைய அண்ணன் மகன் சங்கரைத்தான் எனது மகளுக்கு சேர்த்து வைக்கவேணும். அவன் 'கம்பஸ்' முடித்து வந்திருக்கிறான். கெட்டிக்காரன். எனது மகளினுடைய வடிவுக்கு வசமாகக் கூடியவன். நாளைக்கு நல்ல தொழில் வாய்ப்பினை பெற்றுக் கொள்ளக்கூடிய தகைமைகளை கொண்டவன்.

எனது இவரும் மகள் வித்யாவும் புறப்பட்டு சென்ற சிறிது நேரத்திலேயே இவருடைய தங்கை மாலதி மச்சாள் வந்தாள். அவா தமையன் இல்லாத நேரம் வந்ததும் எனக்கு வசதியாகப் போய்விட்டது.

'என்னுடைய மகள் சரியான ஊதாரி பாருங்கோ... முற்கோபக்காரி... எவருடனும் ஒத்துப்போகமாட்டாள். மச்சாள்... உங்களுக்கெண்டபடியால் சொல்லுகிறன். இனி உங்களுடைய விருப்பம். பிறகு எங்களை குறை சொல்லி வரக்கூடாது.'

பெண்ணை பற்றி தூற்றி கூறும்போது, பெண் எடுக்க வந்தவர்கள் அவளை தலையில் தூக்கி வைத்துக் கொண்டாட அவையளுக்கு என்ன விசரே... மாலதி மச்சாள் மெல்ல நழுவினாள்.

மச்சாள் வந்து போன பின்பும் இந்த குஞ்சுக்காகம் ஓய்ந்து போன பாடில்லை... 'ச்சீ... அங்காலை போய்த் தொலை' என்றால் எங்கை கேட்குது.

எனது மகள் வித்யா... 'நூலைப் போல சேலை தாயைப் போல பிள்ளை' என்பார்களே அச்சொட்டு! சரியான சிக்கனம். பெண்களுக்கு இதற்கு மேலும் வேண்டாம் என்று சொல்லக்கூடிய அளவினதான தோற்றம், பொறுமை. எவரோடும் ஒத்துப் போகின்ற தன்மை இவை அனைத்திற்கும் மேலாக 'கம்பஸில்' இடம் கிடைத்திரு-க்கின்றது.

மதியத்திற்கு முன்பாக இவர் வந்துவிட்டார். தங்கை வந்து போனமை பற்றி கூறினேன்... "ஒவ்வொருவருக்கும் தங்கள் தங்கள் பாரங்கள் பொறுப்புக்கள் அதிகம்! எங்களுடைய மகளுக்கு வயது இருக்கு. 'கம்பஸ்' கிடைத்திருக்கிற படியால் அவள் படிக்க வேண்டும் என்று ஒற்றைக் காலில் நிற்கிறாள். நாங்கள் குழப்பியதாக இருக்ககூடாது."

நான் சொல்வது இவருக்கு எந்தக்காலத்தில் தான் விளங்கியது... பேசாமல் இருந்து-விட்டார். அப்படி இருக்காவிட்டால் கூட சத்தமிட்டு அதட்டி கூறினேனென்றால் ஒதுங்கி கொள்வார்.

நான் ஏதோ பிழையான காரியங்களா செய்கின்றேன். எல்லாமே எங்களுடைய குடும்ப நன்மைக்காகத்தானே.

கணனி வகுப்பு முடிந்து வித்யா வீடு வந்தாள்.

"மாமி... நீங்கள் ஒருக்கால் ... வீடு வந்தவா பிள்ளை.

தங்களுடைய மகனுக்கு பல இடங்களா-லையும் கேட்டு வருகினமாம். உன்னுடைய அப்பாவுக்கு நீ படித்து பெரியவளாக ஆக வேண்டுமென்று விரும்பம். எந்த தாய் தகப்பனுக்கு இல்லாத ஆசை.

வித்யாவுக்கு தெரியும்... என்னுடன் கதைத்து சரிக்கட்டமுடியாது என்று.

மச்சானைப் பற்றி நல்ல அபிப்பிராயம் இருக்கின்ற-தென்பதை அவளுடைய சில கதை பேச்சுக்களில் ஊகிக்ககூடியதாக இருந்திருக்கு. விஜயன் உண்மையிலேயே நல்ல குணசாலி. ஒழுங்காக குடும்பம் நடாத்தக்கூடியவன். ஆனால் அழகை ஆராதிக்க தெரியாத ஜென்மங்கள். எனது மகளை எவன் ஒருவன் கை கழுவி விட்டுத்தான் தொடவேண்டும் என்று நினைக்கிறானோ அவன்தான் அவளுக்கு மாப்பிள்ளையாக வரவேண்டும்.

இருந்தாலும் சில சமயங்களில் விஜயனுடைய சில தகுதிகள் வித்யாவை எனது அண்ணன் மகன் சங்கருக்கு விவாகம் செய்து வைக்க தடையாகி விடுமோ என்று தயங்கவைப்பதுண்டு.

இந்த நாளைய பெண் பிள்ளைகளை முற்றிலுமாக நம்பக்கூடாது. விஜயனை வித்யா சந்தித்து பேசிக்கதைக்க... முடிவெடுக்க..... நிறைய சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. அது மாத்திரமல்லாமல் வித்யாவிற்கு தந்தை மீதும் அவர் வழி உறவின் மீதும் அளவுக்கு மீறிய அன்பும் பாசமும் உண்டு. தந்தை சொல்வதை சில சமயம் கேட்டுவிடுவாள்!

எதற்கும் ஒருக்கால் மதியம் தூக்கத்தை விட்டு எட்டி ஒரு நடை நடந்து அண்ணை வீட்டுக்கு போய் நிலைமையை உறுதிப்படுத்திக்கொள்ள வேணும்.

நான் போன நேரம் நல்ல சந்தர்ப்பமாய் போய்விட்டது. அண்ணன் மச்சாள் மருமகன் மூவருமே வீட்டில் நின்றார்கள்.

தொடரும்.. ..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவி முரசு

## எது தைத்தது மனதில் ...

எந்தத் தடையுமின்றி
என் உணர்வைப்
பகிர்ந்து கொள்ளும் - உறவு
நீ என . . .

எது தைத்தது மனதில் . .

இங்கொன்றங்கொன்றாய்
எதையெல்லாமோ பேசிப் பின்
இருள் சூழ்ந்த மனத்துண்டின்
கதவு ஒருக்களித்துத் திறக்க
முழுமையும் உனக்குச் சொல்லும்
உறவு

எது தைத்தது மனதில் . .



– மாயன் –

## தனிமை !!


தென்றலும் நின்று போனது
அவள் தனிமை கண்டு... நிலவும்
கரைந்து போனது அவள்
கண்ணீர் கண்டு...

வான் முகிலும் விலகி சென்றது...
அவள் மென்மை கண்டு...
பூக்களும் மௌனித்துக் கொண்டது
அவள் மௌனம் கண்டு...

அவள் மனதில் குவிந்து
நிறைந்த வார்த்தைகள்...
நாவரை வந்து போனது
அவளின் நிலைமை கண்டு...

பேச முடியா பிறவி
ஊமைக ளுக்குள் பேச முடிந்த
பிறவி ஊமையவள்....

(ஶ்ரீகயல்)



## 'பா' ப்பிழை?

தாமரைத் தீவார் என்றும்
தமிழ்ப்பிழை விடவேமாட்டார்!
ஆமிதழாளர் சில்லோர்
அரிய பாப்பிழை செய்கின்றார்?

மாதிரி ஒன்று போட்டு
மதித்திட வரைந்தபின்னர்,
போதிய பார்வை செய்து
போட்டின் பிழைகள் ஏது?

பிழைகாணில் ஆணியாலே
பெருந்தலை உச்சி குத்தி-
செழும் புண்ணைப் பெற்றிட்டாராம்,
'சீ' த்தலைச் சாத்தர் என்பார்?

ஆங்கிலம் வரைந்தா ரானால்
அதில் பிழை விடவேமாட்டார்!
தீங்கினைக் கணினி கூடச்
செய்திடும் தமிழுக்குத் தானே?

தாமரைத்தீவான், (ஈச்சந்தீவு)

## தூய செயல்கள் வெல்லும்

மார்க்கப் பற்று மிகப் பெற்ற
மனிதனாக வாழப் பார்!
யார்க்கும் தீமை தான் செய்ய
யாண்டும் மனதில் எண்ணாதே!

போர்க்கு ணங்கள் தனை விட்டே
போஷிப்பாய் நீ நே(தே)சத்தை
தீர்க்கமாகச் சொல்லுகிறேன்
தீய செயல்கள் வெல்லாதே!

கண்ட பெண்கள் அனைவரையும்
கலந்து மகிழ எண்ணாதே!
பெண்கள் எல்லாம் உன் காமப்
போகப் பொருளாய்க் கொள்ளாதே!

மண்ணில் உன்னை ஈன்ற உயர்
மாதா அவளும் பெண்தானே!
திண்ண மாகச் சொல்லுகிறேன்
தீய செயல்கள் வெல்லாதே!


காட்டிக் கொடுக்கும் எண்ணமதைக்
கருத்திற் கொண்டு வாழாதே!
ஈட்டி போலும் மற்றவர் தம்
இதயம் தன்னில் பாயாதே!

போட்டி, பூசல், கெடுபிடிகள்
பொல்லாக் கொள்கை கொல்லுமுனை!
தீட்டி வைத்தார் அறிஞர் பலர்
தீய செயல்கள் வெல்லாதே!

இனிய வார்த்தைகள் இருக்கையிலே,
இழிவு வார்த்தை பகராதே!
கனியை விடுத்து நீ பச்சைக்
காயைப் புசித்தால் சுவையாதே!

முனிவு கொண்டு வாழ்வதனால்
மூர்க்கனென்று பெயர் பெறுவாய்!
துணிந்து சொல்வேன் நண்பா கேள்,
"தூய செயல்கள் தான் வெல்லும்!"

அ.கௌரிதாசன்,
ஒரு கவிதை எழுதிவிட நூலிலிருந்து...



## முதுமையின் வறுமை

முக்கி எழுந்து முழங்கால்
மடித்த வலி போக்கி

கதிரையின் கை பற்றி
கால் தூக்கி முதலடி
வைத்து மறு காலுமாய்

நிமிர்ந்து நடக்கின்ற
திடத்தோடு மங்கிய
கண்களை விரித்து இடுப்பில்
நலுவும் ஆடைதனை இறுக்கி

தத்தி நடக்க செவ்வரத்தையில்
குந்தியிருந்து கரைந்த
காகமொன்று தலையினை
கொத்தி தள்ளாட வைக்க

முதுமையின் வறுமையினை
நினைத்து திமிராய்
சாயம் பூசிய
கேசத்தை தடவியபடி

– திருமலை சுந்தா –


## மாலை நேர கதிரவன்

பஹ்த்தீபன்

கதிரவன் பார்வை பட்டு
வெண்பஞ்சு மேகங்கள்
பொன்வண்ணம் சூடியது!

அந்தி சாயும் வேளையில்
மேகத்தின் விளிம்பில்
பொன்மின்னல் வெட்டியது!

பொழுது சாயும் நேரத்தில்
செந்நிறத்தை தெளித்து
சிறுக சிறுக மறைகிறான்
மாலைநேர கதிரவன்!



## எப்போதும் நடக்கும்

### கதிர்பாரதிப்ப

பெற்றால் தான் பிள்ளையா? தத்தெடுத்து
பேணி வளர்த்தாலும் பிள்ளை தான். பள்ளியில் :
கற்றால் தான் கல்வியா? உயர் கல்வி படிக்காத
மேதைகளும் இப்பாரில் இல்லையா?

நல்லாட்சி தேவை தான் அதுவே நாட்டுக்கு
செல்வாக்கைத் தருமுண்மை; ஆனாலும்:
பொல்லாப்புச் செய்தோர்கள் இவ்வாட்சியில்
இல்லாமலிருப்பதே இந் நாட்டுக்கு நல்லது!

விகிதா சாரத் தேர்தல் முறை நன்று தெரிவில்
விருப்பு வாக்கு முறையே விரும்பத்தக்கது:
தொகுதி வாரிப் பழைய முறை எதற்கு?
தொடரட்டும் விகிதா சாரத் தேர்தல் முறையிங்கு!

காலால் கடத்துகின்ற விசாரணைகள் எதெற்கு?
காணாமற் போனோரை கண்டறிவ தெப்போது?
நாழாகிப் போகின்ற தீர்வுதான் எப்போது?
நல்லது நடக்குமா நல்லாட்சி தர்பாரில்?

சேனையூரான்

## பெண்மைக்கு வணக்கம்

**வித்தகன்**

பெண்ணே உன்னால்
பிறவி கொண்டேனே,
வளர்பிறையாய் நான் வளர,
தேய்பிறையாய் நீ
மறைந்தாயோ?
இடைவெளியாய் இருளை
நான் உணர,
தாரமாய் மீண்டும்
வந்தவள் நீதானோ?
தாரம் தந்த இன்பத்தில்,
தலைமைகளை கொண்டேனோ?
என் தாயை மீண்டும்
கண்டேனோ?
தரை தவழ்ந்த முதல்,
தலை நரைத்த வரை,
ஈன்ற தாயாய்,
ஈசனில் பாதியை,
ஈன்றெடுத்த மகளாய்,
பேரு கொண்ட - பெண்மைக்கு,
என் தமிழை கொண்டு
தலை வணங்குகிறேன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெனிவாவில் இந்தியாவின் நிலை என்ன?

– கே.சஞ்சயன் –

www.tamilmirror.lk

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் இந்தியப் பயணம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த தருணம் ஒன்றிலேயே இடம்பெற்றிருக்கிறது. ஒரு பக்கத்தில் ஐ.நா விசாரணை அறிக்கை கையளிக்கப்பட்டுள்ள சூழல், இன்னொரு பக்கத்தில், ஜெனீவாவில் அந்த அறிக்கை தொடர்பான விவாதங்கள் நடக்கவுள்ள சூழல், மற்றொரு புறத்தில் இந்த அறிக்கையின் தொடர்ச்சியாக இலங்கை தொடர்பான அடுத்தகட்ட நகர்வு என்ன என்று சர்வதேச சமூகம் தீர்மானிக்கவுள்ள சூழல்.

இந்தப் பின்னணியில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் புதுடெல்லிப் பயணத்தின் போது, இந்த விவகாரம் குறித்து இந்தியத் தரப்புடனான பேச்சுக்களில் முக்கிய இடத்தைப் பிடித்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. பெரும்பான்மை பலம் பெற்ற கட்சியின் பிரதமரை நீக்கி விட்டு, ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமராக நியமித்திருந்தார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன. இது ஒருபுறமிருந்த என்பதை உலகம் அறியும். ஏன், மைத்திரிபால சிறிசேனவும் ரணில் விக்கிரமசிங்கவும் கூட அறிவர். இவர்கள் இருவரும் ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் செய்து கொண்ட உடன்பாடு அது. அதனை நிறைவேற்றித் தனது நன்றிக் கடனைச் செலுத்தினார் மைத்திரிபால சிறிசேன.

மஹிந்த ராஜபக்ஷவை அதிகாரத்தில் இருந்து அகற்றும் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு, ரணில் விக்கிரமசிங்கவின் அந்த நியமனம் தவிர்க்க முடியாத தேவையாக இருந்தது. அதனால், இந்தியாவோ, அமெரிக்காவோ, பிரித்தானியாவோ எதுவும் பேசவில்லை. ஏன், மஹிந்தவுக்கு ஆதரவு கொடுத்த சீனா, ரஷ்யா, பாகிஸ்தான் போன்ற நாடுகள் கூட வாய்திறக்கவில்லை.

இலங்கையின் பிரதமர் என்ற வகையில் இந்தப் பயணத்தில், இருதரப்பு உறவுகள், வர்த்தக, பொருளாதார விருத்தி, பாதுகாப்பு விவகாரங்கள் குறித்து பேசப்பட்டிருக்கிறது. இவற்றுக்கு அப்பால், இந்தப் பயணம் கூடுதல் முக்கியத்துவம் பெற்றதற்குக் காரணம், ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் பணியகத்தின் விசாரணை அறிக்கை தான். ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் பணியகம் போரின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்ற மீறல்கள் குறித்து நடத்திய விசாரணையின் அறிக்கை அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டிருந்த நிலையில் தான் ரணில், புதுடெல்லி சென்றிருந்தார். அதேவேளை, போர்க்குற்றச்சாட்டுகள் தொடர்பாக, சர்வதேச விசாரணைப் பொறிமுறை ஒன்றே அமைக்கப்பட வேண்டும், என்றும் அதற்கு இந்தியாவின் ஆதரவு தேவை என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஒரு கோரிக்கையை விடுத்திருந்தார். அது, இந்தியாவின் ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு அளிக்கப்பட்ட செவ்வியின் ஊடாக விடுக்கப்பட்ட வேண்டுகோள். அதிகாரபூர்வமாக அத்தகைய எந்தக் கோரிக்கையாவது இந்திய அரசாங்கத்திடம் விடுக்கப்பட்டதா என்று தெரியவில்லை.

அதேவேளை, குற்றச்சாட்டுகள் தொடர்பாக உள்ளக விசாரணை நடத்தி, இந்த பொறுப்புக்கூறல் விவகாரத்துக்கு தீர்வு காண்பதாக இலங்கை அரசாங்கம் வாக்குறுதி அளித்திருந்தது. உள்நாட்டு விசாரணையை நடத்துவதற்கு இந்தியாவின் ஆதரவு இலங்கைக்கு அவசியமானது. உள்நாட்டு விசாரணைப் பொறிமுறைக்கு ஆதரவாக ஜெனீவாவில் இந்தியா குரல் எழுப்ப வேண்டும் என்று ரணில் விக்கிரமசிங்கவின் புதுடெல்லிப் பயணத்தின் போது வலியுறுத்தப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் உள்ளக விசாரணைப் பொறிமுறைக்கு ஆதரவாக ஒட்டுமொத்த சர்வதேச சமூகத்தையும் அணி திரட்டுவதன் மூலம், இலங்கை அரசாங்கம் தனது இராஜதந்திர பலத்தை வெளிக்காட்ட எத்தனிக்கிறது.

அதேவேளை, சர்வதேச விசாரணைப் பொறிமுறையை உருவாக்க வேண்டும் என்ற தமிழர் தரப்பின் எதிர்பார்ப்பை, புதுடெல்லியிடம் முன்வைத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு, அதற்கான இந்தியாவின் பதில் என்னவாக இருக்கும் என்பது தெரிந்தேயிருக்கும். ஆனாலும், அவர்களால் இத்தகையதொரு கோரிக்கையை விடுக்காமல் தவிர்த்திருக்க முடியவில்லை. ஏனென்றால் அது அவர்களின் கடப்பாடு-பொறுப்பு. அவ்வாறாயின், இம்முறை ஜெனீவாவில், இலங்கை விவகாரத்தில் இந்தியாவின் நிலைப்பாடு எவ்வாறானதாக அமையும்?

நிச்சயமாக இந்தியா சர்வதேச விசாரணைப் பொறிமுறை ஒன்றுக்கு ஆதரவளிக்கப் போவதில்லை. அதனை இந்தியா கடந்த 2014ஆம் ஆண்டு மார்ச் மாதம் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தின் போதே தெளிவாகக் கூறிவிட்டது. சர்வதேச விசாரணை ஒன்று இலங்கையில் முன்னெடுக்கப்படுவதை இந்தியா விரும்பவில்லை. அதற்கு மூன்று காரணங்களைக் குறிப்பிட்டிருந்தார் இலங்கைக்கான முன்னாள் இந்தியத் தூதுவர் நிருபம் சென். இலங்கைப் போர்க்குற்றங்கள் தொடர்பாக சர்வதேச விசாரணை நடத்தப்பட்டால், அந்த முன்னுதாரணத்தைப் பின்பற்றி, காஷ்மீரில் இந்தியப் படைகளின் மீறல்கள் குறித்த விசாரணையை மேற்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கை வலுக்கும் என்ற அச்சம் இந்தியாவுக்கு இருக்கிறது. தனது அயல் நாடான இலங்கையில், சர்வதேச விசாரணைக்கு இடமளிப்பது இலங்கையுடனான உறவைக் கெடுத்து விடும் என்பது இரண்டாவது காரணம். இந்தியா தனது செல்வாக்கைப் பலப்படுத்த வேண்டிய பகுதியில் உள்ள இலங்கையில், சர்வதேச தலையீடுக்கு இடமளிக்க முடியாது என்பது மூன்றாவது காரணம். இந்த மூன்று காரணங்களின் அடிப்படையில் தான் சர்வதேச விசாரணைக் கோரிக்கையை மோடி அரசாங்கம் ஆதரிக்காது என்று கூறியிருந்தார் நிருபம் சென்.

ஆனால், நான்காவது காரணம் ஒன்றும் உள்ளது. அது தான், குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகியிருக்கும் இறுதிக்கட்டப் போரில், இந்தியாவின் வகிபாகம். விடுதலைப் புலிகளை அழிப்பதற்கான இறுதிக்கட்டப் போரில் இந்தியா மறைமுகமான பங்கை ஆற்றியிருந்ததான குற்றச்சாட்டுகள் உள்ளன. சர்வதேச விசாரணை ஒன்று முன்னெடுக்கப்படும் நிலை ஏற்பட்டால், அதில் இந்தியாவின் வகிபங்கை- அது பற்றிய இரகசியங்களையும் வெளிப்படுத்தும் நிலை ஒன்று ஏற்படலாம் என்ற அச்சமும் இந்தியாவுக்கு இருக்கிறது என்பதை நிருபம் சென் கூறவில்லை.

எனவே, உள்ளக விசாரணைக்கு சாதகமாக ஜெனீவாவில் தீர்மானம் ஒன்று கொண்டு வரும் போதும், இந்தியா அதற்குச் சாதகமாக நடந்து கொள்ளுமே தவிர, எதிராகத் திரும்பாது. ரணில் விக்கிரமசிங்க புதுடெல்லிக்குச் சென்று கேட்டுக் கொண்டதால் தான் இந்தியா ஆதரவளிக்கும் என்று எதிர்பார்க்க முடியாது.

# சிங்களம் தனது உத்தியை காலத்துக்குக் காலம் மாற்றியே வந்தது

பகலவன்

**சிங்களம்** காலத்துக்குக் காலம் தனது உத்திகளை மாற்றியே வந்துள்ளது. பொருளாதார ராஜதந்திர ரீதியாக தொடர்ந்து தனது செயற்பாட்டைக் கூர்மைப்படுத்தி வருகிறது. இதற்கேற்ற வகையிலேயே எமது நடவடிக்கைகள் அமைய வேண்டும். இப்படித்தான் சிங்களம் செய்யும் என்றோ எமது எதிர்பார்ப்பு நாம் விரும்பிய வகையில் அமையுமென்றோ கணிப்பிட முடியாது.

1958 இனக் கலவரத்தில் தமிழர்கள் எங்கே எங்கே என்று தேடித் தேடி அழித்தார்கள். உடமைகளைத் தீக்கிரையாக்கினார்கள். 1977 இல் சற்று மாற்றம் தமிழரின் காணிகள் உடமைகளை நெருக்குதல் கொடுத்து பின்னர் அவர்களுக்கு உதவுவது போல் நடித்து அவற்றைத் தமதுடமைகளாக்கினார். 1983 கால கட்டத்தில் தமிழரைத் தேடித் தேடித் திரியவல்ல. கையில் வாக்காளர் விபரத்தை வைத்துக் கொண்டு குறிப்பாக தமிழரின் வீடுகளுக்கே சென்று உடமைகளைப் பறிமுதல் செய்தார்கள். தீயிட்டுக் கொழுத்தியது குறைவு.

அதேபோலத்தான் தமிழரின் புலம்பெயர்வு தொடர்பாகவும் நடந்தது. தமிழர்களை அச்சுறுத்திப் பணிய வைப்பதொன்றே சிங்களத்தின் நோக்கமாக இருந்தது. பெருமளவில் இவ்வளவு பேர் நாட்டைவிட்டுச் சென்றதும் அவர்கள் உழைக்கும் பணத்தில் ஒரு பகுதியை சிங்களத்தின் படை வலுவைக் குறைக்கும் செயற்பாடுகளுக்காக வழங்கியதும் சிங்களம் எதிர்பார்க்காத தொன்றாகும். இதனை முறியடிக்க தனது ஒற்றர் குழாமை அரசியல் புகலிடக்காரர்கள் என்ற பெயரில் மேற்குலகுக்கு அனுப்பியது. அங்கு சகல தரவுகளும் திரட்டப்பட்டன. புலிகளின் சர்வதேச நிதிப் பொறுப்பாளர் பேரின்பநாதன் ஈழமுரசு ஆசிரியர் கஜன் ஆகியோர் அவர்களுக்கு அறிமுகமானோராலேயே கொல்லப்பட்டமை இதன் உச்சக் கட்டமாக அமைந்தது.

2009 இற்கு பின்னர் சண்சீ கப்பலில் கனடாவுக்குச் சென்றோரின் முழுவிபரத்தையும் அதே கப்பலில் பயணம் செய்த முன்னாள் பெண் புலி உறுப்பினர் மூலமே திரட்டும் வகையில் அரசின் செயற்பாடுகள் அமைந்திருந்தன.

உள்நாட்டிலும் அரசுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் தொடர்பாக பல்வேறு வழிமுறைகள் கையாளப்பட்டன. அரசின் செயற்பாடுகளுக்கு எதிரான நடவடிக்கைகள் பலாத்காரமாக முறியடிக்கப்பட்டன. உண்ணாவிரதத்தில் இருந்தோர் விரட்டப் பட்டனர். போராட்டங்களுக்குச் செல்வோர் மீது கழிவு ஓயில் ஊற்றப்பட்டது. இதெல்லாம் சாத்தியமாகாத நிலையில் வடமராச்சி நெல்லியடியில் நடந்த மக்கள் போராட்டமொன்றின் போது இருவர் புலிக்கொடியைத் தாங்கியபடி மோட்டார் சைக்கிளில் சென்றனர். போராட்டத்தின் நோக்கத்தைத் திசை திருப்பவே இவ்வாறு முயன்றனர்.

ஏனெனில் சுமார் அரை இலட்சம் எண்ணிக்கையுடைய இராணுவம் காவல்துறை கடற்படை வான்படை உள்ள குடாநாட்டில் மோட்டார் சைக்கிளில் புலிக்கொடியுடன் சென்றவர்களை கண்டு-பிடிக்கவில்லையாம். யாழ் தெல்லிப்பளை-யில் மக்கள் போராட்டத்தைக் குழப்பிய ஒருவரை மக்கள் இனங்கண்டு அவரைப் பிடித்து காவல்துறையினர் கையில் ஒப்படைத்ததும் அவரைப் காவல்துறை உத்தியோகத்தர் கையைப் பற்றி இழுத்துச் செல்வதும் இணையத்தளங்களிலும் பத்திரிகைகளிலும் வெளியாகின. ஆனால் நடவடிக்கை தான் ஏதும் இல்லை. இதேபோல் சுன்னாகத்தில் கழிவு ஓயில் நீரில் கலந்த விவகாரத்தை வெளியுலகுக்குக் கொண்டு வந்ததுடன் சட்ட நடவடிக்கைகளில் ஈடுபட முனைந்தோர் புலிகளின் நோக்கங்களுக்கு ஏற்ப செயற்படுகின்றனர் என்ற வகையில் பிர்ச்சினையை திசைதிருப்ப முயன்றனர். காணாமல்போனோர் தொடர்பான போராட்டங்களில் ஈடுபட்ட தாயும் மகளுமான ஜெயகௌரி விபூசிகா தர்மபுரத்தில் ஏதோ ஒரு காரணத்தின் பெயரால் கைதாகினர். காணி விடுவிப்பு சம்பந்தமான போராட்டத்தில் ஈடுபட்ட முனைப்புக் காட்டிய பரவிப்பாஞ்சான் வாசி கைதுசெய்யப்பட்டார்.

இப்படியாக நாளாந்தம் போராட்டம் எதிர்ப்பு என்ற வகையில் சென்று கொண்டிருந்த போது மாத்தி யோசி என்று யாரோ சிங்களத்துக்கு ஆலோசனை வழங்கினார். எந்தப் போராட்டத்தையும் தடுக்கக் கூடாது. அதில் இன்னமும் தீவிரம் காட்டுவதாக சிலர் பாசாங்கு காட்டி போராட்டத்தைத் திசைதிருப்ப வேண்டும் போராட்டங்களின் பால் மக்கள் கவனம் செல்லாத சூழலை உருவாக்க வேண்டும் என்பதே புதிய யுக்தியாகும். இதன் முதற்கட்டம் சுத்தமான நீருக்கான போராட்டம். சுன்னாகம் குடிநீரில் கழிவு ஓயில் கலந்த விவகாரம்.

இதுவரை இப்போராட்டத்தை நடத்தியோரின் தீவிரம் போதாது. நாம். இதனைக் கூர்மைப்படுத்தப் போகிறோம் என்ற பாணியில் அறிவிப்பு வெளியானது. யாழ் நல்லூரில் நடத்தப்பட்ட உண்ணாவிரதப் போராட்டத்தின் போது வடக்கு முதல்வர் அங்கே சென்றார். போராட்டக்காரர்களின் கோரிக்கைகளை கவனத்தில் எடுப்பதாகவும் தீர்வுக்கு ஒரு கால அவகாசத்தை வழங்குமாறும் கோரினார். ஒரு இலட்சத்து 30 ஆயிரம் மக்கள் நேரடியாகவும் கிளிநொச்சி மன்னார் வவுனியா முல்லை வாசிகள் இவர் தான் முதல்வர் என்பதை ஏற்றுக் கொண்டும் வடக்கு முதல்வருக்கு வாக்களித்தனர். அவ்வாறான தகுதி படைத்த ஒருவர் கூறும் சமாதானத்தை ஏற்க மறுத்து போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தப் போவதாகப் பிரகடனம் செய்தனர். ஆனால் அரசு நியமித்த ஆளுநர் சூம் மந்திரக் காளி பாணியில் ஏதோ சொன்னதும் ஆமாம் சாமி அப்படியே ஆகட்டும் என்று கலைந்து சென்றனர். போராட்டம் கோவிந்தா. என்ன நோக்கத்திற்காக போராட்டம் ஆரம்பிக்கப்பட்டதோ அது காணாமல்ப் போய்விட்டது.

இதேபோன்றே வித்தியா சிவலோகநாதன் விவகாரத்திலும் நிலைமை தலைகீழாகியது. உலகையே உலுக்கிய இந்த மோசமான விவகாரத்திற்கு எதிரான கன்னியாஸ்திரிகள் உட்பட பெண்குலமே திரண்டெழுந்தது. சுவிஸ் குமார் காவல்துறையினரின் பிடியில் இருந்து கொழும்புக்குத் தப்பியோடியது எவ்வாறு? என்பதை ஊகிக்க புலனாய்வு அறிவு ஒன்றும் தேவையில்லை. உணர்ச்சிவசப்பட்ட இளைஞரின் கவனத்தைத் திருப்புவது அப்படியொன்றும் கடினமான விடயமாக அமையவில்லை. முன்னணியில் நின்று கல்வீச்சை ஆரம்பித்தது. நீதிமன்றத் தாக்குதலுக்கு தலைமை தாங்கியது யார். என்ற கேள்வியை வேதாளம் விக்கிரமாதித்தனிடம் கேட்டிருந்தால் பதில் சொல்ல முடியாத நிலையே தோன்றியிருக்கும். முன்னுக்கு நின்று கல்லெறிந்தவன் அந்த எதிர்ப்பு நடவடிக்கைகளில் பங்குபற்றியவர்-களைப் பிடித்துக் கொண்டிருந்தான் என்பது இவ்விவகாரம் தொடர்பாக கைதான பலரது கருத்து.

நீதிமன்றத் தாக்குதல் தொடர்புடையோர் கைது. பலருக்கு இன்னமும் பிணை கிடைக்கவில்லை போன்ற விடயங்கள் அந்தக் கூட்டுப் பாலியல் வன்புணர்வு கொலைக் குற்றவாளிகள் விடுவிக்கப்பட்டாலும் இவர்கள் விடுவிக்கப்பட மாட்டார்களோ என்று பலரையும் எண்ண வைத்துள்ளது. அத்துடன் வெகுஜனப் போராட்டங்களில் கலந்து கொள்ளும் சமூக ஆர்வலர்களைப் பின்னடைய வைத்துள்ளது. குறிப்பாகப் பெண்கள் இதுபோன்ற போராட்டங்களில் இனி பெருமளவில் கலந்துகொள்வது கேள்விக்குறியே.

போராட்டத்தை ஒழுங்குபடுத்து-பவர்கள் யார் வன்முறையில் ஈடுபடமாட்டார்கள் என்பதற்கு யார் உத்தரவாதம் தருவது என்பதெல்லாம் கேள்விக்குறியாக இருக்கையில் மக்கள் பங்களிப்பு பெருமளவில் எதிர்பார்க்க முடியாது என்பது கசப்பான உண்மை. கைதிகள் தினத்தன்று நடைபெற்ற போராட்டங்கள் இதனையே எமக்குச் சுட்டிக்காட்டுகின்றன.

இந்நிலையிலும் செயற்திறன் அரங்கம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என்பனவற்றின் செயற்பாடுகள் மக்களின் கவனத்தை ஈர்த்தன. இயல்பாகவே தமது பங்களிப்பை நல்க வைத்துள்ளன. சர்வதேச விசாரணை முடிந்துபோன விவகாரம் என்று சட்டத்தரணி சுமந்திரன் சொன்னதை முன்னாள் உயர்நீதிமன்ற நீதியரசர் விக்னேஸ்வரன் நிராகரித்திருந்தார். சுமந்திரன் சொன்னதை தாமும் ஏற்கவில்லை என்பதை நல்லூர் திருவிழாக் காலப் பகுதியில் அங்கு கையொப்பமிட்ட ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் தெளிவாக எடுத்துரைத்தனர். இது சுமந்திரனுக்கு வாக்களித்தோரின் தொகையை விட இரண்டு மடங்குக்கு அதிகம். மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ள முயற்சிப்பதை வரவேற்கலாம்.

இதேபோல செயற்திறன் அரசாங்கம் சமகால நிகழ்வுகள் தொடர்பான பல ஆற்றுகைகளை நிகழ்த்தியிருந்தது. மக்களை விழித்தெழ வைக்கும் இம்மாதிரியான செயற்பாடுகள் வரவேற்கத்தக்கவை. வெகுஜனப் போராட்டங்கள் மூலம் செய்ய வேண்டிய சொல்ல வேண்டிய செய்திகளை இந்த ஊடகம் மூலம் மேலும் பரவலாக்கலாம். அது மக்களின் போராட்டங்களைத் திசை திருப்ப முயல்வோருக்கு இது நீறு பூத்த நெருப்பு என்ற செய்தியைச் சொல்லும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வியல் 71

# தாம்பத்திய துரோகங்கள்

(வி. என். சந்திரகாந்தி)



கணவனும் மனைவியும் மனத்தால் ஒன்றுபட்டு நல் அறம் பேணி நடாத்தும் குடும்ப வாழ்க்கையே இனிய தாம்பத்தியமாகும்! திருக்குறளின் அறத்துபாலில் அதிகாரம் 05 முதல் அதிகாரம் 24வரை இல்லற இயல் பற்றி கூறுகின்றது. ஒவ்வொரு அதிகாரமும் இல்லாளோடு சேர்ந்து வாழ்தலின் சிறப்பை வலியுறுத்துகின்றன. தாம்பத்திய வாழ்க்கையை ஆரம்பிப்பவர்கள் கட்டாயமாக இல்லற இயலில் கூறப்பட்ட இருபது அதிகாரங்களையும் கற்றுத்தெரிந்துகொண்டால் நிச்சயமாக அவர்களது வாழ்க்கை சிறப்புறும். ஆனால் இன்று நிலைமையோ தலைகீழ்,!

என்னதான் இன்று நடக்கின்றது□? பாலியல் வன்முறைக்கு அடுத்தபடியாக தாம்பத்திய துரோகங்கள் தான் பத்திரிகைகளை நிறைக்கின்றன.

இதற்கான பிரதான காரணமாக விளங்குவது கணவன் மனைவியிடையே புரிந்துணர்வு இல்லாமையாகும். கணவனானவன் மனைவி மேலும் மனைவியானவள் கணவன் மேலும் அன்பு பாராட்டுபவர்களாக இருக்கவேண்டும். இருவருமே அறத்தில் நம்பிக்கை வைப்பவர்களாக இருந்தால் அவர்களுக்குள் பிரிவு ஏற்படாது.

எமது சமூகம் காதல் கலியாணத்தில் நம்பிக்கை வைப்பதில்லை. அன்பின் வழியது உயர்நிலை என்று திருவள்ளுவரே கூறியுள்ளார். இதிகாசங்-களும் சங்க கால இலக்கியங்களும் மனமொருமித்த காதலையே சிறப்பித்து கூறியுள்ளன. ஆனால் இன்றுநடக்கும் விவாகங்களோ அனேகமாக பேச்சுவார்த்தை கலியாணமாகவோ கட்டாய கலியாணமாகவோ சில சமயங்களில் திடீர் கல்யாணமாகவோ நடந்தேறுகின்றன. அதனால் கணவன் மனைவி இருவருமே திருமணத்துக்கு பின்னரே ஒருவரை ஒருவர் சந்திக்கின்றனர். திருமணத்தின் முன் அவர்களது சிநேகிதங்களும் பழக்கவழக்கங்களும் வெவ்வேறானவை. ஒருவரது எதிர்பார்ப்புக்களுக்கு மாறாக மற்றவர் நடக்கும் போது உறவில் முறிவு ஏற்படுகின்றது. அதனால் பழிவாங்கும் உணர்வும் விவாகரத்துக்கான கோரிக்கையும் உண்டாகின்றன.

அடுத்து ஒரு குடும்பம் மகிழ்ச்சியாக வாழ்வதில் பண வருவாய் பிரதான இடம் வகிக்கின்றது. நிறைந்த வருவாய் உள்ள குடும்பங்களில் வசதியும் ஆடம்பரமும் கொண்டாட்டங்களும் அரசோச்சுகின்றன சிக்கலில்லாமல் குடும்பத்தை நடத்திச் செல்லக்கூடியதாக இருக்கிறது. அளவுக்கதிகமான வருவாய் தவறான சுகபோகத்தில் நாட்டத்தை உண்டு பண்ணி விடுகின்றது. இந்நாட்களில் பெண்களும் தொழிலுக்கு செல்கின்றார்கள். அதனால் அவர்கள் கையிலும் காசு பிழங்குகின்றது. தாம் நினைத்ததை செய்கின்றார்கள். திருக்குறளில் "பிறர் இல் விழையாமை" என்று ஒரு அதிகாரம் வருகின்றது. அது ஆண்கள் மற்றொருவன் மனைவியை நாடுவதை சாடுகின்றது. அன்று பெண்கள் வீட்டில் இருந்து குடும்பம் நடாத்தினார்கள். எனவே பிற ஆடவரை அவர்கள் நாடுவர் என வள்ளுவர் கருதவில்லை. இன்றோ பிரச்சனை மறுவளம். பெண்களும் ஆண்கள் போல சுதந்திரம் எடுத்துக்கொண்டு அனைத்து காரியங்களையும் புரிகின்றார்கள். பிற ஆண்களுடன் நட்பை ஏற்படுத்திக் கொள்கின்றார்கள். எனவே பழி, பாவம். அச்சம், பழி நான்கும் அவர்களையும் சாருகின்றது.

வள்ளுவரும் கருதாத இந்நிலை பெண்களுக்கு உருவாக முக்கியமாக இரண்டு காரணங்களை கூறலாம். ஒன்று கணவன் தவிர்ந்த பிற ஆடவரிடம் உதவி பெறநேர்தல், இரண்டாவது எதிர்பாலாருடன் நீண்டநேரம் தனிமையில் இருக்கவும் பயணம் மேற்கொள்ளவும் சந்தர்ப்பம் கிட்டுதல், இந்த இரண்டு சந்தர்ப்பங்களும் பெண்களை எல்லை கடக்க வைப்பதுடன் கணவனுக்கு துரோகம் இழைக்கவும் செய்கின்றன.

நாம் எல்லோருமே ஒரு உண்மையை தெரிந்து கொண்டு அதை எமது வசதிக்காக மூடி மறைத்துக் கொண்டும் இருக்கின்றோம். அதாவது திருமண பந்தத்தில் இணைந்து கொண்ட தம்பதிகள் நீண்ட காலம் ஒருவரை ஒருவர் பிரிந்திருப்பது என்பது அசாத்தியம். பல ஆண்கள் வருடக்-கணக்கில் வெளிநாடுகளில் தனித்திருந்து பணம் சம்பாதிக்கின்றார்கள். அவனது துணைவி ஊரில் தனித்தோ உறவினருடனோ வாழ்கிறாள். அதே போன்று பெண்கள் டுபாய் போன்ற நாடுகளுக்கு பணிப்பெண்ணாக செல்வதும் கணவன் ஊரில் பிள்ளைகளுக்காக காவல் இருப்பதும். இந்த இரண்டு நிலைகளுமே தாம்பத்திய துரோகத்துக்கு அச்சொட்டான சந்தர்ப்பங்களை வழங்கும் என்பதற்கு எந்த ஒரு மாற்றுக் கருத்தையும் முன்வைக்க இயலாது!

இன்று நாகரீகம் உச்சத்தை அடைந்துவிட்டது சமூகங்கள் கிராம வாழ்க்கையில் இருந்து விடுபட்டு நகர வாழ்கைக்கு மாறிவிட்டன. சின்னச் சின்ன விடயங்கள் கூட குடும்பங்களை சிதைத்து தாம்பத்திய துரோகத்துக்கு தூபமிடுகின்றன. கணவன் மனைவியை கொலைசெய்து விட்டு தப்பிச் சென்றான். மனைவி மாற்றானுடன் இணைந்து கணவனை கொலை செய்தாள். இப்படியான செய்திகள் தான் இன்று பத்திரிகைகளை நிறைக்கின்றன!

இனி திரைப்படங்கள் எமது வாழ்க்கையின் ஒரு அம்சமாகிவிட்டது. சின்னத்திரை எங்கள் வீட்டுக்குள்ளேயே நுழைந்துவிட்டது. ஒருவர் மற்றவருக்கு செய்யும் துரோகத்தை எப்படி எப்படியெல்லாம் நியாயப்படுத்துகிறார்கள் என்று பார்க்கவேண்டும்.

அதே போன்று சினிமாவை எடுத்தால் கதாநாயகனுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட கதாநாயகிகள் இருந்தால் தான் படம் சுவைக்கும் என்ற ஒரு நிலை! சினிமாவும் சின்னத்திரையும் சமூகத்திற்கு செய்யும் சேவையை பாருங்கள். இளம் யுவதிகளை மட்டுமன்றி திருமண பந்தத்தில் இணைந்த பெண்களையும் தவறாக வழிநடாத்திக் கொண்டு தயாரிப்பா-ளர்கள் கோடிக்கணக்கில் பணம் சம்பாதிக்கிறார்கள். குடும்பங்களின் உறவுதான் படு பாதாளத்தை நோக்கி செல்லும் நிலையில் உள்ளது.

கையடக்க தொலைபேசி, இணையம், முகநூல் என்று புதிய வரப்பிரசாத-ங்கள் இளைஞர்கள் யுவதிகளை மட்டுமன்றி திருமண பந்தத்தில் இணைந்தவர்களையும் புதிய யுகத்தில் இணைத்துள்ளது. எந்த இடத்திலும் எந்த நேரத்திலும் விரும்பியவர்களுடன் எவரும் அறியாமல் கருத்து பரிமாற கையடக்கத் தொலைபேசி அபார வசதியை வழங்குகின்றது. இணையத்தில் முகநூல் மூலம் நாள் முழுவதும் "சற் பண்ணிக்கொண்டே இருக்க-லாம். நூற்றுக்கணக்கான நண்பர்களுடன் இரகசிய முறையில் சிநேகத்தை வைத்துக்கொள்ள முடியும் முகநூல் மூலம் பல காதலர்கள் இணைகின்றார்கள். பல காதல் முறிவுகளும் சம்பவிக்கின்றன. ஒருவரை ஒருவர் நேரில் சந்திக்காமலும் எந்த உத்தரவாதமும் இல்லாமலும் உண்டாகும் காதலை என்னவென்பது? திருமண பந்தத்தில் இணைந்தவர்களும் தாம் மணம் முடித்ததான உண்மையை மறைத்து காதல் விவகாரங்களை வளர்க்கின்றார்கள். காதல் மோகத்தில் சிக்குண்டு பல இளம் பெண்கள் தமது படங்களை "மெசேச்" செய்து விடுகிறார்கள். அவையெல்லாம் அந்தரங்க விசயங்கள் என்று அவர்கள் நம்பினாலும் அவை கணனியின் வன்தட்டுக்களிலும் கையடக்க தொலைபேசிகளின் நினைவகத்திலும் அழிக்கமுடியாதபடி பதிந்து விடுகின்றன. கணனியோ, கையடக்கத் தொலைபேசியோ ஒரு நாள் பழுதடைந்து திருத்துவதற்காக செல்லும்போது திருத்துனரால் அவற்றை பார்க்கமுடிவதுடன் பல படங்கள் ஏன் "வீடியோ கிளிப்ஸ்" கூட விற்பனை செய்யக்கூடிய சந்தர்ப்பம் உண்டாகின்றன. இணையமும் கையடக்கத் தொலைபேசியும் இந்த விஞ்ஞான யுகத்தில் வளரும் வேகத்தை பார்த்தால் நாளாவட்டத்தில் தொடு உணர்ச்சி தரும் அளவில் கூட அவை வளர்ந்து விடலாம். அப்போதெல்லாம் நாம் தாம்பத்திய துரோகம் பற்றி பேசிக்-கொண்டிருக்க வெல்லாம் முடியாது போகலாம்!

விஞ்ஞான வளர்ச்சியில் கைபேசி இணையம் முகநூல் ஆகியன புதிய வரவுகளாக பதியப்பட்டுள்ளன. அவற்றால் உண்டான சமூக வலைப்பின்னல் மக்களுக்கு பெரும் சுதந்திரத்தை மட்டுமன்றி சுகபோக வாழ்கையிலும் ஈடுபாட்டை உண்டு பண்ணிவிட்டது. எது சரி எது பிழை என்று தெரிந்து கொள்வதற்கு சில படிப்பினைகளை அவர்கள் பெறவேண்டும். அப்போது மோகம் தணியும் ஆணுக்கும் • பெண்ணுக்கும் நம்பகத்தன்மையின் அவசியம் புரியும். மனைவி தவிர்ந்த பிற பெண்கள் பக்கம் சாயும் கணவனை எந்த பெண்ணும் நேசிக்கமாட்டாள். ஒரு பெண்ணில் அன்பும் இனிய சொல்லும் தான் ஒரு ஆணை கட்டிப்போடுகின்றது. கணவனும் மனைவியும் புரிந்துணர்வுடனும் விட்டுக்கொடுக்கும் மனப்பாங்குடன் ஒருவர் மேல் ஒருவர் நிபந்தனைகள் விதிக்காமலும் வாழ்வதொன்றே தாம்பத்திய துரோகங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும்.



# ஆத்மா காவு கொள்தல் உண்மையா?




திருமலையில் இரு பெண் குழந்தைகளின் தாயொருவர் தற்கொலை செய்து கொண்டதை அடுத்து நிகழ்ந்தவை....

தனது கணவருடன் ஏற்பட்ட மனக்கசப்பினால் தன் கணவனை அச்சமடையச் செய்வதற்காக **** இனை உட்கொண்டாள். பின்னரே அவளுக்கு அவளது குழந்தைகள் ஞாயகத்திற்கு வந்துள்ளனர். உடன் ஓடிச் சென்று நித்திரையில் இருந்த கணவனை எழுப்பி நடந்ததைக் கூற, அதை நம்பாத கணவன் நீ அப்படி எல்லாம் செய்யக் கூடியவள் இல்லை. பேசாமல் சென்று படு என்று கத்திவிட்டான். காலைப் பிடித்தும் கதறிப் பார்த்தாள் அவனை அவளால் அசைக்க முடியவில்லை. இது சரிவராது என எண்ணியவள் தன் தொலைபேசியில் தன் தமையனுடன் கதைக்க முற்பட்டாள். அவள் பட்ட வேதனையை கண்ணுற்ற கணவன் உண்மை நிலையை புரிந்து கொண்டு அவளை வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றான்.

வைத்தியர் அவளுக்கு பிரச்சனை ஏதும் இல்லை என கூறி சில மருந்துகளை கொடுத்தனர்.

தன் பிடிவாதத்தால் ஏற்பட்ட சிக்கலை உணர்ந்து கணவனிடம் மன்னிப்புக் கோரினாள். அவனும் அதை பெரிது படுத்தாமல் மிகவும் அன்பாக தன் கோபம் மறந்து அவளுடன் கொஞ்சிக் குலாவினான். விதி யாரை விட்டது. கதைத்துக் கொண்டிருந்தவள் திடீரென வாயால் நுரை தள்ளி மூச்சுப் பேச்சற்றுப் போனாள். அவ்வளவும் தான்.... மூச்சடங்கியது.

அவளது முதல் குழந்தைக்கு ஐந்து வயதும் இரண்டாமவளுக்கு ஒரு வயதுமாகும். அவளுக்கு மிகவும் பிடித்த அவள் கணவனின் தங்கை யாழ்ப்பாணத்தில் வசித்து வந்தாள்.

சம்பவம் நடந்த விடியற்சாமம் 3 மணி அளவில் யாழ்ப்பாண வீட்டில் கதவு தட்டும் சத்தம் கேட்டது. (தங்கையின் பெயர் - வாசகி) வாசகி என அழைத்து, என்ன இன்னமும் தூங்குகிறாய்? என்ட பிள்ளைகள் இரண்டும் தனிய இருக்கிறாங்க கெதியா போ. ஒரு பிள்ளைய நான் கொண்டு போயிருவன், நீ தான் மூத்தவள பார்த்துக் கொள்ளனும் என கூறப்பட்டது. திடுக்கிட்டெழுந்த வாசகி உடன் தன் அண்ணனுக்கு அழைப்பு விடுத்தாள். கண்ட கனவு என்னவோ உண்மை தான்.

அவளும் மரண வீட்டிற்கு வந்து சேர்ந்தாள். மரண குறிப்பில் அவளது இரண்டாவது குழந்தையின் மீது மிகுந்த மோகத்துடன் அந்த இறந்த ஆத்மா இருப்பதாகவும் குழந்தையை தன்னுடன் கொண்டு செல்ல முயல்வாள் எனவும் கூறப்பட்டது.

இதைக் கேட்டதும் வாசகிக்கு படபடத்தது. தான் கண்ட கனவை தன் கணவருக்குச் சொன்னாள்.

அன்றிலிருந்து சரியா மூன்று மாதங்கள் அவ் இரண்டாம் குழந்தைக்கு எத்ததை எத்தனை கண்டங்கள் வந்து விலகின.

ஒரு பக்கமாக படுத்திருக்கும் அக்குழந்தை திடீரென தலையை மாத்திரம் திருப்பி எங்கோ விறைத்துப் பார்க்கும். பார்க்கும் இடத்தில் ஒரு பொம்மை நிச்சயம் காணப்படும். பின் அக்குழந்தை அருகே ஒரு பொம்மையையும் வைப்பதில்லை. அதன் பின் தேரை ஒன்று நிற்கும். இவ்வாறு அந்த ஆத்மா விடாது முயற்சி செய்தது.

பின் வீட்டு வாசலில் பொம்மை ஒன்றின் மூலம் அவ் ஆத்மா கட்டப்பட்டு ஆறு அடி ஆழத்தில் புதைக்கப்பட்ட பின்பே அவ்வீடு வழமைக்குத் திரும்பியது. ஆறு மாதத்தின் பின்னரே அவ் ஆத்மாவிற்கான சடங்குகள் நிறைவேற்றப்பட்டது.

(தன்யா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமுரசு



## திரை விமர்சனம்

### சுசீந்திரனின் இயக்கத்தில்

# "பாயும் புலி"

### விஷால், காஜல் அகர்வால் நடிக்கும்



மதுரையில் கட்டப்பஞ்சாயத்து செய்து வருகிறது ஒரு பெரிய கும்பல், அதில் யாருக்கும் தெரியாமல் ஊரில் இருக்கும் பெரிய பணக்காரர்களாக பார்த்து மிரட்டி பணம் பறிக்கிறது. பணம் கொடுத்தால் உயிர், இல்லையெனில் சின்ன பாலத்திற்கு அடியில் பிணமாக கிடப்பார்கள். அனைவரும் உயிருக்கு பயந்து பணத்தை கொடுக்க, அதே ஊரில் இவர்களை திட்டமிட்டு பிடிக்கும் காவல்துறை அதிகாரி ஒருவரை நடுரோட்டில் கொல்கிறார்கள். இத்தனை அட்டகாசம் நடக்கும் ஊரில் விஷால் காவல்துறை அதிகாரியாக பதவி ஏற்கிறார்.

ஆனால், 10 நாட்களுக்கு முன்பே ஊருக்கு வந்து காஜலை சந்தித்து காதலில் விழுகிறார். காதலித்து டூயட் பாடுவார் என்று பார்த்தால், திடீரென்று யாருக்கும் தெரியாமல், பணம் பறிக்கும் கும்பலை என்கவுண்டர் செய்து விட்டு "இது ஒரு ரகசிய ஆப்ரேஷன்" என்கிறார். இந்த டுவிஸ்ட் முடிவதற்குள், இவர் கொன்றது தலைவன் இல்லை, இந்த கும்பலுக்கு தலைவன் இவரா? என்று கேட்க வைத்து, அடுத்தடுத்து அந்த கும்பலை எப்படி அழித்தார்? என மிகவும் உணர்ச்சிப்பூர்வமாக சுசீந்திரன் கூறியிருப்பதே மீதிக்கதை.

காஜலுக்கு நான் மகான் அல்ல படத்தை விட குறைந்த கதாபாத்திரம் தான், அதிலாவது காதல் காட்சிகளில் நம்மை கவர்ந்தார். இதில் அதில் கூட கவரவில்லை. கதைக்குள் இவரை கொண்டு வரவேண்டும் என்பதற்காக சில காட்சிகள் இருக்கின்றது. சூரி தன் மனைவியிடம் சிக்கி தவிப்பதை விஷாலிடம் கூறும் காட்சிகளில் எல்லாம் தியேட்டரில் சிரிப்பு சத்தம் அடங்க சில நேரம் ஆகிறது. படத்தின் கடைசி 45 நிமிடம் ஜெட் வேகத்தில் செல்கின்றது. ஆனாலும் படத்தின் முதல் பாதி கிட்டத்தட்ட படம் ஆரம்பித்து 40 நிமிடம் வரை கதைக்குள் செல்லாமல் இருப்பது, காஜல் அகர்வால் படத்தில் எந்த இடத்திலும் ஒன்றவே இல்லை.

மொத்தத்தில் ஆரம்பத்தில் புலி தடுமாறினாலும் இரண்டாம் பாதியில் தான் நினைத்த இடத்தை குறி வைத்து பாய்ந்துள்ளது.

ஆத்விக்கின் இயக்கத்தில் வெளியான "திரிஷா இல்லைன்னா நயன்தாரா" திரைப்படத்தின் திரைவிமர்சனம் அடுத்த வார இயத்தில்......



## அவருடன் மட்டும் தான் கதைப்பாராம்

மாயா படத்தின் மூலம் நயன்தாரா மார்க்கெட் பல மடங்கு உயர்ந்துள்ளது. படம் அனைத்து தரப்பினரையும் கவர்ந்துள்ளதால் படக்குழு மிகவும் சந்தோஷத்தில் உள்ளது. இது மட்டுமின்றி இப்படத்திற்கு பல திரைப்பிரபலங்கள் தங்கள் பாராட்டுக்களை தெரிவித்து வருகின்றனர். ஆனால், நயன்தாரா மட்டும் அமைதியாகவே தான் உள்ளாராம். ஆனால், இயக்குனர் விக்னேஷ் சிவனிடம் மட்டும் கலகலப்பாக சிரித்து பேசி வருவதாக கிசு கிசுக்கப்படுகின்றது.

## சேவையாளன் கருணாகரன்

சிறுத்தை, பையா, அயன் என தொடர் வெற்றிப்படங்களில் நடித்தவர் தமன்னா. இவர் நடிப்பில் சமீபத்தில் வந்த பாகுபலி கூட மெகா ஹிட். இதை தொடர்ந்து வாசுவும் சரவணனும் ஒன்னா படிச்சவங்க படம் இவருக்கு கொஞ்சம் தடுமாற்றத்தை கொடுத்துள்ளது. ஆனால், பாகுபலிக்கு பிறகு தன் மார்க்கெட் உச்சத்தை தொடும் என்று கனவில் இருந்தார் அவருக்கு இன்னமும் ஒரு படமும் கிடைக்கவில்லையாம், இதனால், உச்சக்கட்ட கோபத்தில் இருக்கிறாராம் தமன்னா.





## மீண்டும் "ரெட்" அஜித்

அஜித் நடிப்பில் ராம் சத்யா (தற்போது சிங்கம்புலி) இயக்கத்தில் 2002ம் ஆண்டு வெளிவந்த ரெட் படம் தோல்வியடைந்தாலும், அஜித்தின் ரசிகர்கள் பலம் அதிகரிக்க இப்படம் ஒரு காரணம் என்பதை தவிர்க்க முடியாது. இப்படத்தில் அஜித் படம் முழுவதுமே மொட்டையடித்தது போலே நடித்திருப்பார். தற்போது மீண்டும் அஜித் ரெட் கெட்டப்பிலேயே தல-56 படத்தில் ஒரு சில காட்சிகளில் நடிக்கவுள்ளாராம்.

## சேவையாளன் கருணாகரன்

ரஜினிகாந்த் நடிப்பில் உருவாக உள்ள "கபாலி" திரைப்படத்தின் படப்பிடிப்பு சென்னையில் கடந்த வியாழக்கிழமை தொடங்கியது. லிங்கா படத்துக்குப் பிறகு ரஜினிகாந்த் நடிக்கும் இந்தப் படத்தை வி.கிரியேஷன்ஸ் சார்பில் கலைப்புலி எஸ்.தாணு தயாரிக்கிறார். பா.ரஞ்சித் இயக்கும் இந்தப் படத்துக்கு சந்தோஷ் நாராயணன் இசையமைக்கிறார். நடிகைகள் ராதிகா ஆப்தே, தன்ஷிகா, நடிகர் பிரகாஷ்ராஜ் உள்ளிட்டோர் இந்தப் படத்தில் முக்கிய கதாபாத்திரங்களை ஏற்று நடிக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுப் பையன்

INFOMATION TECHNOLOGY

MOB

## LG CLASS




ாது LG Class எனும் ப்பேசியினை இம்மாதம் திகதி அறிமுகம் ள்ளது.
id 5.1.1 Lollipop தளத்தில் செயற்படக்- lக் கைப்பேசியானது 5.7 அளவு, 1920 x 1080 Pixel Resolution உடைய தொடுதிரையினைக் கொண்டு-ள்ளதுடன், 1.5GHz வேகத்தில் செயல்படக்கூடிய Qualcomm Snapdragon 615 Processor, பிரதான நினைவகமாக 2GB RAM, 8GB சேமிப்பு நினைவகம் என்பவற்றினைக் கொண்டுள்ளது.
இவை தவிர 12 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமெரா, 5 மெகாபிக்சல்களை உடைய வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவற்கான கமெரா என்பவற்றினையும் உள்ளடக்கியுள்ளது.

## விபத்துக்களிலிருந்து பாதுகாக்கும் ஜாக்கெட்



ாட்டார் சைக்கிள்களில் பணிக்கும்போது ஏற்படும் பத்துக்-களிலிருந்து துகாப்பினை வழங்குவதற்காக sano 1000 எனும் ஜாக்கெட்டினை ainese நிறுவனம் பாரித்துள்ளது.
..பார் பேக் தொழில்நுட்பத்தினை அடிப்படையாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டள்ள இந்த ஜாக்கெட்டில் ON/OFF சுவிட்ஜ் மற்றும் அணிபவரின் இயல்பை அறியக்கூடிய LED மின்குமிழ் என்பன காணப்படுகின்றன. 15 வருட அனுபவத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ள இந்த ஜாக்கட்டில் GPS தொழில்நுட்பமும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## விரைவில் Dis Like பட்டன்


OTHER

பேஸ்புக்கில் Like பட்டனை போன்று விரைவில் Dislike பட்டனும் அறிமுகம் செய்யப்படும் என அதன் நிறுவனர் மார்க் ஸக்கர்பெர்க் தெரிவித்துள்ளார். அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் பேஸ்புக் தலைமையகத்தில் நடந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சோக நிகழ்வுகள், அசம்பாவிதங்கள் ஏதும் நடக்கும் போது Like பட்டன் பொருத்தமாக இல்லை, எனவே Like பட்டனை தாண்டி உணர்வுகளை பகிர்ந்து கொள்ள விரைவில் சோதனை முயற்சியாக அறிமுகம் செய்யப்பட்டு செயல்பாட்டுக்கு வரும் என தெரிவித்துள்ளார்.

## மின்சக்தியில் இயங்கும் முதலாவது செயற்கைக்கோள்

ABS–3A எனும் செயற்கைக் கோள் ஆனது முற்று முழுதாக மின் சக்தியில் இயங்கக்கூடிய உலகின் முதலாவது செயற்கைக்கோள் என Boeing நிறுவனம் அறிவித்துள்ளது. இந்த செயற்கைக் கோள் ஆனது பேர்முடாவை தளமாகக் கொண்டுள்ள செயற்கைக்கோள் வலையமைப்பின் ஊடாக இயக்கப்படவுள்ளதுடன், தொலைக்காட்சி, இணையம் மற்றும் தொலைபேசி சேவை என்பவற்றினை உலகெங்கும் வழங்குவதற்கு பயன்படுத்தப்படவுள்ளது. இதேவேளை முன்னைய செயற்கைக் கோள்கள் அனைத்தும் பெரும்பாலும் இரசாயன சக்தியில் இயங்கக் கூடியவையாகவும், அவற்றில் பகுதியாகவே மின்சக்தி பயன்படுத்தப்-பட்டு வந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
ஆனால் இந்த செயற்கைக் கோள் ஆனது செனன் அயனை (Xenon-Ion) அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்படும் மின் சக்தியல் இயங்கக்கூடியதாக இருப்பதுடன், இது இரசாயன சக்தியில் இயங்கும் செயற்கைக் கோள்களை விட 1000 மடங்கு வினைத்திறன் வாய்ந்தது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## செயற்கையான முறையில் மிகப் பெரிய அலையினை உருவாக்கி சாதனை



கடலில் இயற்கையாக ஏற்படும் அலைகள் மிகவும் இராட்சத உயரம் கொண்டவையாக இருக்கும். ஆனால் செயற்கையான முறையில் இவற்றுக்கு ஒப்பான உயரம் கொண்ட அலைகளை உருவாக்குவது மிகவும் கடினம்.
எனினும் நெதர்லாந்திலுள்ள னுநடவயசநள எனும் ஆய்வு நிறுவனத்தைச் சேர்ந்த ஆய்வாளர்கள் செயற்கையான முறையில் இதுவரை உருவாக்கப்பட்ட அலைகளையும் விட உயரம் கூடிய அலையை உருவாக்கி சாதனை படைத்துள்ளனர். இதற்காக 9 மில்லயன் லீற்றர் நீரைக் கொள்ளக்கூடியதும் செக்கனுக்கு 1,000 லீற்றர் நீரை வெளியேற்றக்கூடியதுமான மிகப் பெரிய கொங்கிரீட் நீர்த்தாங்கியில் நீரை நிரப்பி செயற்கையாக வடிவமைக்கப்பட்ட 300 மீற்றர் நீளமான ஓடை ஒன்றினுள் நீரை பாய்ச்சியுள்ளனர்.
இதன்போது 10. மீற்றர்கள் உயரம் வரை எழுந்துள்ளது.

## எழுத்தில் நேரத்தைக் காட்டும் கடிகாரம்




இலக்க முறையினை அடிப்படையாகக் கொண்ட டிஜிட்டல் கடிகாரம் மற்றும் முட்களின் அடிப்படையில் நேரத்தினைக் காண்பிக்கும் அனலொக் கடிகாரங்கள் தற்போது பாவனையில் உள்ளன.
இவ்வாறிருக்கையில் எழுத்து வடிவில் நேரத்தினை காண்பிக்கக்கூடிய கடிகாரம் உருவாக்கப்பட்டுள்ளது. இதில் ஒவ்வொரு இலக்கங்களுக்குமான ஆங்கில சொற்களை வெளிப்படுத்தும் மின்குமிழ்கள் பொறிக்கப்பட்டுள்ளன. குறித்த ஒரு நேரத்திற்கான சொற்களுக்குரிய மின்குமிழ்கள் ஒளிர்வதன் மூலம் இக் கடிகாரம் செயற்படுகின்றது.

## இலவச Wi-Fi

உலகின் பல பகுதிகளிலும் வியாபித்திருக்கும் கூகுள் ஆனது தொடர்ந்தும் தனது சேவை எல்லைகளை அதிகரித்து வருகின்றது. தவிர வேறு பல நிறுவனங்-களுடனும் இணைந்து தனது சேவையை விஸ்தரித்து வருகின்றது. இவற்றின் ஒரு பகுதியாக தற்போது இந்தியாவின் ரயில்வே திணைக்களத்துடன் இணைந்து சுமார் 400 இடங்களில் முற்றிலும் இலவசமான முறையில் Wi-Fi இணைய இணைப்பினை வழங்க முன்வந்துள்ளது.
1,000 Mbps வேகம் கொண்ட இவ் இணைப்புக்கள் அனைத்தும் புகையிரத நிலையங்களில் வழங்கப்படவுள்ளது. இவ்வேகமானது சாதாரண இணைய இணைப்புக்களை விடவும் 10 மடங்கு வேகம் உடையதாகும். இதன் ஊடாக நாளாந்தம் புகையிரதத்தில் பயணம் செய்யும் சுமார் 20 மில்லியன் மக்கள் பயன்பெறுவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.


## கூகுள் டாக்ஸில் புதிய வசதி

இணையம் வழியாக டைப் செய்து ஆவணங்களை உருவாக்கிக் கொள்ள உதவும் "கூகுள் டாக்ஸ்" சேவையில் வாய்ஸ் டைபிங் எனப்படும் குரல் வழி டைப்பிங் வசதி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
எனவே இனி கூகுள் டாக்சில் டைப் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. டைப் செய்ய வேண்டிய வாசகங்களை குரல் வழி டிக்டேட் செய்தாலே போதுமானது. பிரவுசரின் செட்டிங் பகுதிக்குச் சென்று வாய்ஸ் டைப்பிங் அம்சத்தைத் தெரிவு செய்வதன் மூலம் இந்த புதிய வசதியை பயன்படுத்திக் கொள்ள முடியும். இதன் பிறகு பேசத் தொடங்கினால் போதும் எழுத்துக்கள் தானாக டைப் ஆகும். ஆங்கிலம் உள்ளிட்ட 40 மொழிகளில் இந்த வசதி அறிமுகமாகியுள்ளது. தமிழையும் விரைவில் எதிர்பார்க்கலாம். இது தவிர ஆவணங்களிலிருந்து தொடர்புடைய தகவல்களைத் தேடும் வசதியும் இணைக்கப்பட்டுள்ளது.

## HTML தமிழில்....

## உறுப்புகள் (ELEMENTS) பண்புகள் (ATTRIBUTES)

ஒரு உறுப்பு என்பது தொடக்க குறிஒட்டு, மற்றும் இறுதி குறிஒட்டு, (Starting Tag, End Tag) இரண்டும் சேர்ந்தது தான் என்று சொல்லப்படுகிறது.
<> - இது ஒரு டேக் (குறிஒட்டு) - இதற்கு ஆரம்ப குறிஒட்டு (Starting Tag) என்று பெயர்.
</>- இது ஒரு டேக் (குறிஒட்டு)- இதற்கு முடிவு குறிஒட்டு (End Tag) என்று பெயர். இவை இரண்டையும் ஒரு சேர எழுதி, இடையில் என்ன பொருள் இருக்க வேண்டுமோ அதை எழுதினால் இதற்கு பெயர் உறுப்பு.
<>பொருள்</> - இதற்கு பெயர் உறுப்பு (Elements).
ஒரு முழு HTML உறுப்பானது இவ்வாறு அமையும்.
<b>வணக்கம்</b> இப்போது உறுப்பு (Elements) என்றால் என்ன என்பதை நாம் நன்றாக தெரிந்து-விட்டோம். அதாவது ஒரு ஆரம்ப குறிஒட்டிற்கும், முடிவு குறிஒட்டிற்கும் இடையில் ஏதாவது ஒன்றை (பொருள்) எழுதி முடித்திருந்தால், அதுதான் உறுப்பு என்பது.
மேலும் ஒரு உதாரணம்<I>வணக்கம்</I>
இதையும் ஒரு உறுப்பு (Elements) என அழைக்கலாம்.
இதை தொடர்ந்து பண்புகள் (Attributes) என்ன என்பதை பார்ப்போம்.
HTML இல் முக்கியமானது பண்புகள் (Attributes). இந்த பண்புகள் தான் மிக முக்கியப் பணிகளில் ஒன்றான வலைப்பக்கத்தை அழகூட்ட, எழுத்துருக்களை (வெவ்வெறு எழுத்துருக்களாக) மாற்றி காண்பிக்க, வண்ணங்களை மாற்ற பலவகைகளில் பயன்படப்-போகிறது. இந்த பண்புகளைப் (Attributes) பற்றி இப்பதிவின் ஊடாக காண்போம்.
சாதாரணமாக பண்புகள் என்றால் என்ன? என்பதைப் பற்றி நமக்குத் தெரியும். ஒவ்வொரு பொருளுக்கும் பண்புகள் என்பது உண்டு. அதாவது சக்கரை இனிக்கும். இங்கு இனிப்பு சர்க்கரையின் பண்பு. அதுபோன்றே குறிஒட்டுகளின் (Tags) தன்மைகளை விளக்கிக்கூற இந்த பண்புகளைப் பயன்படுத்தலாம். HTML குறிஒட்டுகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பண்புகளை சேர்க்க முடியும். ஒரு குறிஒட்டில் (டேகில்) பண்புகளைச் சேர்ப்பதன் மூலம் அக்குறிஒட்டு எவ்வாறு தெரிய வேண்டும் அல்லது செயல்பட வேண்டும் என்பதற்கான கூடுதல் தகவல்களை உலவிக்குத் தெரிவிக்க முடியும். பண்புகளின் பெயர் மற்றும் அதன் மதிப்பை சமக்குறியீட்டுடன் (=) கொடுக்க வேண்டும். அதாவது இவ்வாறு இருக்க வேண்டும். <BODY BGCOLOR="green"> இதில் BODY என்னும் குறிஒட்டு (TAG) BGCOLOR எனும் பண்புடனும், green எனும் மதிப்புடனும் கொடுக்கப்பட்டுள்ளது.




நன்றி நண்பர்களே ...!! இதன் தொடர்ச்சி அடுத்த வார இயத்தில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துன்பங்களைத் தீர்க்கும் சனீஸ்வரப் பெருமானின் திருவிழா

**சேனையூர் நிருபர்**

திருகோணமலை மடத்தடி சனீஸ்வரர் ஆலய புரட்டாதிச்சனி விரதமும் வருடாந்த மகா உற்சவமும் எதிர்வரும் 19.09.2015 சனிக்கிழமை அன்று முதல் விரதம் ஆரம்பமாகவுள்ளது. அதனைத் தொடர்ந்து 26.09.2015 03.10.2015 10.10.2015 17.10.2015 என தொடர்ச்சியாக இவ்விரதமும் முதலாவது திருவிழாவும் இடம் பெறவுள்ளது. விசேட தினங்களில் காலை 09 மணிக்கு பெருமானின் விசேட அபிசேகமும் தொடர்ந்து பூசைகளும் தீபாராதனை-களும் இடம்பெற்று பெருமான் காக வாகனத்தில் எழுந்தருளி அடியார்களுக்கு அருள்பாலிப்பார். சனிதோசம் ஏழரைச் சனி அட்டமத்துசனி ஆகியவற்றால் ஆட் கொள்ளப்பட்டவர்-களுக்கு விசேட பூசைகள் நடைபெறவுள்ளது.

## புரட்டாதிச் சனி விரதமும் – பன்னிரு ராசிகளுக்குமான பலாபலன்களும்

நிகழும் மன்மத வருடம் புரட்டாதி திங்கள் 2ஆம் நாள் 2015 செப்ரம்பர் மாதம் 19 ஆந் திகதி "புரட்டாதிச்சனி விரதம்" முதலாம் வாரம் ஆரம்பமாகவுள்ளது. இவ் வருடம் "ஐந்து சனிக்கிழமை" இடம்பெறும். நவக்கிரகங்களுள் முதன்மைக் கிரகமாக விளங்கும் சூரியனுக்கும் சாயா தேவிக்கும் மகனாக பிறந்தவராக புராணக்கதை புகல்கின்றது.

"சனி" சிவனை நோக்கி தவமிருந்து அவரது திருவருளால் பெற்ற பட்டமே "சனி ஈஸ்வரப் பட்டமாகும்" வேறு எந்த கிரகத்திற்கும் ஈஸ்வரப்பட்டம் கிடையாது. நூற்றியெட்டுத் திருநாமங்களால் அர்ச்சிக்கப்படும் சனீஸ்வரன் மேற்கு முகம் நோக்கி காகத்தினை வாகனமாக கொண்டு காட்சியளிப்பதை சனிஸ்வர ஆலயங்களிலும், நவகிரக கூடங்களிலும் காணமுடியும்.

விருட்சிகராசியில் பகையான தன்மையில் இருக்கின்ற சனிபகவான் மகரராசி, இடபராசி, சிம்மராசி ஆகியவற்றை அவரது பார்வை சென்றடையும் இதனால் இந்த ராசியினர் அவசியம் புரட்டாதிச்சனி விரதமிருந்து எள்ளெரித்து ப்ரீதி செய்து கொள்வதுடன் ஸ்ரீ மந் நாராயண மூர்த்தியையும் வழிபடுவது நன்மை பயக்கும் ஏனெனில் பகைத்தன்மையான பார்வையாகும்.

- இனி "சனி சஞ்சாரப்படி" மேடராசியினருக்கு அட்டமத்துச்சனியாகும் இதனால் மரணபயமும் துக்கங்களை அனுபவிக்க நேரலாம்.
- இடபராசியினருக்கு உடல் உபாதைகளையும், கஸ்டங்களையும் ஏற்படுத்தக்கூடும்.
- மிதுனராசியினருக்கு இது நல்ல அமைப்பாகும்.
- கடகராசியினருக்கு ஐந்தாமிடத்தில் சனி இருப்பானாகின்றது. பலவித சேதங்களும் வீண்சச்சரவுகளும் ஏற்படக்கூடும்.
- சிம்மராசியினருக்கு உடற்சுகமும், வீண் விரோதங்களும் வரக்கூடும்.
- கன்னிராசியினருக்கு நன்மை தரக்கூடிய அமைப்பு எனலாம்.
- துலாம் ராசியினருக்கு உடலாரோக்கியம் பாதிப்படைதல் பொருளாதார நஸ்டங்கள் என்பன வரக்கூடும்.
- விருச்சிக ராசியினருக்கு சனி ஜென்மச்சனியாக இருப்பார். இதனால் நிலைக்கேடு அலைச்சல் பிரயாண அசதி என்பன தோன்றக்கூடும்.
- தனுசு ராசியினருக்கு வீண் செலவுகள், நோய், துயர்கள், கவலை என்பன வந்து மறையலாம்.
- மகர ராசியினருக்கு இந்த அமைப்பு நல்ல அமைப்பு எனலாம்.
- கும்ப ராசியினருக்கும் அபகீர்த்தி, வீண்செலவு என்பன ஏற்படக்கூடும்.
- மீன ராசியினருக்கு செய் காரியங்கள் பலிதமாகாது எனலாம்.

இங்கே குறிப்பிட்ட பன்னிரெண்டு ராசிகளது பலன்களையும் சனியின் ஸ்தான அமைப்பின் படி உரைத்தேன். இங்கு குறிப்பிடப்பட்ட ராசிகளிலும் தேவகுருவான வியாழபகவானது பார்வைபடும் 5 - 7 - 9 ஆகிய இடங்களிலுள்ள ராசி வீடுகளான தனுசு, கும்பம், மேடராசியினருக்கு பிரகஸ்பதியின் திருப்பார்வையால் சனிபகவானது கெடு பலன்கள் விலகிவிடும். குரு பார்வை கோடி நன்மை தரும். இது சோதிடக்கூற்று.

இனிப்பொதுவான பலன் அமைப்பு ஆனிமாதத்தின் மேல் காற்று, அகால மழை, மண்சரிவு, விவசாயம் பாதிப்பு, திடீர் விபத்துக்கள் என்பன நடைபெறக் கூடும்.

துலாம், விருட்சிகம், தனுசுக்காரர்களுக்கு ஏழரைச்சனி காலமும், மேட ராசியினருக்கு அட்டமத்துச்சனியும், நடைபெறுகின்றது. சனி தோசம் உள்ளவர்கள் தவறாது எள்ளெண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்து எள்ளெரித்து புரட்டாதி சனி விரதத்தை அனுஸ்டித்து சனிபகவானது அனுகூலம் பெற்றுக் கொள்வதன் மூலம் சனியினது துர்பலன்களில் இருந்து விடுபடலாம்.

---

# இப்படியும் நடக்கலாம்

### விடிய விடிய மாடியில் தொங்கிய காதலன்

சீனாவில் திருமணமான தனது கள்ளக்காதலியை சந்திப்பதற்காக அவரது வீட்டிற்கு சென்றுள்ளார் முன்னாள் காதலன். அங்கு காதலியின் கணவன் திடீரென வந்துவிட்டதால் செய்வ-தறியாது உடனடியாக அறையில் இருந்த ஜன்னல் வழியாக இறங்கியுள்ளார். வேறு எங்கும் நகர முடியாத அவர், இரவு முழுவதும் அந்தப்பகுதியிலேயே தொங்கிக்கொண்டிருந் துள்ளார்.

இந் நிலையில், விடிந்தவுடன் கள்ளக்-காதலியின் கணவன் சென்ற பின்னர், அவளை அழைத்து தன்னை காப்பா-ற்றும்படி கூறியதைத் தொடர்ந்து தீயணைப்பு படையினரை தொடர்பு கொண்டு அவரை காப்பாற்றியுள்ளார்

### போலி முட்டை ஆபத்தானதா??

பிளாஸ்டிக் அரிசியை தயாரித்து வந்த சீனர்கள் தற்போது போலியான கோழி முட்டைகளை உற்பத்தி செய்யத் தொடங்கி விட்டனர். இரசாயனங்களைக் கலந்து போலியாகத் தயாரிக்கப்பட்ட மஞ்சள் கரு மோல்டில் ஊற்றப்படுகிறது. மஞ்சள் கருவின் மேலே கல்சியம் கார்பனேட் மற்றும் சில ரசாயனங்கள் உதவியால் வெள்ளைக் கரு உருவாக்கப்படுகிறது. பின்னர் இது ஒரு மணி நேரம் காய வைக்கப்படுகிறது. பாரபின் மெழுகில் தோய்த்தெடுக்கப்படும் போலி முட்டையின் மேல் செயற்கை ஓடு பொருத்தப்படுகிறது.



அரை அவியல் தயார் செய்யும்போது மஞ்சள் கரு கொஞ்சம்கூட சிதறாமல் பந்துபோல் முழுதாக நிமிர்ந்து நிற்கிறது. மேலும், வெள்ளைக்கரு பரவும்போது நுரையும் அதிகமாக எழுகிறது. அதைப் பற்றிய கவலைப்படாத சீன வாடிக்கையாளர்கள் போலி முட்டையின் சுவை அதிகமாக இருப்பதாக கூறுகிறார்கள்.

- பிரித்தானிய இளவரசியான கேட் மிடில்டன்னிற்கு ஆண் பாதுகாவலர்-களை நியமித்தால் அவர்களுடன் இளவரசிக்கு ரகசிய தொடர்பு ஏற்படுவதை தவிர்க்கவே பெண் பாதுகாவலர்களை மட்டும் நியமித்துள்ளதாக ரகசிய தகவல்கள் வெளியாகியுள்ளன.
- கனடா நாட்டு பயணிகள் விமானத்தில் பயணித்த நாய் ஒன்று உயிரிழக்கும் அபாயத்தை தவிர்க்கும் பொருட்டு விமானத்தை வேறு நாட்டிற்கு திருப்பிய விமானியின் மனிதாபிமானத்திற்கு பாராட்டுக்கள் குவிந்து வருகிறது.

### ஆசிரியர் மீது கண்டனம்

இத்தாலி பல்கலைக்கழகத்தில் தேர்வு எழுதும் நாட்களில் மாணவ, மாணவிகளுக்கு கட்டுப்பாடுகளை தீவிரப்படுத்தியுள்ளது. இந்நிலையில், 19 வயதுடைய மாணவியின் சிறுநீர் கழிக்கும் பாதையில் நோய் தொற்று இருந்துள்ளதால், அடிக்கடி சிறுநீர் கழிக்க வேண்டிய இருந்துள்ளது. ஆனால் வெளியே முடியாது எனக்கூறிய அந்த ஆசிரியர் மாணவியை இருக்கையில் அமர்ந்திருக்குமாறு கட்டாயப்-படுத்தியுள்ளனர். அவருக்கு உடல் ரீதியாக ஆபத்து விளைவிக்கும் விதமாக நடந்துக்கொண்ட ஆசிரியர்கள் மீது வழக்கு தொடுக்க உள்ளதாக பாதிக்கப்பட்ட மாணவியின் பெற்றோர்கள் தெரிவித்து-ள்ளனர்.

### காதலியை மொட்டையடித்து கற்பழித்த காதலன்

அமெரிக்காவில் காதலி பிரிந்து சென்றதால் ஆத்திரம் அடைந்த காதலன் அவரை கடத்தி வந்து மொட்டையடித்து 3 நாட்கள் சித்ரவதை செய்து கற்பழித்த காதலனை காவல்துறையினர் அதிரடியாக கைது செய்துள்ளனர்.

அவர்கள் இருவரும் பழகியதில் இரண்டு குழந்தைகள் பிறந்துள்ளனர். ஆனால், இருவருக்கும் அடிக்கடி வாக்குவதாம் ஏற்பட்டதால், ஒரு நிலையில் காதலி அவரை பிரிந்து சென்றுவிடுகிறார். சில நாட்களுக்கு பிறகு தனது முன்னாள் காதலி வேறொரு நபருடன் பழகி வருவதை பேஸ்புக் மூலம் கண்டுபிடித்த காதலன் அவரை பழிவாங்க திட்டமிட்டே காதலியை கடத்தி சென்று மறைவான அறையில் கட்டி வைத்து மேற்படி சித்திரவதை செய்துள்ளார் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

---

# விசர் நாய்க்கு வந்த பல்வலி

*கடந்தவார தொடர்ச்சி...*

**சஞ்சயன் செல்வமாணிக்கம்**

**இனிமேல்தான் கதையின் கிளைமாக்ஸ் வருகிறது.**

சம்பவம் நடந்த அன்று மதியம் அன்பு நண்பரொருவர் தொலைபேசியில் அழைத்தார். எனக்கு பல்வலி இப்போது உரையாட முடியாது நாளை எடுங்கள் என்றேன்.

மறுநாள் எடுத்தார்.

சுகம் விசாரித்தார். அவரின் பல் பற்றிய அறிவு அபாரமாய் இருந்தது. உனக்கு ஞானப்பல் இருக்கிறதா என்றார். எனக்கு ஞானம் என்று ஒரு நண்பர்தான் இருக்கிறார். அப்படி பல் இருப்பதாக நினைவில்லை என்றேன். மனிதர் விடுவதாயில்லை.

சிறுவயதில் பிடுங்கினாயா என்றார். எனக்கு தெத்திப்பல் இருந்து பிடுங்கிய நினைவுண்டு. அதைக் கூறினேன். "டேய் விசரா!" என்று அன்பாக அழைத்தார். ஞானப்பல் வாயின் கடைசிப்பல் என்றார். நான் நாக்கினால் தடவிப் பார்த்தேன் அது அங்கிருந்தது.

கடைசிப்பல் இருக்கிறது என்றேன். அய்யோ என்று அவர் தலையில் அடித்துக்கொள்ளும் சத்தம் கேட்டது. எப்படியோ வாய்க்குள் ஒரு கடைசிப்பல் இருக்கும் தானே என்ற போது தான்



எனது முட்டாளத்தனமான பதில் எனக்கு விளங்கியது.
அப்போது அவர் இன்னொரு கேள்வி கேட்டார்.

உனது வாயினுள் எத்தனை பற்கள் இருக்கின்றன? என்றார். மனது மேலே 16 கீழே 16 என்று கணக்குப்போட்டது. நான் நாக்கினால் தடவித் தடவித் எண்ணத்தொடங்கினேன்.

1. 2. 3. 4. 5. 6. 7. 8. 9. 10. 11. 12. 13 வந்ததும் பற்கள் முடிந்துவிட்டன. மீண்டும் எண்ணினேன். 13 தான் இருந்தது. கீழ்த்தாடையிலும் 13 தான் இருந்தது.

நண்பரிடம் "மச்சான் எனக்கு எல்லாமா 26 தான் இருக்கு" என்றேன்.

மறுபக்கத்தில் கடும் அமைதி நிலவியது.

கடுமையாக சிந்திக்கிறான் என்று நினைத்துக்கொண்டேன்.

சற்று நேரத்தில் நண்பன் இப்படிச்சொன்னான்

டேய் "விசர்நாய்களுக்குத்தான் 26 பல் இருக்குமாம்"

நான் என் மனதிற்குள் "நண்பேன்டா" எனும் சொல்லை கூறியபடி சிரித்துக் கொண்டேன். தொலைபேசி அழைப்பு பட்

*முற்றும்...*

**இன்றைய நாளும் நல்லதே ...**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தண்டனை வழங்கப்படின் ஐ.நா அறிக்கையை நம்பலாம்

இலங்கை மீதான ஐ.நா வின் அறிக்கை செப்டெம்பர் மாதம் வெளிவரவுள்ளது என்று அந்த நாளை எதிர்பார்த்திருந்த போது அந்த நாளும் வந்தது. அறிக்கையும் வெளியானது. போர்க் குற்றமீறல் சம்பந்தமான இந்த அறிக்கை வெளிவருவதற்கு முன்னர் இலங்கை அரச தரப்புக்குச் சாதகமாகவே இந்த அறிக்கை வெளிவரும் என்று பலரால் ஊகிக்கப்பட்டது. ஆனால் வெளிவந்திருக்கும் அறிக்கை இலங்கை அரசுக்கு அச்சத்தைக் கொடுத்துள்ளது. ஆனாலும் அதனை வெளிக்காட்டாமல் அரசு நாசுக்காக இருக்கிறது. இறுதிப் போரில் இடம்பெற்ற போர்க் குற்ற மீறல்கள் மனித உரிமை மீறல்கள் தான் என்று இந்த அறிக்கை தெளிவாக விளக்கியுள்ளது. இந்த அறிக்கையில் இரு தரப்பும் சம்பந்தப்பட்டிருக்கலாம் ஆனால் இராணுவத்தினரின் மீதான குற்றச் செயல்களே அதிகமாகக் காணப்படுகின்றன.

சர்வதேசத்தின் பிடியில் இருந்து இலங்கை தப்பிக்க முடியாது என்பது இந்த அறிக்கையில் இருந்து நன்கு தெரிகிறது. போர்க்குற்ற மீறல்களைச் செய்ததாக அறிக்கையில் குறிப்பிடப்பட்ட இரு தரப்பில் ஒரு தரப்பான விடுதலைப் புலிகளின் தரப்பு காணாமல் போய்விட்டது. எனவே மறு தரப்பான இராணுவத்தரப்பு இருக்கிறது. அந்த தரப்பின் மீது விசாரணைகளை மேற்கொண்டு குற்றமிழைத்தவர்களை இனம்கண்டு தண்டனை வழங்க வேண்டும் என்று தமிழ் மக்கள் வேண்டி நிற்கிறார்கள். அது ஏற்றுக்கொள்ளப் பட்டால் தான் ஐ.நா அறிக்கையை நம்ப முடியும். இல்லாது விடின் இந்த அறிக்கை மூலம் சர்வதேசம் நலன் தேட முயற்சிக்கிறது என்பது வெளிச்சத்துக்கு வரும்.

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றம் மற்றும் மனித உரிமை மீறல் தொடர்பான, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அறிக்கை ஐ.நா ஆணையாளர் செயிட் அல் ஹுசைனால் ஐ.நா பேரவையில் வெளியிடப்பட்டது. கடந்த 2002ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரை பாரதூரமான குற்றச் செயல்களும் மனித உரிமை மீறல் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளதாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச தலையீட்டுடன் கூடிய விசாரணைப் பொறிமுறைமை உருவாக்கப்பட வேண்டுமென ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை இலங்கை குறித்த விசாரணை அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது. 2002ம் ஆண்டு முதல் 2011ம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் அரசாங்கப் படையினரும், தமிழீழ விடுதலைப் புலிகளும் மனிதாபிமானத்திற்கு எதிரான வகையில் குற்றச் செயல்களில் ஈடுபட்டதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கலப்பின வகை நீதிமன்ற-மொன்றை உருவாக்கி அதன் ஊடாக மனித உரிமை மீறல் மற்றும் போர்க்



வேண்டுமென ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் விசாரணை அறிக்கையில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. சர்வதேச ரீதியிலான நீதவான்கள், சட்டத்தரணிகள், விசாரணையாளர்களின் பங்களிப்புடன் இந்த பொறிமுறைமை முன்னெடுக்கப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

நீதிக்குப் புறம்பான வகையிலான எறிகணைத் தாக்குதல், சட்டவிரோத படுகொலைகள், பலவந்த காணாமல் போதல்கள், பாரியளவிலான சித்திரவதைகள், பாலியல் வன்கொடுமைகள், சிறுவர் போராளிகளை படையில் இணைத்தல் உள்ளிட்ட பாரியளவிலான குற்றச் செயல்களில் இரண்டு தரப்பும் ஈடுபட்டிருந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையின் அரசியலில் புதிய மாற்றமொன்று அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில் அறிக்கை வெளியிடப்படுவதாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் சயிட் அல் ஹுசெய்ன் தெரிவித்துள்ளார். உள்நாட்டு ரீதியான விசாரணைப் பொறிமுறைமை வரவேற்கப்பட வேண்டியது என்ற போதிலும், இலங்கையின் நீதிக் கட்டமைப்பு குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை நடத்தக்கூடிய இயலுமையை கொண்டதில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சியாளர்களை பாதுகாக்கும் திட்டமொன்று அமுல்படுத்தாமையே மிகப் பெரிய பலவீனமாக அமைந்துள்ளது என அவர் தெரிவித்துள்ளார். மேலும் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்கள் மீது இலங்கை இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட பாலியல் துஸ்பிரயோகங்கள் சில தருணங்களில் மிக மோசமானதாக மேற்கொள்ளப்பட்டன என ஐக்கிய நாடுகள் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது இவ்வாறு இருக்கையில் இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றச்சாட்டுக்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக சர்வதேச விசாரணையே தேவை என்று தமிழக சட்ட சபையில் முதல்வர் ஜெயலலிதா பிரேரணை ஒன்றை தாக்கல் செய்துள்ளார். இலங்கைப் பிரச்சினை தொடர்பில் பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும் எனவும், அமெரிக்கா இலங்கைக்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுத்தால் அதை மாற்ற இந்தியா இராஜதந்திர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும், இலங்கை மீது பொருளாதார தடை விதிக்க வேண்டும் என்றும் பல கோரிக்கைகள் பிரேரணையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அத்துடன், இலங்கைக்கு ஆதரவான நிலைப்பாட்டை அமெரிக்கா எடுக்குமானால், அதனைத் தடுத்து அமெரிக்காவை தன்பக்கம் இழுத்து, இலங்கைக்கு எதிராக சர்வதேச விசாரணை நடத்த வலியுறுத்த வேண்டும் என்று, இந்திய பேரரசை, தமிழக சட்டப்பேரவை கேட்டுக்கொள்வதாக முதல்வர் ஜெயலலிதா தெரிவித்துள்ளார். இவ்வாறான ஒரு நிலைமையில் தற்போது தமிழக சட்டசபையில் அங்கம் வகிக்கும் அனைத்து

ஆதரவான நிலைப்பாட்டை வெளிப்படுத்தி வருவதால், தீர்மானத்தின் மீது இன்றே வாக்கெடுப்பு நடத்தப்படலாம் என்றும், தீர்மானம் ஒரு மனதாக நிறைவேற்றப்படலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கையில் குற்றமிழைத்தவர்கள் தண்டனையிலிருந்து தப்பும் கலாச்சாரமானது, பொறுப்புக்கூறுதல் மற்றும் நல்லிணக்கம் ஏற்படுவதை கடுமையாக பாதிக்கும் என ஐ.நா. சிறப்புத் தூதர் பாப்லோ டி கிரீ∴ப் தெரிவித்துள்ளார். இலங்கையில் நீதித்துறையில் மாறுதல்களைக் கொண்டுவந்து, போருக்கு பின்னரான காலப் பகுதியில் ஏற்பட்டுள்ள மாறுதல்களையும் மனதில் கொண்டு, அதனால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதிவழங்கும் நோக்கில், அதற்கேற்ற வகையில் உத்திகள் வகுக்கப்பட வேண்டிய தேவை உள்ளது.

அதற்கான வழிமுறைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் அவரது அறிக்கை கூறுகிறது. அதேபோல் உண்மைகளை கண்டறிய சுயாதீனமான வழிமுறை ஏற்படுத்தப்பட்டு, இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு முழுமையான வகையில் நியாயங்கள் வழங்கப்பட்டு, இழப்பீடுகள் வழங்கப்பட வேண்டும். இந்த இரண்டு நடவடிக்கைகளும் ஒரே நேரத்தில் முன்னெடுக்கப்பட வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார். இதன் மூலம் இலங்கை தனது முழுமையான வலிமையை உணர்ந்துகொள்ள முடியும்.

இலங்கையின் அனைத்து சமூக மக்களிடமும் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டு, அவர்களும் உள்வாங்கப்படுவது மிகவும் அவசியம். அனைத்திலும் முக்கியமாக கடந்த காலங்களில் இடம்பெற்ற பெரிய அளவிலான அத்துமீறல்களால் பாதிக்கப்பட்டவர்கள் அதில் உள்வாங்கப்படுவது அவசியம் எனக் கூறும் அவர், அதிகாரிகள் நீண்டகால அடிப்படையில் உறுதியுடன் செயல்படுவது தவிர்க்க முடியாத ஒன்றாக இருக்க வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

மறுபுறத்தில் காணாமல் போனவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பதை தெளிவுபடுத்த உடனடி நடவடிக்கை தேவை. நாட்டின் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் பெண்கள் மீதான கண்காணிப்பு மற்றும் துன்புறுத்தல்களும், சட்டத்துக்கு விரோதமாக தடுத்து வைப்பது போன்ற நடவடிக்கைகளும் முடிவுக்கு வருவதை அரசு உறுதிசெய்ய வேண்டும். கடுமையான விதிமீறல்களைச் செய்தவர்கள் நீதிமன்றத்தின் முன்னர் குற்றச்செயல்களுக்காக நிறுத்தப்படுவது அவசியமானது. நாடு தற்போதுள்ள நிலையில் மீண்டும் எவ்விதமான தவறுகளும் செய்யும் நிலை ஏற்படக் கூடாது எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

இலங்கை அரசு நாட்டின் நிலைமையை சரியாகக் கையாண்டால், அது அந்தப் பிராந்தியத்தில் மட்டுமல்ல, உலக அளவில் எப்படி நீடித்திருக்கக் கூடிய சமாதானத்தை முன்னெடுக்க முடியும் என்பதற்கு ஒரு உதாரணமாக அமையும் என்று ஐ.நாவின் மனித உரிமைகள் வல்லுநர் ஒருவர் வலியுறுத்தியுள்ளார்.

மேலும் இலங்கையின் போர்க்குற்றங்களை சனல்- 4 தொலைக்காட்சி மூலம் அனைத்துலக சமூகத்துக்கு வெளிப்படுத்தியவர்களில் ஒருவரான போர் தவிர்ப்பு வலயம் ஆவணப்படத்தின் இயக்குனர் கெலும் மக்ரே மற்றொரு ஆவணப்படத்தை வெளியிட்டுள்ளார். "இலங்கை நீதிக்கான தேடல்" என்ற தலைப்பில் இந்த அரை மணிநேர ஆவணப்படம் தயாரிக்கப்பட்டுள்ளது. ஆங்கிலம் மற்றும் ஸ்பானிஸ் மொழிகளில் தயாரிக்கப்பட்டு இன்று அனைத்துலக சமூகத்துக்கு காண்பிக்கப்படும் இந்த ஆவணப்படம், தமிழ், சிங்களம், ஹிந்தி, பிரெஞ்சு மொழிகளில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டு அடுத்த சில நாட்களில் இணையத்தில் வெளியிடப்படவுள்ளது.

அவர்களைக் கேட்க வேண்டும் என்ற தொனிப்பொருளில், சர்வதேச விசாரணையை வலியுறுத்தும் வகையில், பாதிக்கப்பட்டவர்களின் குரல்களையும், போர்க்குற்ற ஆதாரங்களையும் கொண்டதாக இந்த ஆவணப்படம் தயாரிக்கப்பட்டுள்ளது. தற்போது பொலிவியா, பரகுவே, ஆர்ஜென்ரீனா, மெக்சிகோ, பிரேசில் ஆகிய தென்அமெரிக்க நாடுகளில் கெலும் மக்ரே இந்த ஆவணப்படத்தின் முன்னோட்டத்தை காண்பித்து வருகிறார். அவர், அமெரிக்கா சென்று, நியூயோர்க் மற்றும் வாஷிங்டனில், அரசியல்-வாதிகள், அரசாங்க அதிகாரிகள், மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் மத்தியில் இந்த ஆவணப்படத்தை திரையிட்டுக் காண்பிக்கவுள்ளார். அதன் பின்னர், ஜெனிவாவிலும் ஐ.நா தலைமையக வளாகத்தில் இதனை காண்பிக்கவும் கெலும் மக்ரே திட்டமிட்டுள்ளார்.

இப்படியாக இலங்கை அரசு மீது போர்க் குற்றங்கள் குவிந்து கொண்டிருக்கும் போது ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை இராணுவத்தினர் மீது குற்றம் சுமத்தப்படுமாயின், அவர்களைக் காப்பாற்ற நாடாளுமன்றத்தில் தீர்மானம் கொண்டுவரப்படும் என உதய கம்மன்பில புலம்பியிருக்கிறார்.

போரில் ஈடுபட்ட இராணுவத்தி-னருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியாது. சரியாக நூறு ஆண்டுகளுக்கு முன்னர் சிங்கள - முஸ்லிம் கலவரம் ஏற்பட்டபோது குற்றஞ்சாட்டப்பட்ட காவல் துறையினர் மற்றும் இராணுவத்தினரைக் காப்பதற்கு இப்படியான தீர்மானமொன்றும், பின்னர் 1987ஆம் ஆண்டு கலவரங்கள் ஏற்பட்டபோதும் இராணுவத்தினரைக் காப்பாற்ற ஐக்கியத் தேசிய கட்சியின் அரசாங்கம் தீர்மானமும் நிறைவேற்றப்-பட்டன என்றும் உதய கம்மன்பில மேலும் தெரிவித்தார்.

இதற்கிடையில் இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றச்சாட்டுக்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்த, ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் விசாரணை அறிக்கை தொடர்பில் இலங்கை பதற்றமடையவில்லை என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்தியாவிற்கு விஜயம் செய்துள்ள அவர், இந்திய ஊடகமொ-ன்றுக்கு கருத்து தெரிவிக்கையில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். தொடர்ந்து குறிப்பிட்ட அவர், ஐ.நா விசாரணைக் குழுவின் அறிக்கையினால் இலங்கை அரசாங்கத்தில் அதிர்வுகள் ஏற்படாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிங்களத் தரப்புகள் போரில் குற்றமிழைத்தவர்களுக்குத் தண்டனை வழங்க விடமாட்டோம் என்று கூக்குரலிடுகின்றனர். புதிய அரசால் நல்லிணக்கம் வந்துவிட்டது என்று சொன்ன தமிழ்த் தரப்பால் வாயே திறக்க முடியாமல் உள்ளது என்பது தான் வேடிக்கையான விடயமாகும்.

**சிங்களத் தரப்புகள் போரில் குற்றமிழைத்தவர்களுக்கு தண்டனை வழங்க விடமாட்டோம் என கூக்குரலிடுகின்றனர்.**
**புதிய அரசால் நல்லிணக்கம் வந்துவிட்டது என்று சொன்ன தமிழ்த் தரப்பால் வாயே திறக்க முடியாமல் உள்ளது......**

**துன்னாலைச் செல்வம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# குழப்பங்களின் போது ஒரு முஃமின்

நபியின் அந்தரங்க செயலாளர் என அறியப்பட்ட ஹுதைபா இப்னுல் யமான் (ரழி) அவர்களிடம் இரண்டாம் கலீ.ஃபா உமர் பின் கத்தாப் (ரழி) அவர்கள் குழப்பங்கள் பற்றி நபிகள் நாயகம் அவர்கள் கூறியது பற்றி அறிக்குமாறு கேட்டபோது ஹுதைபா அவர்கள்......

ஒரு மனிதருக்கு அவரது குடும்பத்தில் ஏற்படும் (சாதாரண) குழப்பம், அதற்கு தொழுகை, நோன்பு, தர்மம், நன்மை ஏவி, தீமையைத் தடுத்தல் ஆகிய காரியங்கள் பாரிகாரமாக அமையும் என்றார்கள். (புகாரி)

இதனை அறிவித்ததும் கலீ.ஃபா அவர்கள் இது பற்றி நான் உங்களிடம் வினவில்லை. மாற்றமாக கடல் அலைபோன்று வீசுகின்ற குழப்பங்கள் பற்றித்தான் வினவுகின்றேன் என்றார்கள். அதற்கு ஹுதைபா (ரழி) அவர்கள் அமீறுல் மு.ஃமனீன் அவர்களே! உங்களுக்கும் அதற்கும் இடையில் மூடப்பட்ட வாயில் ஒன்று உள்ளது. அது பற்றி நீங்கள் அலட்டிக்கொள்ள வேண்டாம் எனக் கூறினார்கள். (புகாரி).

குழப்பங்களின் வாயில்களை அடைப்பவராக உமர் (ரழி) அவர்கள் காணப்பட்டார்கள். அவர்களின் கொலை முஸ்லிம் சமூகத்தில் பெரிய பெரிய குழப்பங்கள் ஏற்படக் காரணமானது.

மூன்றாம் கலீ.ஃபா உஸ்மான் பின் அப்.ஃபான் அவர்களின் கொலையை அறிஞர்கள் கொலை நிகழ்வு என அறிவிக்காமல் குழப்பம் என்றே அறிவிப்பார்கள். அந்த அளவு பாரிய நிகழ்வாக அது கொள்ளப்படுகின்றது.

**முஸ்லிம்களை அழிக்கும் செல்வம்:**

முஸ்லிம்கள் மத்தியில் செல்வம் பெருகுவதும் அவர்கள் மத்தியில் குழப்பங்கள் பெருகுவதும், அவர்களுக்குள் போட்டி போட்டுக் கொள்வதும், அவர்கள் தமக்குள் சண்டையிட்டு அழியவும் காரணமாகும் என்பதை பின்வரும் ஹதீஸ் தெளிவுபடுத்துகின்றது.

அபூ உபைதா (ரழி) அவர்கள் பஹ்ரைனில் இருந்து கொண்டு வந்த சொத்துக்கள், பொருட்கள் பற்றி அறிந்த அன்ஸாரிகள் சுபஹ் தொழுகையில் மதீனாப் பள்ளியில் திரண்டார்கள். இதுபற்றி அறிந்து கொண்ட நபி (ஸல்) அவர்கள் புன்னகைத்தார்கள். அபூ உபைதாவின் வருகை பற்றி அறிந்துதானே நீங்கள் வந்தீர்கள் எனக் கேட்டார்கள்.

தொடரும் .. ..

**– எம்.ஜே.எம். றிஷ்வான் –**

# ஆரோக்கியமாக வாழ வேண்டுமா?



*உடற்பயிற்சி*

தினமும் உடற்பயிற்சி செய்வது உங்கள் உடலை ஆரோக்கியமாக வைத்திருக்க உதவும். படிகளில் ஏறுதல், அருகில் உள்ள இடங்களுக்கு நடந்து செல்லுதல் போன்ற எளிய பயிற்சிகளே போதும். மேலும் வெறும் காலில் நடப்பது மற்றும் ஓடுவதால் பல நன்மைகள் ஏற்படுவதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

*பழங்கள்*

பழங்களை அதிகளவில் எடுத்துக்கொள்ளுங்கள். இது அனைத்து வைட்டமின்கள் மற்றும் சத்துகளையும் அப்படியே வழங்கவல்லது. அதுபோல காய்கறிகளையும் சேர்த்துக் கொள்தல் அவசியமாகும்.

*காதலியுங்கள்*

உங்கள் மனத்தை எப்போதும் மகிழ்ச்சியாக வைத்திருக்க, உங்களை நீங்களே காதலிக்க தொடங்குங்கள். அந்த காதல் உங்கள் உடல் நலத்தை பேனுவதற்கு உதவும்.

*நேர்மறை எண்ணம்*

அடுத்ததாக எதிர்மறை எண்ணங்கள் உள்ளவர்களிடம் பழகுவதை தவிர்க்க முயலுங்கள். ஏனெனில் அவர்களது எதிர்மறை எண்ணங்கள் உங்களையும் அவர்கள் பாதைக்கு அழைத்து செல்லும்.

*மதுப்பழக்கம்*

முக்கியமாக மது பழக்கத்தை இன்றே கைவிடுங்கள். மதுவினால் உங்கள் உடல் மற்றும் உள்ளம் இரண்டுமே பாதிக்கக்கூடும்.

முற்றும் .. ..



***நிருபர்: உங்களுக்கு நினைவு தெரிஞ்ச நாளிலிருந்தே, இந்த சோப்பைத் தான் குளிக்கப் பயன்படுத்துறீங்களாமே...?***

நடிகை: அதெல்லாமில்லீங்க... இது "கரைஞ்சதும்" வேற புது சோப் வாங்கிடுவேன்...!

***சே! சரியா ஒன்பது மணிக்கு அலுவலகம் செல்ல வேணும் என இருந்தேன். ஆனா ஒரு நாளும் முடியிறதில்லை!***

ஏன்?

***ஏன்னா எனக்குத் தான் இன்னும் வேலையே கிடைக்கல்லையே!!***



# திருச்சபையின் வரலாறு



கடந்தவாரத் தொடர்ச்சி .. ..

கி. பி. 163 இல் ஜஸ்டினும் அவரோடு சேர்ந்த வேறு சிலரும் கொல்லப்படுவதற்கு முன், "இறந்தபின் நீங்கள் எல்லோரும் உயிர்தெழப் போகிறோம் என்று நினைக்கிறீர்களா?" என்று அவர்களைப் பார்த்து அவர்களுக்கு கொலைத் தண்டனை விதித்தவர்கள் கேட்டார்கள். அதற்கு ஜஸ்டின் அமைதியாக, "அதை நான் நிச்சயமாக அறிந்திருக்கிறேன்" என்று பதிலளித்தார்.

ரோமப் பேரரசனான மார்க்கஸ் அவுரேலியஸின் காலத்தில் பல வருடங்களுக்கு கிறிஸ்தவர்கள் பெரிதும் கொடுமைப்படுத்தப்பட்டார்கள். யுசீபியஸ் (Eusebius) என்ற வரலாற்றாசிரியர் தனது நூலில் கிறிஸ்தவர்களுக்கு அக்காலத்தில் இழைக்கப்பட்ட கொடுமைகள் பலவற்றை வர்ணித்து எழுதியுள்ளார். கி. பி. 177 இல் தற்போதைய ஐரோப்பாவில் கோல் (Gaul) என்ற பிரதேசத்தில் பல கொடுமைகள் கிறிஸ்தவர்களுக்கு எதிராக நடந்தன. ரோன் பள்ளத்தாக்கில் இருந்த கிறிஸ்தவ சபையொன்று அநேக கொடுமைகளைச் சந்தித்தது. அச்சபையில் தலைவராக இருந்த 90 வயதான பொன்தியஸ் கொல்லப்பட்டார். கிறிஸ்தவர்கள் வார்த்தைகளால் விபரிக்க முடியாத அநேக துன்பங்களை இக்காலங்களில் சந்தித்தனர்.

இரண்டாம் நூற்றாண்டில் முதல் நூற்றாண்டைப் போலவே அநேக துன்பங்களைக் கிறிஸ்தவ சபை அனுபவித்தபோதும் கிறிஸ்தவம் தொடர்ந்து வளர்ந்தது. ரோமப் பேரரசு வியக்கும் வகையில் கிறிஸ்தவர்களின் விசுவாசம் உறுதியானதாக இருந்தது. கிறிஸ்தவர்களை அவர்களால் புரிந்துகொள்ள முடியாவிட்டாலும் கிறிஸ்தவர்களுடைய உறுதியான விசுவாசம் அவர்களைத் திகைக்க வைத்தத்தோடு, ஆத்திரத்தையும் கிளப்பியது. கிறிஸ்தவர்களைக் கர்த்தரை அறியாதவர்கள் துன்புறுத்துவது சகஜமே. சத்தியத்தை சத்தியத்திற்கு எதிரானவர்கள் எப்போதுமே விரும்பமாட்டார்கள்.

இந்நூற்றாண்டில் கிறிஸ்தவம் அதிக வளர்ச்சி அடைந்தபோதும், போலிப் போதனைகளும் கண்மூடித்தனமாக வளரத்தொடங்கின. பிற்காலத்தில் ரோமன் கத்தோலிக்க சபையின் "போப்" உருவாவதற்கு இக்காலத்திலேயே வித்திடப்பட்டுவிட்டதையும் நாம் ஏற்கனவே பார்த்தோம். அப்போஸ்தலர்களா[illegible] ஏற்படுத்தப்பட்ட சபைத்தலைமை முறையில் மாறுதல் ஏற்பட்டு மனித சிந்தனைக்கு இடமளிக்கப்பட்டது. முக்கியமாக இக்காலத்தில் அப்போஸ்தலர்களுடைய மறைவுக்குப்பின் அவர்களுக்கு இணையாகக் கூறக்கூடிய தலைவர்கள் திருச்சபையை வழி நடத்த இல்லாமல் போனதைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது. சபைத் தலைமை விசுவாசத்திலும், பக்தியிலும் சிறந்ததாக இல்லாமல் போனால் திருச்சபையில் சீரழிவு ஏற்படுவதைத் தடுக்க முடியாது என்பதை இரண்டாம் நூற்றாண்டு விளக்குகிறது.

முற்றும் .. ..

www.bible.me

# இவ்வார ராசிபலன்கள்



**மேஷம்** : குடும்பத்தில் ஒற்றுமை கூடும். உற்சாகத்துடன் செயலாற்றி வருவீர்கள். சமூகத்தில் நற்பெயர் கிடைக்கும். வெளியூர் பயணம் நன்மை தரும்.



**ரிஷபம்** : புதிய வாய்ப்பை பயன்படுத்தி முன்னேறுவீர்கள். நண்பரின் உதவி, தக்க சமயத்தில் கிடைக்கும். குடும்பத்தில் சுப காரிய பேச்சு நடக்கும்.



**மிதுனம்** : வசீகர பேச்சு மூலம், புதிய நண்பர்களைப் பெறுவீர்கள். குடும்பத் தேவையை குறைவின்றி நிறைவேற்றுவீர்கள். வாகனத்தில் பராமரிப்புச் செலவு உண்டாகும்.



**கடகம்** : புத்துணர்வுடன் செயல்படுவீர்கள். தாமதமான பணிகள் விரைவாக நிறைவேறும். சகோதரர்களின் வளர்ச்சிக்கு துணைபுரிவீர்கள். பொருள் வளம் சேரும்.



**சிம்மம்**: எதிலும் நிதானமுடன் இருப்பது நல்லது. அடுத்தவர் பிரச்னையில் கருத்து சொல்ல வேண்டாம். கடந்த கால நற்செயலுக்கான பலன் தற்போது கிடைக்கும்.



**கன்னி** : புத்துணர்ச்சியுடன் அன்றாடப் பணிகளில் ஈடுபடுவீர்கள். உறவினரிடம் இருந்த கருத்து வேறுபாடு மறையும். குடும்பத் தேவைக்கான செலவு அதிகரிக்கும்.



**துலாம்** : பணம், புகழ் நல்லறிவு, தெய்வ அருள் கிடைக்கும். குடும்பத்தில் சுபநிகழ்வு ஏற்படும். உங்களை எதிர்த்தவர்கள் உங்களிடமே உதவி கேட்டு வருவர்.



**விருச்சிகம்** :முயற்சிகள் சிறப்பாக நிறைவேறும். மூத்த சகோதரர் உதவுவார். பயணங்கள், புதிய அனுபவம் பெற்றுத் தரும். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெறும்.



**தனுசு** :வாழ்வின் அர்த்தம் உணர்ந்து செயல்படுவீர்கள். நற்செயலின் பலன் அதிகரிக்கும். குடும்பத்தில் சுப நிகழ்வு உண்டாகும் தொழில், வியாபாரத்தில் அதிக கவனம் வேண்டும்.



**மகரம்** : நிதானமாகப் பேசுவீர்கள். இஷ்ட தெய்வ அருள் துணை நிற்கும். வாகன பராமரிப்பு செலவு குறையும். நோய் தொந்தரவு குறையும். தொழில், வியாபாரம் மந்த கதியில் இயங்கும்.



**கும்பம்** : அதிக முயற்சியினால் மட்டுமே செயலில் வெற்றி கிடைக்கும். கடன் கொடுத்த பணம் வசூலாகும். எதிரிகளால் உருவான கெடுசெயல் பலமிழக்கும்.



**மீனம்** :உடன் பிறந்தவர்களுடன் கருத்து வேறுபாடு வரலாம். சூழல் உணர்ந்து பேசுவது நல்லது. மதிநுட்பத்தினால் தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி அடைவீர்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சமையல் சமையல்

### வாழைப்பூ வடை



**தேவையான பொருட்கள்**

வாழைப்பூ - 1, கொண்டைக் கடலை - 100 கிராம், துவரம்பருப்பு - 300 கிராம், காய்ந்த மிளகாய் - 3, மிளகு - ஒரு தே.கரண்டி, சீரகம் - ஒரு தே.கரண்டி, சோம்பு - ஒரு தே.கரண்டி, இஞ்சி - ஒரு தே.கரண்டி, பூண்டு - 3 பல், புதினா - 10 இலைகள், மோர் - 2 தே.கரண்டி, எண்ணெய் - போதுமான அளவு, உப்பு - தேவைக்கேற்ப

**செய்முறை**

கொண்டைக்கடலை, துவரம்பருப்பு, காய்ந்த மிளகாய், மிளகு, இஞ்சி, பூண்டு போன்றவற்றை அரைத்தெடுத்துக் கொள்ளவும்.

மோரில் இரண்டு கப் தண்ணீர் சேர்த்து வாழைப்பூவை ஊற வைக்கவும். வாழைப்பூவிலிருந்து நீக்க வேண்டிய பாகங்களை நீக்கி விட்டு வெட்டிக் கொள்ளவும். மோரில் மஞ்சள் பொடியை சேர்த்து அதில் நறுக்கிய வாழைப்பூவை சேர்க்கவும்.

அரைக்க வேண்டிய பொருட்களை ஒரு மணி நேரம் ஊறவைத்து பின் அரைக்கவும். மோரில் ஊற வைத்த வாழைப்பூவை பிழிந்து அரைத்த மாவுடன் சேர்க்கவும். அத்துடன் புதினா இலைகளையும் சேர்க்கவும். பின்னர் வழமையான முறையில் தாச்சியில் எண்ணெயை ஊற்றி வடைகள் தயாரிக்கவும்.

உடலுக்கும் மிகவும் சத்தான வாழைப்பூ வடை தயார்.

## இடுப்பு வலிக்கு நிவாரணம்



குனிந்து நிமிர்ந்து வேலை செய்பவர்களை விட, ஒரே இடத்தில் நீண்ட நேரம் அமர்ந்து வேலை செய்பவர்கள் முதுகுவலி, கழுத்து மற்றும் இடுப்பு வலியால் அவஸ்தைப்படுகின்றனர்.

எனவே தினமும் ஒருசில உடற்பயிற்சிகளை செய்வதன் மூலம் வலிகளிலிருந்து நிவாரணம் பெறலாம். தினமும் காலை மற்றும் மாலை வேளையில் 20 முறை குனிந்து உங்களது காலின் பெருவிரலை தொடுங்கள், இதனை செய்து வந்தால் முதுகு தண்டுவடம் ஆரோக்கியமாக இருக்கும்.



நிற்கும் போது, இருக்கையில் அமர்ந்து வேலை செய்யும் போதும் நேராக இருக்க வேண்டும், வளைந்து நெளிந்து இருக்க கூடாது.

இதேபோன்று தொடர்ந்து உட்கார்ந்து இருக்காமல், அரைமணி நேரத்திற்கு ஒருமுறை நடைப்பயிற்சி மேற்கொள்ளலாம்.

காலையில் அல்லது மாலையில் நடைப்பயிற்சி செய்யும்போது, கையை முன் பின்னாகச் சுழற்றலாம். இதனால், தோள்பட்டைக்கு கூடுதல் பயிற்சி கிடைக்கும்.

இது தவிர யோகா, சூரிய நமஸ்காரம் போன்ற உடற்பயிற்சிகளை மேற்கொள்ளலாம்.

## அழகுக் குறிப்பு

### முகப்பரு மற்றும் உதட்டு வெடிப்புக்கான டிப்ஸ்



முகத்தில் பருக்கள் வந்தால் அது தழும்பாக மாறி முகத்தினை அசிங்கப்படுத்திவிடும். பருக்கள் தானாகப் பழுக்கும் வரை விட்டால் முழுமையாகப் பழுத்ததும் காய்ந்து, அதன் மேலே படலம்போல் ஒட்டிக்கொண்டிருந்த தோல் வெளிப்பட்டுவிடும். வடு இருக்காது. கைகளால் நெருடிக் கிள்ளிவிடப்பட்ட பருவின் சீழ் அகன்றவுடன் தோலில் ஒரு பள்ளம் ஏற்பட்டு வடுவாக, நிலைத்து விடும்.

அடிக்கடி பருக்களைத் தொடுவதாலும் அழுத்துவதாலும் அவை பெருத்து ஆழமாக ஆகிவிடுவதும் உண்டு.

**டிப்ஸ்:**

குளிக்கும்போது உடலைத் தினமும் ஈரிழைத் துண்டால் அழுத்தித் தேய்த்துக் குளிப்பது நல்லது.

முகத்தையும் ஈரிழைத் துண்டால் தேய்த்துவிடுவதால் வியர்வைக் கோளங்களைச் சுற்றியுள்ள தசைகள் வலுவுற்று துவாரங்கள் அதிகம் பெருக்காமலும், கொழுப்பின் கசிவு, அழுக்கு தங்காமலும் அழற்சி அடையாமலும் பாதுகாக்க முடியும்.

**உதடு வெடிக்கிறதா?**


குளிர்காலம் நெருங்கிவிட்டால் சளி இருமல் போன்ற பிரச்சனைகளால் அல்லல்படுவது போன்று உதடு வெடிப்பு பிரச்சனையாலும் அவதிப்படுவோம். உதடு வெடித்து எரிச்சல் ஏற்படுவதால் விரும்பிய உணவுகளை சாப்பிட இயலாது, அதுவும் காரமான உணவுகளை எடுத்துக்கொள்ளக்கூடாது.

**டிப்ஸ்:**

ஒரு தே.கரண்டி தேங்காய் எண்ணெய்யுடன் 1 தே.கரண்டி உப்பை கலந்து ஒரு கிண்ணத்தில் ஊற்றிக் கொள்ளுங்கள்.

பஞ்சுருண்டையை கொண்டு இந்த கலவையை உதட்டில் தடவிக் கொள்ளுங்கள். பின் உதட்டின் மீது விரல்களை கொண்டு வட்ட வடிவில் ஒரு நிமிடத்திற்கு மென்மையாக மசாஜ் செய்யுங்கள். சிறிது நேரம் கழித்து, உங்கள் உதடு மென்மையாக இருப்பதை உணர்வீர்கள். இறுதியில் ஒரு துணியை கொண்டு உதட்டை துடைத்து விட்டு அதனை காய வையுங்கள்.

### டிசைன்ஸ்



## சிறுவர் முரசு



சிறுவர்களுக்கான குட்டிக் கதை



### எதையும் என்னிடம் தரலாம்

கதவைத் தட்டிய ஒருவர், "உள்ளே ராமு இருக்கிறானா?" என்று குரல் கொடுத்தார்.

"ஐயா! நீங்கள் யார்? எதற்காக ராமுவைத் தேடுகிறீர்கள்?" என்று கேட்டான் கதவைத் திறந்தவன்.

"நான் ராமுவிடம் ஒன்றைத் தர வேண்டும். அதற்காகத்தான் தேடுகிறேன்."

"நான் ராமுவின் உயிர் நண்பன் பாலு. அவனிடம் தருவதை என்னிடம் தாருங்கள். நான் ராமு வந்தவுடன் தந்து விடுகிறேன். "அது நன்றாக இருக்காது. ராமுவிடம் நேராகத் தர வேண்டும். அதற்காகத்தான் வந்தேன். நான் பிறகு வந்து அவனைப் பார்க்கிறேன்" என்றார்.

"எதுவாக இருந்தாலும் என்னிடம் தாருங்கள். நான் மிகவும் பொறுப்பானவன். ராமு வந்தவுடன் நீங்கள் தந்ததை அப்படியே தந்து விடுகிறேன்" என்று வற்புறுத்தினான் அவன்.

"உங்களிடம் அதைத் தரக் கூடாது. அது நன்றாக இருக்காது. நான் சொல்வதைக் கேளுங்கள்" என்றார் அவர்.

"கவலைப்படாமல் என்னிடம் தாருங்கள். நான் அவனிடம் அதை அப்படியே தந்து விடுகிறேன்" என்று வற்புறுத்தினான் அவன். கவலைப்படாமல் என்னிடம் தாருங்கள் என மீண்டும் மீண்டும் வற்புறுத்தினான் அவன்.

"வேறு வழி இல்லை" என்று அவர் அவன் கன்னத்தில் ஓங்கி ஒரு அறை கொடுத்தார்.

கன்னம் வீங்கிய அவன் "எதற்காக என்னை அடித்தீர்கள்?" என்று அழுது கொண்டே கேட்டான்.

"என்னைப் பற்றி ராமு தாறுமாறாகப் பேசிக் கொண்டிருப்பதாகக் கேள்விப்பட்டேன். அவனை ஓங்கி அறைவதற்காகவே இங்கு வந்தேன். நீ ராமுவிடம் என்ன தருவதாக இருந்தாலும் என்னிடம் தாருங்கள். அப்படியே தந்து விடுகிறேன் என்று வற்புறுத்தினாய். அதனால் தான் உன்னை அறைந்தேன். பக்கத்துத் தெரு மணி தந்ததாகச் சொல்லி நான் தந்ததை அவனிடம் தந்துவிடு" என்று கூறி புறப்பட்டார் அவர்.




- பிற பொருள் மேல் ஆசைப்படக்கூடாது -

### சிந்திக்க .. ..

பிறந்த குழந்தை கூட அழுகை என்னும் புரட்சி செய்து தான் தன் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்கிறது.



வீ.ஆர்கீஷனா
தரம் – 04, பாலையூற்று



ஜீ.பிரணவீஸ்வரன்
அருணகிரி வீதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி

## பாடம் : கணிதம்

40 பாடசாலை மாணவர்கள் ஒரு மாதத்தில் பாடசாலைக்கு வந்தமைமை பற்றிய தகவல்களைக் கொண்டு பின்வரும் அட்டவணை அமைக்கப்பட்டுள்ளது. அதில் 0 - 4 என்பது 0 இலும் கூடியதும் 4 இலும் குறைந்தது அல்லது 4 மான பெறுமானம் இடம் பெறும் ஆயிடையாகும்.

| பாடசாலைக்கு வந்த நாட்களின் எண்ணிக்கை (வகுப்பாயிடை) | மாணவர் எண்ணிக்கை (மீடிறன்) | திரள் மீடிறன் |
|---|---|---|
| 0 - 4 | 2 | 2 |
| 4 - 8 | 3 | 5 |
| 8 - 12 | 5 | .... |
| 12 - 16 | 20 | 30 |
| 16 - 20 | .... | 40 |

(1) அட்டவணையிலுள்ள வெற்றிடங்களை நிரப்புக.

(2) அட்டவணையிலுள்ள தகவல்களைக் கொண்டு தரப்பட்டுள்ள ஆள் கூற்றுத் தளத்தின் மீது திரள் மீடிறன் வளையியை வரைக.

(3) திரள் மீடிறன் வளையிற்கேற்ப.

(a) ஒரு மாணவர் பாடசாலைக்கு வரும் இடைய நாட்கள் எத்தனை?

(b) 40 மாணவர்களிடையே குறைவாகப் பாடசாலைக்கு வந்த 25% மாணவர்களை வேறுபடுத்த வேண்டியுள்ளது. அதற்காக எத்தனை நாட்களிலும் குறைவாக வந்தவர்களை தெரிந்தெடுக்க வேண்டும்?

## பாடம் : வரலாறு

01. "நிகழ்காலத்தை விளங்கிக் கொள்வதற்கான சாதனமாகவே கடந்த காலத்தை புரிந்து கொள்ள வேண்டும்". வரலாறு படிப்பதைப் பற்றிய பயன்களைக் குறிப்பிடும் இக்கூற்றினை குறிப்பிட்டவர் யார்?
(1) G.M.ற்றெஅவலியன் (2) ஸ்ரீ ஜவர்லால் நேரு
(2) E:H. கார் (4) அரிஸ்ரோற்றல்

02. வடமேற்கு இந்தியாவிற்கு வந்த ஆதி முஸ்லிம்களின் பிரதானமான குறிக்கோள்.
(1) இந்தியாவிலே செல்வங்களைச் சூறையாடிக் கொண்டு தமது தாயகத்திற்குத் திரும்பிச் செல்வது.
(2) தமது சமயத்தைப் பரப்புவது
(3) அங்கு குடியேற்றங்களை ஏற்படுத்துவது
(4) ஒரு பேரரசினை உருவாக்குவது

03. சீரிய நகரத்தொகுதியில் காணப்படக்கூடிய மிகுந்த சிறப்பான அம்சம்
(1) நகரத்தின் பாதுகாப்பில் அதிக கவனம் செலுத்தியமை
(2) நகரத்தின் உட்புறத்திலே சமய நிறுவனங்களுக்கு இடங்களை ஒதுக்கியமை
(3) சுற்றாடற் பாதுகாப்பை உறுதிபடுத்தும் வகையில் நகர அமைப்பினைத் திட்டமிட்டமை
(4) கலைப்படைப்புகளுக்கு முன்னுரிமை வழங்கியமை.

04. கைத்தொழிற் புரட்சி பற்றிய சரியான கூற்றைத் தெரிவு செய்க
(1) இங்கிலாந்திலே பதினெட்டாம் நூற்றாண்டில் ஆரம்பமாகி பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் முடிவுற்றது.
(2) குடியேற்ற நாடுகளை உருவாக்கிய தேசங்களில் மட்டுமே ஏற்பட்டமை.
(3) ஒரு மட்டுப்படுத்தப்பட்ட சில கைத்தொழில்கள் தொடர்பானதாகவே அது அமைந்தது.
(4) அது உலகளாவிய ரீதியில் இன்றும் நடைபெறுகின்ற ஒரு தொடர்ச்சியான செயன் முறையாகும்.

## பாடம்: பௌதிகவியல்

01. வெப்பக்குடுவையில் உள்ள இரட்டைக் கண்ணாடிப் பாத்திரத்தின் இடையே வெற்றிடம் அமைக்கப்படுவதற்கான காரணம்,
(1) கடத்தல் மூலம் வெப்பம் பரிமாறுவதைத் தடுத்தல்
(2) மேற்காவுகை மூலம் வெப்பம் பரிமாறுவதைத் தடுத்தல்
(3) கதிர்வீசல் மூலம் வெப்பம் பரிமாறுவதைத் தடுத்தல்
(4) கடத்தலாலும் கதிர்வீசலாலும் வெப்பம் பரிமாறுவதைத் தடுத்தல்

02. சுவாலையொன்றின் வெப்ப நிலையை அளக்கப் பயன்படும் வெப்பமானி எது?
(1) டியற்றில் வெப்பமானி (2) இரச வெப்பமானி
(3) உயர் இழிவ வெப்பமானி (4) வெப்ப இணை வெப்பமானி

03. விசையை அளக்கப் பயன்படும் உபகரணம் எது?
(1) மும்மை கோல் தராசு (2) இரசாயனத்தராசு
(3) விற்றராசு (4) இருகோல் தராசு

04. பந்து ஒன்று மேல் நோக்கி எறியப்படுகிறது. பந்தின் இயக்கத்தின் போது மாறாது பெறுமதி இருக்கும் கணியம்
(1) தூரம் (2) இடப்பெயர்ச்சி (3) கதி (4) ஆர்முடுகல்

05. மீண்டும் மின்னேற்றிப் பயன்னடுத்தக்கூடிய மின் கலம் எது?
(1) ஈய அமில சேமிப்புக்கலம் (2) எளிய மின்கலம்
(3) உலர் மின்கலம் (4) மேற்கூறிய யாவும்


06. நாடு முழுவதும் மின்சாரம் அதி உயர் வோல்ற்றளவில் ஊடுகடத்தப்படும் ஏனெனில்.
(1) பிறப்பாக்கிகள் உயர் வோல்ற்றளவிலேயே மின்சாரத்தை பிறப்பிப்பதால்
(2) நீண்ட தூரத்திற்கு இலத்திரன்களைத் தள்ளுவதற்கு உயர் வோல்ற்றளவு தேவைப்படுவதால்
(3) மிகப் பெரிய ஓட்டம் பாய்வதற்கு இது துணைபுரிவதால்
(4) ஊடுகடத்தும் கம்பிகளை ஆட்கள் சேதப்படுத்துவதைத் தடுப்பதற்காக
(5) அதிக வலுவைத் திறனாக அனுப்ப முடியும் என்பதற்காக

07. சில்லுகளைத் தொடுக்கும் பட்டி மூலம் சக்தி ஊடுகடத்தப்படும் தொகுதி
(1) சைக்கிள் (2) மோட்டார் சைக்கிள்
(3) தையல் இயந்திரம் (4) கடிகாரபற்சில்லு தொகுதி

08. திரவத்தின் அமுக்கத்தின் மீது செல்வாக்கு செலுத்தாத காரணி எது?
(1) திரவத்தின் ஆழம் (2) திரவத்தின் கனவளவு
(3) திரவத்தின் அடர்த்தி (4) ஈர்ப்பு ஆர்மூடுகள்

09. கொள்ளளவி பற்றிய பிழையான கூற்று.
(1) இவை மின்னேற்றத்தைச் சேமிக்கப் பயன்படும்
(2) இதனூடாக நேரோட்ட மின் பாயும்
(3) இதனூடு ஆடலோட்ட மின் பாயும்
(4) பொதுவாக மின்சுற்றுக்களில் பயன்படுகிறது.

10. அருகில் உள்ள கோல் சமநிலையில் இருக்க m இன் பெறுமதி




(1) 4 Kg (2) 2 Kg (3) 8 Kg (4) 1 Kg

## பாடம் : தமிழ்மொழியும் இலக்கியமும்

### தமிழ் இலக்கணம் இலக்கணத் தொடர்

#### இணைமொழித் தொடர்கள்.

7. ஆய்ந்து தோய்ந்து
8. ஆறித்தேறி
9. இல்லாத பொல்லாத
10. இன்ப துன்பம்
11. ஈவு இரக்கம்
12. இளைத்துக் களைத்து
13. உண்டு உடுத்து
14. உள்ளும் புறமும்
15. ஊண் உறக்கம்
16. எலும்பும் தோலும்
17. ஏட்டிக்கு போட்டி
18. ஒழிப்பு மறைப்பு
19. 19. ஓட்டமும் நடையும்
20. ஐயந் திரிபு
21. கங்கு கரை
22. கல்வி கேள்வி
23. கரடு முரடு
24. குன்று குழி
25. சீர் சிறப்பு
26. திட்டவட்ட
27. நாடும் நகரும்
28. பாயும் படுக்கையும்
29. வற்றி வரண்டு
30. விருப்பு வெறுப்பு
31. தோட்டந் துறவு
32. கொடுக்கல் வாங்கல்
33. கையுங்களவும்

#### மரபுச்சொற்கள்

உலக வழக்கிலும் செய்யுள் வழக்கிலும் எப்பொருட்டு எச் சொல்லை ஆன்றோர் வழங்கி வந்தனரோ அப்பொருட்டு அச்சொல்லை வழங்குதல் மரபு எனப்படும்.

1. ஆடு – குட்டி
2. குதிரை – குட்டி
3. குரங்கு – குட்டி
4. பூனை – குட்டி
5. மான் - குட்டி கன்று
6. யானை – கன்று குட்டி போதகம்
7. மீன் - குஞ்சு
8. கிளி – குஞ்சு பிள்ளை
9. புலி – குட்டி குருளை
10. கோழி - குஞ்சு
11. அணில் - குஞ்சு பிள்ளை
12. தவளை - குஞ்சு பேதை
13. பாம்பு - குட்டி
14. நெல் - நாற்று
15. பனை – வடலி
16. கமுகு - பிள்ளை
17. தென்னை - பிள்ளை கன்று



தமிழ் இலக்கியத் தொகுப்பு
ஆசிரியர் : A. ரவீந்திரன் B.A.(Hons)Tamil Special Dip.In.Education
மாணவர் ஒளி கல்வி வளாகம்,
திருஞானசம்பந்தர் வீதி, திருகோணமலை

## Grammar

Select the correct phrase from the box and complete the notices.
*the first is done for you.*

Sinharaja rain forest our heritage (1).......b...........

Mahaweli our life blood (2) ..........

Yala sanctuary (3)............ Reduce speed

Public library (4) .......... switch off mobile phones

The sea is deep hear beware of big waves (5).......

Central park (6)....... They look prettier on trees

a. Do not pick flowers
b. Live only your foot
c. Do not disturb
d. Keep the river clean
e. Elephant crossing ahead
f. Swimming is not safe

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்குகிழக்கு...

சபையிடம் நேரடியாக வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கடந்த 16ம் திகதி ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணையாளருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் புரியப்பட்ட குற்றங்களை விசாரிப்பதற்கு சர்வதேசப் பொறிமுறையொன்று தேவையென்பதை அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

அவ்வாறு சர்வதேச விசாரணையைத் தவிர்த்து உள்ளக விசாரணையொன்றை ஏற்படுத்துவதானது 2014ம் ஆணடில் அமெரிக்கா எடுத்த நிலைப்பாட்டிற்கு முற்றுமுழுதான எதிரான நிலைப்பாடாகும்.

சர்வதேசம் அவ்வாறு உள்ளகப் பொறிமுறையின் மீது நம்பிக்கை வைப்பதற்கு நடைபெற்று முடிந்த இரண்டு தேர்தல்களிலும் நிகழ்ந்த மாற்றங்கள் ஊடாக உருவாக்கப் - பட்டுள்ள அரசாங்கம் பாதிக்கப் - பட்டோருக்குத் தீர்வு வழங்கிவிடும் என சர்வதேசம் எதிர் பார்ப்பதாலேயே. ஆனால் பாதிக்கப்பட்டவர்கள் உள்ளக விசாரணைகளில் நம்பிக்கை கொள்ளவில்லை. ஏனெனில் குற்றம் புரிந்தவர்களே குற்றம் தொடர்பான விசாரணைகளைச் செய்து தீர்ப்புக்களை வழங்குவதற்கான வாய்ப்பு அரிதாக இருப்பதுடன் அதற்கான அரசியல் பின்னணியும் சந்தேகத்துக்கிடமாகவே உள்ளது.

ஆயுதப் போர் நிறைவிற்கு வந்த பின்னரும் கூட அவ்வாயுதப் போர் ஏன் ஏற்பட்டதோ அதற்கான அடிப்படைக் காரணிகள் இன்னும் கட்டமைக்கப்பட்ட நிலையிலேயே உள்ளன எனத் தொடரும் கடிதத்தின் நிறைவாக ஐ.நாவின் விசாரணைக் கட்டமைப்பின் ஏற்படுகளுக்கு அமைய, புரியப்பட்ட குற்றங்களின் பாரதூரத்தன்மையைக் கணக்கில் எடுத்து, ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபைக்கு முன் ஸ்ரீலங்காவை நிறுத்த வேண்டும் என்று மதகுருமாரால் கோரப்பட்டுள்ளது.

மதகுருமார்களின் சார்பில் அதி.வணக்கத்திற்குரிய மட்டக்களப்பு மாவட்ட ஆண்டகை கலாநிதி. பொன்னையா ஜோசப் அவர்களின் ஒப்பத்துடன் இக்கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

## அறிக்கையை...

படைகள் மற்றும் சட்டத்தை அமுலாக்கும் அமைப்புக்களின் நடவடிக்கைகளை நாம் கருத்திற்கொள்ள வேண்டும். மேலும் குறித்த காலப்பகுதியில் பல்வேறுபட்ட கடத்தல்கள், கைதுகள், சட்டவிரோதத் தடுத்துவைப்புக்கள், பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் எதிராக நிகழும் பாலியல் வன்முறைகள், சமயக் குழுக்களின் மீதான தாக்குதல்கள் ஆகியன தொடர்கின்றன.

எனினும் இவைதொடர்பான எவ்வித கருத்துக்களையும் ஸ்ரீலங்காவின் வெளிவிவகார அமைச்சர் வெளிப்படுத்தவில்லை. ஆகவே இவ்வாறான உரிமை மீறல்களைச் செய்தவர்கள், அவர்கள் பாதுகாப்புப் படையினராக இருந்தாலும். அவர்களைச் சட்டத்தின் முன் கொண்டுவருமாறு நாம் ஸ்ரீலங்கா அரசை நிர்ப்பந்திக்கின்றோம்.

ஆனாலும் நம்பத்தகு உள்ளக விசாரணையொன்றின் ஊடாக மேற்கூறப்பட்ட சட்டவிரோத நடவடிக்கைகளை முன்னெடுத்த சில பாதுகாப்புத் தரப்பினரைச் சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு பதிலாக அவர்களுக்கு பதவியுயர்வுகள் வழங்கப்பட்டுள்ளமையானது சர்வதெச மனித உரிமைச் சட்ட ஏற்பாடுகளைக் கடமையாக மீறும் நிலையாக உள்ளதுடன் இந்நடவடிக்கைகளின் ஊடாக தற்போதைய அரசும் பாதுகாப்புப் படையினரைப் பொறுப்புக் கூறும் நிலைக்குக் கொண்டுவரத்தக்க அரசியல் மனோநிலையில் இல்லை என்பதையே வெளிக்காட்டுகின்றது.

எனவே ஐ.நா மனித உரிமைச் சபையின் அங்கத்துவ நாடுகள் மனித உரிமை ஆணையாளரால் வெளிப்படுத்தப்பட்டுள்ள அறிக்கையை ஏற்றுக்கொள்வதுடன் அவ்அவ்வறிக்கை முன்மொழிந்துள்ள நடவடிக்கைகளைக் குறித்த காலப்பகுதிக்குள் ஸ்ரீலங்கா அரசு நிறைவேற்றுகின்றதா என்டபதை மெற்பார்வை செய்யும் முயற்சியையும் முன்னெடுக்க வேண்டும் என கேட்டுக்கொள்கின்றோம் என அவர்களது ஊடக வேண்டுகோள் தெரிவித்துள்ளது.

## இரகசியத்....

ஐ.நாவிசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையை ஜெனீவாவிலுள்ள காணாமல் ஆக்கப்பட்டோருக்கான ஐ.நாவின் தொழிற்பாட்டுக் குழு ஆணையாளரிடம் தான் நேரடியாக வேண்டுகோள் விடுத்திருப்பதாக அடிகள் தெரிவித்துள்ளார்.

ஜெனீவாவில் நடைபெற்றுவரும் மனித உரிமைச் சபையின் அமர்வுகளில் வண. யோகேஸ்வரன் அடிகள் கலந்து கொண்டு அங்குள்ள பல ஐநாவின் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தைகளிலும் கலந்துரையாடல்களிலும் ஈடுபட்டு வருகின்றார்.

தடுப்பு முகாமொன்று இருந்ததாக நீதிமன்றத்தில் ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளதால் அதனை மறைப்பது எந்த விதத்திலும் சாத்தியமானதல்ல என்று தெரிவித்த அவர் இலங்கைக்கு மனித உரிமை ஆணையாளர் வருகை தரும் போது காணாமல் ஆக்கப்பட்டோர் தொடாபான மேலதிக அழுத்தங்களை வழங்கும் வாய்ப்பிருப்பதாக தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## மன்னார்....

கொண்டதாகவும், அதன் போது அவர்களுக்கு தேனீர் வழங்கப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த தேனீரை அருந்திய நிலையிலே மன்னார் மறைமாவட்ட ஆயர் திடீர் சுகயீனமடைந்ததாகவும்,மற்றைய அருட்தந்தை உயிரிழந்துள்ளதாகவும் வெளியாகிய செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த செய்தி உண்மைக்கு புறம்பானது.மன்னார் மறைமாவட்ட ஆயர் மற்றும் அருட்தந்தை மன்னார் தள்ளாடி இராணுவ முகாமிற்கு செல்லவில்லை. அவருக்கு ஏற்பட்டது திடீர் சுகவீனம் என்பது வைத்தியர்கள் மூலம் தெரியவந்துள்ளது. அதனால் பக்கவாதம் ஏற்பட்டுள்ளது.

மன்னார் ஆயர் தேனீர் அருந்திய நிலையில் சுகயீனம் எற்பட்டது என்பதனை மன்னார் ஆயர் இல்லம் முற்றாக மறுத்துள்ளது என மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசை தெரிவித்தார்.

## கையெழுத்து....

அறிக்கை பாதிக்கப்பட்ட மக்களின் நம்பிக்கையினை வெல்வது எப்படி என்பது குறித்து கரிசனை கொண்டமைக்கு நன்றி தெரிவிக்கும் அதேவேளை உள்ளகப்பொறிமுறையினை நிராகரித்த ஆணையாளரின் காரணங்களினை வரவேற்றுள்ள சர்வதேச பொறுப்புக்கூறல் பொறிமுறைக்கான தமிழர் செயற்பாட்டு குழு முழுமையான சர்வதேச விசாரணையே தேவை என்பதை மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

ஆணையாளரின் அறிக்கை தொடர்பில் சர்வதேச பொறுப்புக்கூறல் பொறிமுறைக்கான தமிழர் செயற்பாட்டு குழு யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளர் மாநாட்டினை நடாத்தியிருந்தது .

மக்களின் வேண்டுகோள் ஏற்கனவே ஐக்கிய நாடுகள் சபைக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ள நிலையில் அதன் உண்மைப்பிரதிகள் விரைவில் ஐக்கிய நாடுகள் வதிவிடப்பிரதிநிதியிடம் கையளிக்கப்படவுள்ளதாகவும். இதுவரை ஒருலட்சத்தி ஐம்பதினாயிரத்திற்கும் மேற்பட்ட கையெழுத்துக்கள் உள்ளகப்பொறி முறையினை நிராகரித்து சர்வதேச நீதி கோரி பெறப்பட்டுள்ளதாகவும் கையெழுத்து போராட்டத்தில் பங்கெடுத்து சர்வதேசப் பொறிமுறைக்கான அழுத்தங்களை சர்வதேசத்திற்கு வழங்குவதற்கு உதவிய மக்கள் மற்றும் ஊடகங்களுக்கும் நன்றியினை தெரிவித்துக்கொள்கின்றோம் என்றும் அமைப்பின் தலைவர் பேராசிரியர் வி பி.சிவநாதன் தெரிவித்தார்.

ஆணையாளரினால் உள்ளகப் - பொறிமுறையினை நிராகரிப்பதற்காக கூறப்பட்ட காரணங்கள் அழிக்கப்படாமல் தொடர்ந்து நிலைநிறுத்தப்படுகின்ற நிலையில் சர்வதேச நீதிபதிகள் பங்கேற்கும் சிறப்பு நீதிமன்ற முறைமை எந்தவகையிலானது அதன் செயற்பாடுகள் எவ்வாறு இருக்கும் என்று தெளிவுபடுத்தப்படும் வரை தம்மால் அந்த சிறப்பு நீதிமன்ற பொறிமுறை குறித்து கருத்து தெரிவிப்பது இயலாதது என்றும் குறிப்பிடடார்.

மக்களின் போராட்டத்திற்குக் கிடைத்த வெற்றியே உள்ளகப் பொறிமுறை நீக்கம் என்றார் அவர்.

## கிழக்கில்...

அவரது அறிக்கை தற்போதைய சூழலில் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான அமெரிக்க உதவி இறுதிக்கட்டத்தை அடைந்திருப்பதால் அத்திட்டத்தில் மாற்றங்கள் எவற்றையும் செய்யமுடியாத நிலை தோன்றி - யிருப்பதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்திருப்பதாகவும் கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சரின் ஊடக அறிக்கை வெளிப்படுத்தியுள்ளது.

மேலும் எதிர்வரும் காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ள அபிவிருத்தி நடவடிக்கையில் கூடிய கவனம் செலுத்தப்படும் என அமெரிக்க அதிகாரிகள் உறுதி செய்துள்ளனர் என அமைச்சர் அவ்வறிக்கையின் ஊடாகத் தெரியப்படுத்தியுள்ளார்.

ஒப்பந்தம் செய்யப்பட்டதாகக் கூறப்படும் காலப்பகுதியில் திரு. தண்டாயுதபாணி எதிர்கட்சித் தலைவராக கிழக்கு மாகாணசபையில் அங்கம் வகித்திருந்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## காட்டப்பட்ட..

''தற்போது பலரும் குறிப்பிடுவதைப் போல அவர் தன்னைத்தானே சுட்டுக் கொன்றிருப்பதற்குச் சாத்தியங்கள் இல்லை. அவ்வாறு நடைபெற்றிருந்தால் சரியான முறையில் கைரேகை ஆய்வும் மரபணுவியல் ஆய்வும் நடத்தப்பட்டிருக்கும். ஆனால் அவ்வாறு எவையும் இலங்கை அரசினால் நடத்தப்படவில்லை. இந்திய அரசின் அழுத்தத்தை அடுத்து இலங்கையின் உயர்நீதிமன்றம் ஊடாக இந்தியச் சட்டமா அதிபர் அவர்கள் பெற்றுக்கொண்டுள்ள ஆவணமானது விடுதலைப் புலிகளின் தலைவர் கொல்லப்பட்டிருக்க வேண்டும் என்றே சட்டரீதியாகக் கொள்ளப்பட வேண்டும் என்று குறிப்பிடுகின்றதே தவிர மரணச்சான்றிதழ் இன்று வரை வழங்கப்படவில்லை.

ஈழப்போர் 4ல் முள்ளிவாய்க்காலில் மே மாதம் 17ம் திகதி புலிகளின் தலைவர் கொல்லப்பட்டிருக்க வேண்டும். அவர் உயிருடன் இருப்பதற்கான ஆதாரங்கள் எவையுமில்லை என்பதால் அவர் இறந்திருக்க வேண்டும் என அச்சான்றிதழ் தெரிவிப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

விடுதலைப் புலிகளின் தலைவர் அவரது மனைவி மற்றும் மகள் ஆகியோர் வெள்ளைநிற வாகனமொன்று படையினரின் பதுங்கித் தாக்குதலுக்கு உள்ளாகிய வேளையில் கொல்லப்பட்டிருக்கும் வாய்ப்புக்களே அதிகம் உள்ளன என பேராசிரியர் சுப்ரமணியன் தெரிவித்துள்ளார்.

## மைத்திரி -ரணில்...

அத்தகவல் மேலும் தெரிவித்துள்ளது.

இச்சந்திப்பானது 18ம் திகதி சுவிஸ்லாந்தில் நடைபெற ஏற்பாடாகியிருப்பதாகவும் அரசியல் சட்டவாக்க நிபுணரான வெலிக்கல அங்கு சமூகமளிப்பார் என்றும் மேலும் தெரிய வருகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கிய உறுப்பினர்கள் இவ்வாறான உடன்படிக்கைக்குத் தமது எதிர்ப்பை வெளியிட்டுள்ள போதும் இந்நடவடிக்கை முன்கொண்டு செல்லப்படுவதாக ஆங்கில ஊடகமான ஐலண்ட் செய்தி வெளியிட்டுள்ளது.

## கிழக்கிற்கு...

விசாரணைகளை முன்னெடுத்திருந்தது.

அவ்விசாரணைகளின் அடிப்படையில் ஏழு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களில் மூன்று பொதுமக்கள் கொடுத்த தகவலின் அடிப்படையிலேயே ஏனைய நான்கு காவல்துறையினரும் கைதாகினர்.

இக்காவல்துறையினர் வவுனியா மாவட்டப் பிரதிக் காவல் மா அதிபரின் பணிமனையில் பணியாற்றிவந்த நிலையில் விசாரணைகளைத் தடையின்றி முன்னெடுப்பதற்காக அன்றைய வவுனியா மாவட்டப் பிரதிக் காவல் மா அதிபரான திசநாயக்க உடனடியாக நடைமுறைக்கு வரும்வகையில் கிழக்கிற்கு இடமாற்றப் பட்டிருந்தார். இதனையடுதது விசேட விசாரணைக்குழு குறித்த முன்னாள் பிரதிக் காவல் மா அதிபரைக் கைது செய்வதற்கான ஆலோசனையினை சட்டமா அதிபரிடம் கோரியிருந்தது.

அக்கோரிக்கையினை ஏற்று அவரைக் கைது செய்யும் ஆணையைச் சட்டமா அதிபர் வழங்கியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவில் இருந்து தமிழர்களுக்கு.... மக்கள் முரசு

2009 இல் இலங்கையில் இறந்ததும் மனிதம்தான், 1945 இல் அணுக்குண்டால் ஜப்பானில் இறந்ததும் மனிதம்தான்.

ஆனால் ஒப்பீட்டளவில் தமிழர்களாகிய நாம் இழந்தவைக்கு நிகராக மீள் எழுந்து கொண்டோமா? என்று பார்த்தால் ஜப்பானை விட மிக மிகக் குறைவுதான்.

இன்னும் தமிழர்கள் நாம் வரலாறுகளில் இருந்து பாடங்களை படிக்க மறக்கிறோமா? அல்லது எல்லாம் எமக்குத் தெரியும் என்று தவிர்க்கிறோமா? ஜப்பானிடம் உத்வேகம் இருந்தது. உழைப்பை அபரிமிதமாக வைத்திருந்தார்கள். சிந்தனைக்கும் செயல்வீச்சுக்கும் இடைவெளி குறைவாக வைத்துக் கொண்டார்கள். நிமிர்ந்தார்கள். இன்றைய உலகை ஏதோ ஒருவகையில் ஆள்கிறார்கள். ஆனால் தமிழர்களாகிய நாம் போர் முடிந்து 6 வருடங்களுக்கு மேலாகியும் என்ன சொல்லிக் கொண்டிருக்கிறோம் என்றால் "அரசாங்கம் உதவி செய்யல்ல", "அமைச்சர்மார் கவனிக்கிறார்கள் இல்ல", தொண்டு நிறுவனங்கள் வருகிறார்கள் இல்லை, வீடு கட்டித் தருகிறார்கள் இல்லை என்று இலவசங்களைத் தான் எதிர் பார்க்கிறோமே தவிர வேறு எதனையும் பயனுள்ளதாக செய்யவில்லை.

சில வருடங்களுக்கு முன் ஒரு சிங்கள இராணுவ அதிகாரி சொன்னது எனக்கு இன்றும் நினைவுக்கு வருகிறது இனி நீங்கள் எல்லாரும் ஒருபொழுதும் நல்லவைக்காக ஒற்றுமையாக இருக்க மாட்டீர்கள், ஆனால் நுளம்புவலை (mosquito net) கொடுக்கிறார்கள் என்றால் அனைவரும் ஒன்றாக அடித்து பிடித்து ஓடிவருவீர்கள் என்பதுதான் அந்த அதிகாரி சொன்னதன் சுருக்கம். அவன் சொன்னதை அப்படியே தமிழில் எழுதவும் முடியாது.

இந்த ஜப்பான் மீதான அமெரிக்காவின் அணுக்குண்டு வீச்சுடன் ஜப்பான் சரணடைந்தது. அதனுடன் 2ம் உலகயுத்தம் முடிவுக்கும் வந்தது. ஆனாலும் அமேரிக்கா தனது இரத்தக் கறைகளை கழுவ விருப்பம் கொள்ளவில்லை.

ஒரு குட்டிக் கதையுண்டு. ஒரு சிறுவன் கடவுளிடம் மன்றாடினான். கடவுளே! மூன்றாம் உலக யுத்தம் என்கின்ற ஒன்று எப்பொழுதுமே நடக்கக் கூடாது என்று. அவனது நல்ல எண்ணம் கண்டு வியந்த கடவுள், அவன் முன் தோன்றி கேட்டாராம், சிறுவனே! அப்படியொரு நல்ல எண்ணம் உனக்கு இந்த சின்ன வயதில் தோன்றியதை நினைத்து மகிழ்கிறேன் என்றாராம். அதற்கு கடவுளை நோக்கி சிறுவன் சொன்னானாம் அதெல்லாம் ஒன்றுமில்லை, 1ம், 2ம் உலக யுத்தம் தொடர்பில் பாடம் படித்தே படிப்பு வெறுத்திட்டு... அதிலயும் 3ம். உலகயுத்தமும் நடந்து விட்டால் படிக்க இன்னும் அதிகம் சேர்ந்திரும் என்றானாம். அந்த சிறுவன் அமெரிக்கனாக இருக்கவே மாட்டான்.

உண்மைதான், நாமும் அப்படி நினைத்திருக்கின்றோம் அல்லவா? முதலாம் உலக யுத்தத்தை விட 2ம். உலக யுத்தம் இந்த உலகத்திற்கு விட்டுச் சென்றவையும், சொல்லிச் சென்றவையும், ஆரம்பித்து வைத்துவிட்டுச் சென்றவையும் அதிகம் தான். அவற்றைதான் இன்று பார்த்துக் கொண்டு கடந்து செல்லலாம்.

இந்த உலகில் ஏதாவது நிகழ்வு, அல்லது அசைவு இடம்பெற்றால், விளைவு என்கின்ற ஒன்று நிச்சயம் இருந்தே தீரும். அந்த விளைவு கண்ணுக்கு புலப்படாமலும் இருப்பதுண்டு. இதனை விஞ்ஞானமும், மெய்ஞானமும் சொல்லியிருக்கின்றன. நிரூபித்தும் இருக்கின்றன. இந்த 2ம் உலக யுத்தத்தால் உலகில் ஏற்பட்ட அழிவுகள் ஒரு பக்கம் இருந்தாலும், பயனுள்ள விடயங்கள் ஏராளம் நிகழ்ந்துதான் இருக்கிறது. அதிலும் அமெரிக்காவில் இருந்து எழுந்த சிலவற்றை நாம் பார்க்கலாம்.

அப்படி என்னதான் இருக்கிறது என்கிறீர்களா?... ஐக்கிய நாடுகள் சபை (United Nations) என்கின்ற ஒன்று உருவாக்கப் பட்டதில் அமெரிக்காவிற்கும் அதிக பங்குண்டு. தன்னை இனி நல்லவனாக காட்டவும், உலகின் துயரங்களை தீர்க்க வந்த இரட்சகனாக தன்னைக் காட்டவும் அப்படி ஒரு அமைப்பு அதற்குத் தேவைப்பட்டதே உண்மையாகும். அடுத்து கண்ணுக்கு புலப்படாமல் வளர்ந்த இரசியாவுடனான பனிப்போர். யார் உலகின் வல்லரசு? இந்த பனிப்போரும் உலகத்திற்கு பல நன்மைகளை விட்டுச் சென்றது. ஆதலால் பனிப்போரும் பயனுள்ளது என்றே சொல்கிறார்கள். அது தொடர்பாக வரும் அத்தியாயங்களில் பார்க்கலாம்.

அடுத்து அணுவை பயனுள்ள வழியில் பயன்படுத்த உலகளவில் ஏற்பட்ட நல்ல மாற்றம். அதன் அடிப்படை அமெரிக்காவால் ஏற்பட்டது என்பது தான் தவிர்க்கமுடியாத உண்மை ஆகும்.

ஜெர்மன் தேசத்திலிருந்து அமெரிக்காவால் களவாடப்பட்டு, பயனுள்ள வகையில் தரமேம்படுத்தி பயன்படுத்தப்பட்ட விடயம் "calculating ballistics". அதாவது உந்து விசைப் படை சார்ந்த சமன்பாடு தந்த பெறுபேறு ஆகும்.




---

# மருத்துவ முகாம்

**கதிரவன்**



திருகோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவை வசதிகுறைந்த மக்களின் தேவை கருத்தி பின்தங்கிய கிராமங்களில் மருத்துவ முகாம்களை நடத்தும் வேலைத்திட்டம் ஒன்றை தொடங்கி உள்ளது. இதன் முதலாவது முகாம் ஞாயிற்றுக்கிழமை 20.09.2015 கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள சுங்கான்குழி கிராமத்தில் மேற்கொள்ளப்பட உள்ளது. இதனைத் தொடர்ந்து ஏனைய கிராமங்களுக்கும் இப்பணி விஸ்தரிக்கப்பட உள்ளது. முதலாவது மருத்துவ முகாம் சுங்கான்குழி அ.த.க.பாடசாலை மண்டபத்தில் நடத்தப்பட உள்ளதாக பேரவையின் பொதுச் செயலாளர் செ.விஜயசுந்தரம் தெரிவித்தார்.

# இரத்த தான முகாம்

**சேனையூர் நிருபர்**





திருகோணமலையில் பல சமூக சேவைகளை முன்னெடுத்து வரும் சிவநயனி நற்பணி மன்றத்தின் ஏற்பாட்டில் மாபெரும் இரத்ததான முகாம் 20.09.2015 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு திருகோணமலை விக்னேஸ்வரா மகாவித்தியாலய மண்டபத்தில் இடம்பெறும்.

இந்த இரத்ததான முகாமில் சிவநயனி நற்பணி மன்றத்தின் தலைவர் சி. ராம்கார்த்திவன், கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஜெ. ஜெனார்த்தனன் மற்றும் பல்கலைக்கலக மாணவர்கள் என பலர் கலந்து கொள்ள இருக்கின்றனர்.

# விநாயகர் சதுர்த்தித் திருவிழா

விநாயகர் சதுர்த்தி இந்துக்களால் (17.09.2015) அன்று உலகெங்கும் விமர்சையாக அனுஸ்டிக்கப்பட்டது. திருகோணமலை ஆலடி விநாயகர் ஆலயத்தில் சிறப்பு பூசை வழிபாடுகள் நடத்தப்பட்டது. புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மஞ்சம் ரதத்தில் விநாயகர் பவனி வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார்.

அத்துடன் 38 வருடகாலமாக வெளியில் பவனி வராத டொக்யாட் பிள்ளையார் பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானத்திற்கு வந்திருந்தமை வரலாற்று அம்சமாகும்.



# "மகுடம்" அழைப்பிதழ்

ஒவ்வொரு மாதாமும் பௌர்ணமி தினத்தில் நடைபெறுகின்ற நீங்களும் எழுதலாம் நிகழ்வு இம்முறை மகுடம் குழுவினருடன் இணைந்து எதிர்வரும் 20.09.2015 அன்று நடாத்தவுள்ளது.

இந் நிகழ்வில் மூன்றாவது பிரமிள் சிறப்பிதழின் அறிமுக விழா இடம் பெறவுள்ளது.

இது மாலை 4 மணியளவில் திருகோணமலை ஜெசியூட் அக்கடமியில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. அனைவரையும் அன்புடன் அழைக்கின்றனர் நீங்களும் எழுதலாம் வாசகர் வட்டத்தினர்.

"நீங்களும் எழுதலாம்" வாசகர் வட்டம் நடாத்தும்

## மகுடம்

**மூன்றாவது ஆண்டு மலர்**

**பிரமிள் சிறப்பிதழ்**

**அறிமுக விழா**

காலம் : 20.09.2015 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : மாலை 4.00 மணி
இடம் : Jesuits Academy மண்டபம், உட்துறைமுக வீதி, (சென். ஜோசப் கல்லூரி பின்புறம்)

**தலைமை**
திரு. S.R. தனபாலசிங்கம்
(ஆசிரியர் - நீங்களும் எழுதலாம்)

**பிரதம அதிதி**
திரு. ஆ. ஜெகசோதி
(பிரபல சிரேஷ்ட சட்டத்தரணி)

**முதல் பிரதி பெறுபவர்**
திரு. கோ. செல்வநாயகம்
(கோட்டக்கல்வி அதிகாரி – குச்சவெளி)

**இரண்டாம் பிரதி பெறுபவர்**
திரு. தி. திருச்செந்திநாதன்
(பிரபல சட்டத்தரணி)

**விமர்சனவுரை**
திருமலை நவம்
(எழுத்தாளரும், பிரபல சிரேஷ்ட ஊடகவியலாளரும்)

**வரவேற்புரை**
செல்வி. வே. சசிகலா
(நீங்களும் எழுதலாம் வாசகர் வட்டம்)

**நன்றியுரை**
கவிஞர். வி. மைக்கல்கொலின்
(ஆசிரியர் - மகுடம்)

**சிறப்பதிதிகளும் சிறப்புப்பிரதி பெறுவோரும்**

- திரு. நா. காளிராஜா (அதிபர், பாரதி தமிழ் வித்தியாலயம் - வரோதய நகர்)
- திரு. இ. கருணாகரன் (முன்னாள் அதிபர்)
- திரு. ஓ. குலேந்திரன் (ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர்)
- திரு. வே. சதீஸ்குமார் (பொறியியலாளர்)
- திரு. A.C. ரகுநாதன் (பிரதம கணக்காளர், விவசாய அமைச்சு)
- திரு. S. கலைச்செல்வன் (ஊடக இணைப்பாளர் கிழக்கு மாகாண கல்வி அமைச்சு)
- திரு. சூசை எட்வேட் (பிரபல எழுத்தாளர்)
- திரு. ச. அருளானந்தன் (கேணிப்பித்தன்) (கவிஞரும், பிரபல எழுத்தாளரும்)
- திரு. திருமலை சுந்தா (மூத்த எழுத்தாளர்) (அம்மா பதிப்பகம்)
- கவிஞர். ஷெல்லிதாசன் (மூத்த எழுத்தாளர்)
- கவிஞர் க. கோணேஸ்வரன் (சிரேஷ்ட ஊடகவியலாளர்)
- கவிஞர். நிலாவெளியூர் கெஜதர்மா
- திரு. கனகசபை தேவகடாட்சம் (பிரபல எழுத்தாளர்)
- கலாபூஷணம் மூதூர் முகைதீன்
- கலாபூஷணம் ஏ.எம்.எம். அலி
- ஜனாப். முஹம்மட் ராபி (எழுத்தாளர்)
- திரு. சே. ஸ்ரீஸ்கந்தராசா (முன்னாள் உபதலைவர், திருமலை நகரசபை)
- கவிஞர். தில்லைநாதன் பவித்திரன் (செயற்பாட்டாளர், பகிர்வு இலக்கிய அமைப்பு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூர் விளையாட்டு செய்திகள்

# விளையாட்டு முரசு

## 2016ம் ஆண்டிற்கான தேசிய விளையாட்டுப் போட்டிகள்

2016ம் ஆண்டு தேசிய விளையாட்டு விழா, யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளமையால் அதில் அதிகளவான வடக்கு மாகாண வீர, வீராங்கனை பங்குபற்ற வைப்பதற்கான ஏற்பாடுகள் செய்வது தொடர்பில் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் அலுவலகத்தில் கடந்த வியாழக்கிழமை கலந்துரையாடப்பட்டது. வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வடமாகாண கல்வி, விளையாட்டு, மற்றும் பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் ஆர்.ரவீந்திரன் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் வடமாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலுமுள்ள விளையாட்டுச் சங்கங்களின் தலைவர்கள் மற்றும் செயலாளர்கள் கலந்துகொண்டனர். தேசிய விளையாட்டு விழாவுக்காக வீர, வீராங்கனைகளின் திறன்களை வளர்த்தெடுத்தல், அதிகளவான வீர, வீராங்கனைகளை பங்குபற்றச் செய்தல் போன்ற விடயங்கள் தொடர்பில் இதில் கலந்துரையாடப்பட்டது.

## மல்யுத்தத்தில் 5 தங்கப் பதக்கங்களை வென்றது சிவானந்தா தேசிய பாடசாலை



பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட மல்யுத்தப்போட்டியில் மட்டக்களப்பு சிவானந்தா தேசிய பாடசாலை அணி ஐந்து தங்கப்பதக்கங்களைப் பெற்று மட்டக்களப்புக்கும் கிழக்கு மாகாணத்திற்கும் பெருமை சேர்த்துள்ளது.

கடந்த இரு நாட்களாக பல பாடசாலைகளுக்கு இடையே கொழும்பில் நடைபெற்ற இந்த போட்டிகளில் சிவானந்தா தேசிய பாடசாலையினை சேர்ந்த மாணவர்கள் ஐந்து முதல் இடங்களைப் பெற்றுள்ளனர்.

அத்துடன் மட்டக்களப்பு இந்துக்கல்லூரி மாணவர்கள் மூன்று தங்கப்பதக்கங்களைப்பெற்று மட்டக்களப்புக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

## ஒலிம்பிக் போட்டிகளுக்கான வாக்கெடுப்பு

புடாபாஸ்ட், ஹம்பேர்க், லொஸ் ஏஞ்செல்ஸ், பரிஸ், ரோம் ஆகிய ஐந்து நகரங்களும், 2024ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளை நடாத்துவதுக்கு போட்டியிடும் நகரங்களாக சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. 2017ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் பெருவின் லிமாவில் இடம்பெறவுள்ள வாக்கெடுப்பின் போது சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி போட்டியை நடாத்தும் நகரத்தை தெரிவு செய்யும். 2024ம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளை நடாத்தும் நகரங்கள் இறுதி வாக்கெடுப்பு வரை செல்வதை உறுதிப்படுத்தும் பொருட்டு கடந்த ஓகஸ்ட்டில் சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி விதிகளில் மாற்றத்தை கொண்டுவந்திருந்தது. முன்னர் சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி, விண்ணப்பிக்கும் நகரங்களில் இருந்து தெரிவு செய்து, அதன் பின்னரே 100 உறுப்பு நாடுகளின் வாக்கெடுப்புக்கு செல்வதாக இருந்தது.

## றக்பி தொடர் ஆரம்பம்

RUGBY WORLD CUP 2015

எட்டாவது உலக கிண்ண ரக்பி தொடர் இங்கிலாந்தில் ஆரம்பமாகவுள்ளது. டுவிக்கினமில் நடைபெறும் முதலாவது போட்டியில் இங்கிலாந்து அணியை பிஜி அணி எதிர்கொள்ளவுள்ளது. 2003ம் ஆண்டு சாம்பியன் பட்டத்தை வெற்றிகொண்டதை போல மீண்டும் வெற்றியை உறுதிசெய்யும் நோக்குடன் இங்கிலாந்து களமிறங்கவுள்ளது.

குழு ஏ யில் இங்கிலாந்து மற்றும் பிஜியுடன். பலம்வாய்ந்த அவுஸ்திரேலியா, வேல்ஸ் அணிகளும் உருகவே அணியும் இடம்பெற்றுள்ளன. நடப்புச் சாம்பியன் நியூசிலாந்து அணி குழு சி யில் இடம்பெற்றுள்ள அதேவேளை ஆஜென்ரினா, தொங்கா, ஜோர்ஜியா, மற்றும் நமிபீய அணிகளும் இந்த குழுவில் பெயரிடப்பட்டுள்ளன. 20 அணிகள் பங்கேற்கும் 8 ஆவது உலக கிண்ண ரக்பி தொடரின் போட்டிகள் இங்கிலாந்திலுள்ள பல்வேறு விளையாட்டரங்குகளில் எதிர்வரும் ஒக்டோபர் 31 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன.

## எதற்காக நாம் கெஞ்ச வேண்டும்?

### *ஷாகிட் அப்ரிடி*



இந்தியா அணிக்கு எதிராக கிரிக்கெட் விளையாட நாம் ஏன் அவர்களிடம் கெஞ்ச வேண்டும்? என்று பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர் ஷாகித் அப்டிரி கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்தியா- பாகிஸ்தான் அணிகளுக்கு இடையில் 2015-2023ம் ஆண்டுகளுக்கிடையே 6 தொடர்கள் வரை விளையாட ஒப்பந்தம் செய்யப்பட்டன. இந்நிலையில் இந்திய எல்லைப் பகுதியில் பாகிஸ்தானின் தொடர் அத்துமீறல் காரணமாக இந்தியா, பாகிஸ்தான் அணியுடன் விளையாட மறுத்து விட்டது.

மேலும், இந்திய எல்லைப் பகுதியில் தாக்குதலை நிறுத்தினால் மட்டும் தான் உங்களுடன் கிரிக்கெட் விளையாடுவது பற்றி யோசிக்க முடியும் என்று இந்திய கிரிக்கெட் வாரியம் திட்டவட்டமாக அறிவித்து விட்டது.

இருப்பினும் பாகிஸ்தான் வாரியம், டிசம்பரில் இந்திய அணியுடன் போட்டித் தொடரை நடத்த தொடர்ந்து யோசித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## *மஹேலவும் கொலிங்வூடும் இணைந்தனர்*



இங்கிலாந்து அணியின் பயிற்றுவிப்பாளர் குழாமில், இலங்கை அணியின் முன்னாள் தலைவர் மஹேல ஜெயவர்தனவும் இங்கிலாந்து அணியின் முன்னாள் தலைவர் போல் கொலிங்வூடும் இணைந்துகொண்டுள்ளனர்.

ஐக்கிய அரபு இராச்சியத்தில் இடம்பெறவுள்ள பாகிஸ்தானுக்கெதிரான தொடரின் போது, பயிற்சிப் போட்டிகளிலும் முதலாவது டெஸ்ட் போட்டியின் போதும் மஹேல, இங்கிலாந்து அணிக்குப் துடுப்பாட்ட ஆலோசகராகச் செயற்படவுள்ளார். அதனைத் தொடர்ந்து, அத்தொடரில் ஒருநாள் சர்வதேசப் போட்டிகள், இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டிகள் ஆகியவற்றில், போல் கொலிங்வூட் துடுப்பாட்ட ஆலோசகராகச் செயற்படவுள்ளார்.

## சோனியா தான் எனக்கு ஊக்கம்

இந்தியாவின் முன்னணி டென்னிஸ் வீராங்கனை சானியா மிர்சா, மார்டினா ஹிங்கிசுடன் (சுவிட்சர்லாந்து) இணைந்து விம்பிள்டன் போட்டியில் இரட்டையர் பிரிவில் பட்டம் வென்று சாதனை புரிந்தார்.

மேலும் அமெரிக்க ஓபனிலும் இந்த ஜோடி சாம்பியன் பட்டம் வென்று அசத்தியது. இந்நிலையில் சானியாவின் வெற்றிகள் பாகிஸ்தான் கிரிக்கெட்டில் தனக்கு சாதிக்க ஊக்கம் அளிப்பதாக இருக்கிறது என்று அவரது கணவர் சோயிப் மாலிக் தெரிவித்துள்ளார்.



## சான் மரீனோ கிராண்பீரீக்ஸ்



வலன்டினோ ரோசி, மோட்டோஜிபியில் யமகா அணி வீரரான ஜோர்ஜ் லொறின்ஸோவுக்கு எதிரான புள்ளி வித்தியாசத்தை 23 ஆக அதிகரித்துக்கொண்ட போதும், அவரது உத்தித் தவறினால் இப்போட்டியில் ஸ்பெயினின் மார்க் மார்க்கஸ் வெற்றி பெற்றுள்ளார்.

கிழக்கு இத்தாலியிலுள்ள மிசானோவிலுள்ள மார்க்கோ சிமோன்செல்லியில் உள்ள அரங்கிலுள்ள, சாதனை எண்ணிக்கையான 92,000 பேர் தமது நாட்டு ரோசிக்கு ஆதரவளித்திருந்த நிலையில், அவர் முன்னணியில் இருந்த போதும், ஈரமாக, உலர்ந்து இருந்த திடலில் இரண்டு தடவைகள் நிறுத்தியதன் காரணமாக அவர் மூன்றாமிடத்தையே பெற்றார்.

## டென்னிஸ் சம்பியனானார் ஜோகோவிச்

அமெரிக்க பகிரங்க டென்னிஸ் தொடரின் ஆடவர் ஒற்றையர் பிரிவு சாம்பியன் பட்டத்தை செர்பியாவின் முதல்நிலைவீரர் நொவெக் ஜோகோவிச் வெற்றிகொண்டுள்ளார்.

நியூயோர்க்கில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் சுவிட்ஸர்லாந்தின் முன்னணி வீரர் ரொஜர் பெடரரை, 3 க்கு 1 என்ற செட் கணக்கில் வெற்றிகொண்டு, 10 ஆவது கிரான்ஸ்லாம் பட்டத்தை அவர் வெற்றிகொண்டுள்ளார்.

ரொஜர் பெடரருக்கு ஆதரவான அதிகளவு ரசிகர்களுக்கு மத்தியில் நொவொக் ஜோகோவிச் இந்தப் போட்டியில் வெற்றிபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## குத்துச் சண்டை வீரர் தளத்தில் மரணம்

அவுஸ்திரேலியாவின் டேவே ப்ரௌனெவுக்கும், பிலிப்பைன்சின் கார்லோ மகாலிக்கும் இடையில் கடந்த வெள்ளிக்கிழமை குத்துச்சண்டை போட்டி நடைபெற்றது. இதில் கார்லோ குத்தியதில் டேவே மயக்கமடைந்தார். மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று தீவிர சிகிச்சை அளிக்கப்பட்ட போதும் பலனின்றி 15.09 அன்று மரணமடைந்தார். இதனைத்தொடர்ந்து குத்துச்சண்டைக்கு தடை விதிக்க வேண்டும் என அவுஸ்திரேலிய மருத்துவக் கழகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க நிதிக்கான பாடசாலைத் தேர்வில் இனவிகிதாசாரம் கடைப்பிடிக்கப்படவில்லை

**எனக்கும் அதற்கும் சம்பந்தமில்லை - கிழக்கின் கல்வி அமைச்சர் தெரிவிப்பு**



கிழக்கு மாகாணத்தில் அமெரிக்க நிதியுதவியின் கீழ் அபிவிருத்தி செய்யப்படவுள்ள பாடசாலைகளைத் தேர்வு செய்யும் போது இனவிகிதாசாரம் பின்பற்றப்படவில்லை என்பதைக் கிழக்கு மாகாணக் கலி அமைச்சர் தண்டாயுதபாணி ஒத்துக்கொண்டுள்ளார்.


எனினும் அவ்வாறு பாடசாலைகளைத் தேர்வு செய்தது சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்பு நடைபெற்றதாகவும் அக்காலப்பகுதியில் தான் அமைச்சராகப் பொறுப்பேற்கவில்லை என்றும் தெரிவித்தள்ளார்.

எனினும் இவ்விடயம் தொடர்பாக அமெரிக்க அதிகாரிகளுடன் மாகாண முதலமைச்சர், மாகாண ஆளுனர் மற்றும் மாகாணக் கலிவ் அதிகாரிகள் உள்ளிட்ட குழுவினர் பேச்சுக்களை நடாத்தியிருப்பதாகத் தெரிவித்துள்ள 17


# மன்னார் ஆயர் தொடர்பான செய்தி பொய்!

மன்னார் மறைமாவட்ட ஆயர் அவர்கள், மன்னார் தள்ளாடி இராணுவ முகாமிற்குச் சென்று தேனீர் அருந்திய நிலையிலே அவர் திடீர் உபாதைக்கு உள்ளாகியதாக வெளியாகியுள்ள செய்தியில் எவ்வித உண்மைகளும் இல்லை என மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசை தெரிவித்துள்ளார். இவ்விடயம் தொடர்பாக அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

மன்னார் மறைமாவட்ட ஆயர் அவர்களும், அருட்தந்தை ஒருவரும் கொழும்புக்குச் செல்லும் போது மன்னார் தள்ளாடி இராணுவ முகாமில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து 17



## கிழக்கிற்கு மாற்றப்பட்ட காவல்துறை அதிகாரி கைது?



வவுனியாவில் இருந்து கிழக்கிற்கு இடமாற்றம் செய்யப்பட்ட காவல்துறையின் உயரதிகாரி ஒருவரைக் கைது செய்யும் ஆணையைச் சட்டமா அதிபர் வழங்கியுள்ளார்.

வவுனியா மாவட்ட் முன்னாள் பரதிக் காவல்மா அதிபர் யு.கே. திசநாயக்கவைக் கைது செய்யும் நடவடிக்கைகளைக் காவல்துறை முன்னெடுத்துள்ளது.

வவுனியா மாவட்டத்தில் சட்டவிரோதமாகப் புதையல் தோண்டிய குற்றச்சாட்டின் பேரிலேயே இக்கைது ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த மூன்ற மாதங்களுக்கு முன்னர் நடைபெற்றதாக கூறப்படும் இச்சட்விரோத புதையல் அகழ்வின் தகவல்கள் வெளியானதை அடுத்து காவல்துறையின் விசேட பிரிவு காவல்மா அதிபரின் பணிப்புரைக்கு அமைய 17

## அறிக்கையை ஏற்றுக்கொண்டு ஸ்ரீலங்கா நடைமுறைப்படுத்துவதை உறுதிப்படுத்துங்கள்

ஸ்ரீலங்கா தொடர்பாக முன்மொழியப்பட்ட அறிக்கையினை ஏற்றுக்கொள்வதுடன் அவ்வறிக்கையின் சிபாரிசுக்களை ஸ்ரீலங்கா அரசு ஏற்று நடைமுறைப்படுத்துவதை உறுதிப் படுத்துங்கள் என ஐக்கிய நாடுகள் மனித உரிமைச்சபையின் உறுப்பு நாடுகளிடம் மனித உரிமை ஆர்வலர்களும் அமைப்புக்களும் வேண்டுகோள் விடுத்துள்ளன.

இலங்கையைத் தளமாகக் கொண்டியங்கும் முப்பத்தியொன்பது சிவில் சமூக அங்கத்-தவர்களும் பதின்நான்கு மனித உரிமை நிறுவனங்களும் இவ் வேண்டுகோளை முன்வைத்துள்ளன.

“ 2015 ஜனவரி மாதம் தொடக்கம் நிகழும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான ஆழ்ந்த கரிசனையை நாம் கொண்டிருக்கின்றோம். அவற்றுள் முக்கியமாக புலனாய்வாளர்களின் கண்காணிப்பு நடவடிக்கைகள், தமிழ்ப் பொதுமக்களை, மனித உரிமை பாதுகாவலரை, ஊடகவியலாளர்களை, சிவில் சமூக அமைப்புக்களைத் துன்புறுத்தி இரண்டாம் ...க்குத் தள்ளும் அரச பாதுகாப்புப் 17

## சிறு விளம்பரங்கள்

### கடையும் வீடும் வாடகைக்கு

கடல்முக வீதிச் சந்திக்கு அருகாமையில் கடல்முக வீதிநோக்கிய முகப்பைக்கொண்ட இரண்டு கடைகளும் அதற்கு மேலுள்ள வீடும் வாடகைக்கு விடப்படும். தொடர்பு 0777 114884

### வேலை வெற்றிடம்

திருகோணமலையின் நகரப்பகுதியில் அமைந்துள்ள பிரபல காகிதாதிக் கடையில் வேலை செய்வதற்கு இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். தொடர்பு 0777 890915

**தமிழர்களின் தேசிய இன அடையாளங்களை அழிக்கும் செயற்பாடே தமிழர் தாயகத்தில் நிகழ்கின்றது. அதனை மறைக்கவே தமிழர்களுக்கு அதிகாரங்களைப் பகிர இணங்குவதாக காட்டப்படுகிறது**

"தமிழ்த் தேசம் நோக்கிப் பயணிப்போம்"




**மைத்திரி-ரணில் உடன் உடன்படிக்கையை மேற்கொள்ளும் த.தே.கூ - உ.த.பே உடன்**

# மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையமும் இணைவு

ஸ்ரீலங்காவின் அரச தலைவர்களுடன் ஒரு உடன்பாட்டிற்கு வரும் வகையிலான நடவடிக்கைத் திட்டமொன்றை முன்னெடுத்தள்ள உலகத் தமிழர் பேரவை மற்றும் தமிழத் தேசியக் கூட்டமைப்புடன் இயைந்த செயலாற்றப் பொவதாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தெரிவித்தள்ளது என ஆங்கில ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இத்திட்டத்திற்காக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் சிரேட்ட ஆய்வாளர் அசங்க வெலிகள இணைந்துகொள்வார் எனத் தெரிவிக்கப்பட்டள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், உலகத்தமிழர் பேரவையின் தந்திரோபாய முன்முயற்சிப் பணிப்பாளர் சுரேன் சுரேந்திரன் மற்றும் பெரவையின் தலைவர் வண. இம்மானுவல் அடிகள் ஆகியோர் கடந்த 18ம் திகதி சந்திப்பொன்றில் ஈடுபடுவர் என 17



(நன்றி - தமிழ்மிரர்)

இவ்வாராந்தப் பத்திரிகை மலைமுரசு நிறுவனத்தினால் இல.159 ஏ, கடல் முக வீதி, திருகோணமலையில் இருந்து 19.09.2015ல் அச்சிட்டு வெளியிடப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org